அம்ருதா

Amrudha Tamil Monthly

Volume 21 Issue 1
ஆண்டு 21 இதழ் 1
August 2026 Rs.30
ஆகஸ்ட் 2026 ரூ.30








செழியன் எனும் கலைத்தவம்
சொர்ணவேல்

என் தமிழ், எனது மண், எங்கள் மக்கள்
தமிழ்நதி

கேபிரியல் கார்சியா மார்க்வெஸ் நேர்காணல்
தமிழில்: ஸிந்துஜா

ஜனநாயகத்தின் மரணம்

பிரபு திலக்


அதிசய கோயில்கள்
ஆன்மிக தகவல்கள்
பரவசமூட்டும் கதைகள்
வார, மாத ராசிபலன்
வாரந்தோறும்
பரிசு
தினமலர்
ஆன்மிக மலர்
பொங்கல் ஸ்பெஷல்
தினமலர்
ஆன்மிக மலர்
32 பக்க புத்தகம்
வெள்ளிதோறும் நாளிதழுடன்

ஆண்டு 21 இதழ் 1

அம்ருதா

நவீன கலை இலக்கிய சமூக மாத இதழ்

ஆகஸ்ட் - 2026 விலை ரூ. 30

அம்ருதா
#5, 5வது தெரு, சோமசுந்தரம் அவென்யூ
சக்திநகர், போரூர், சென்னை-600116
தொலைபேசி: -044-2435 3555, 94440 70000
மின்னஞ்சல்: info.amrudha@gmail.com
இணையம்: www.amruthamagazine.com

Published by Prabhu Thilaak
No. 5, 5th Street
Somasundaram Avenue
Shakthi Nagar, Porur
Chennai - 600 116

And Printed by A. Chandran on behalf of AMRUDHA
Ayyanar Offset, No. 10 Subbarao Nagar
Choolaimedu, Chennai - 600 094

Owner and Editor: Prabhu Thilaak

• அம்ருதா, ஒயிட் லோட்டஸ் தனியார் குழுமத்தின் ஓர் அங்கம்

இந்த இதழில்...

ஜனநாயகத்தின் மரணம்

● பிரபு திலக்

'நீட் தேர்வு' முறைகேடுகளுக்கு எதிராக மாணவர்கள் திரண்ட தலைநகர் டெல்லியின் ஜந்தர் மந்தர் வீதிகள், இன்று, இந்தியாவின் எதிர்காலத் தூண்களாக விளங்கப்போகும் இளந்தலைமுறையினரின் கண்ணீரையும் அவர்கள் சிந்திய குருதியையும் தாங்கி நிற்கும் சாட்சியங்களாகவும் மாறியிருக்கின்றன. தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து அமைதியான முறையில் போராடிய நமது மாணவர்கள் என்ன தவறு செய்தார்கள்? நியாயமான ஒரு கல்வி முறையைக் கேட்க அவர்களுக்கு உரிமை இல்லையா?

'நீட்' வருவதற்கு முன்பிருந்தே அதன் பாதகங்களை விளக்கத்துடன் எடுத்துவைத்து எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டின் பயத்தை உறுதி செய்துள்ளன 'நீட் தேர்வு' முறைகேடுகள். நாடு முழுவதும் மருத்துவக் கனவுகளோடு இரவு பகலாகப் படித்து, தங்களின் தகுதியை நிரூபிக்கக் காத்திருந்த லட்சக்கணக்கான மாணவர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையையும் சிதைத்திருக்கிறது 'நீட் தேர்வு' முறைகேடுகளும் வினாத்தாள் கசிவுகளும். கடந்த 10 ஆண்டுகளில் 'நீட்' உட்பட பல்வேறு போட்டித் தேர்வுகள் சேர்த்து 152 முறை வினாத்தாள் கசிந்துள்ளது. இது தெரிந்த கசிவு, தெரியாத கசிவுகள் எத்தனையோ? வினாத்தாள் கசிவால் 5 கோடிக்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீட் தேர்வில், தொடர்ச்சியாக அரங்கேறி வரும் வினாத்தாள் கசிவுகளும் குளறுபடிகளும், தேர்வு நடத்தும் தேசிய தேர்வு முகமையின் ஒட்டுமொத்த நிர்வாகத் தோல்வியைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்களின் வாழ்நாள் சேமிப்பையெல்லாம் கொட்டி, பல ஆண்டுகள் கடினமாக உழைத்துப் படிக்கும் கல்வியை, ஒரு சில சுயநலச் சக்திகளும் தேர்வு மாஃபியாக்களும் விலைக்கு வாங்குவது எவ்வளவு பெரிய சமூக அநீதி?

மருத்துவ படிப்புக்கான நுழைவு வாசலாக இருக்கும் 'நீட்' தேர்வில் பங்கேற்க ஒவ்வொரு மாணவருக்கும் கூடுதல் பயிற்சி தேவைப்படுகிறது. பள்ளிக்கூடத்தில் ஒரு பாடத்திட்டம், நீட் தேர்வுக்கு வேறொரு பாடத்திட்டம். இரண்டையும் படிக்க வேண்டுமென்றால் அந்த மாணவர் தினசரி பதினாறு மணி நேரமாவது படிக்க வேண்டும். அதற்குத் தனிப் பயிற்சி தேவைப்படுகிறது. எனவே அதற்கு மிகுந்த செலவு ஆகிறது. 'நீட்' பயிற்சி கொடுப்பதற்கென்று பெரிய தொழிற்துறை செயல்படுகிறது. கோடிக்கணக்கான பணம் இந்தத் துறையில் புழங்குகிறது. 'நீட்' தேர்வு பயிற்சிக்காக ஆண்டுக்கு 1.32 லட்சம் கோடியை மக்கள் செலவழிக்கின்றனர் எனக் கூறுகிறது ஒரு புள்ளி விவரம். 'நீட்' தேர்வுக்குத் தயாராகும் பல மாணவர் குடும்பங்கள் கடும் கடன் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர்.

இந்தியாவில் இன்று கல்வி மாணவர்களின் அறிவை வளர்க்கும் கருவியாக அல்லாமல் பெரும் வணிகமாக மாறிவிட்டது. இந்த வணிகச் சந்தையில் பங்கேற்க முடியாமல் ஏழை, கிராமப்புற மாணவர்கள் விலக்கப்படுகிறார்கள். பங்கேற்கும் மாணவர்களிலும் குறிப்பிட்ட பயிற்சி மையங்களில் படித்த மாணவர்களே எளிதில், நிறைய எண்ணிக்கையில் வெற்றி பெறுகிறார்கள். இது வெளிப்படையாக ஊழல், கொள்ளை நடப்பதை உறுதி செய்கிறது.

நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்டபோது, 'தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் தன்னிச்சையாக மாணவர்களைச் சேர்ப்பது தடைசெய்யப்பட்டு, நீட் தகுதி மதிப்பெண் கட்டாயமாக்கப்படும்; இதனால் நன்கொடை வசூல் முடிவுக்கு வரும்' என்று சொல்லப்பட்டது. ஆனால், நீட்டுக்குப் பின்னர் தனியார் மருத்துக் கல்லூரிகள் இன்னும் கூடுதலான விலைக்கு இடங்களை விற்பனை செய்வதுதான் நடக்கிறது. அரசுக்கு ஒதுக்கப்பட்ட 50 சதவீத இடங்களுக்கும்கூட எதிர்மறை அல்லது பூஜ்யம் வாங்கியவர்களும் அதிகப் பணம் கொடுத்துப் படிக்கின்றனர். முன்பாவது தனியார் மருத்துவக் கல்லூரிகள் இடங்கள் 50 சதவீதம் அரசு முறைப்படியும், 50 சதவீதம் சந்தை மதிப்பிலும் பகிரப்பட்டன. இப்போது 100 சதவீதமும் விற்கப்படுகின்றன. இது மோசடி இல்லையா? இந்த 'தேர்வு மோசடி' மாணவர்களை அளவற்ற மன அழுத்தத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. பல மாணவர்களின் உயிரைப் பறித்துள்ளது.

தேர்வு முறைகேடு என்பது ஏதோ ஒரு சாதாரணத் தவறு அல்ல; அது நாட்டின் லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தின் மீது நடத்தப்பட்டிருக்கும் கொடூரமான தாக்குதல். இதற்கு தார்மீகப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும், தேர்வு முறையில் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மாணவர்கள் கோருவதில் என்ன தவறு இருக்க முடியும்? வினாத்தாள் கசிவு விவகாரத்தில் ஒன்றிய அரசு இதுவரை ஒருவருக்கு கூடத் தண்டனை பெற்றுத் தரவில்லை. ஒருவர்கூட சிறைக்கு செல்லவில்லை என்பது கவனிக்கத்தக்கது.



கல்வித் துறையின் உன்னதத்தையும் தேர்வு முகமைகளின் நம்பகத்தன்மையையும் கேள்விக்குறியாக்கியுள்ள 'மோசடி'களுக்கு எதிராக, நியாயமான கோரிக்கைகளுடன் அறவழியில் போராடிய மாணவர்கள், ஜூலை 20 அன்று டெல்லி ஜந்தர் மந்தரிலிருந்து நாடாளுமன்றத்தை நோக்கி அமைதியான முறையில் பேரணியாகச் செல்ல முயன்றபோது, மாணவர்கள்மீது டெல்லி காவல்துறையும் அதிரடிப்படையினரும் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை நாகரிக சமூகத்தைத் தலைகுனியச் செய்யக்கூடியது.

மாணவர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை; அவர்கள் நாட்டைச் சீரழிக்க வன்முறையில் ஈடுபடவில்லை. பேனா பிடிக்கும் கைகளில் பதாகைகளை ஏந்தி, தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குத் தீர்வு கேட்டுத்தான் வீதியில் நின்றார்கள். தங்களின் கல்வி உரிமையைக் கேட்க வந்த மாணவர்களை, கொடூரமாகத் தாக்கியதும், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் காயப்படுத்தியதும் சனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே எதிரானது. மாணவர்களைக் கிரிமினல்களைப்போலக் கையாள்வதும், இரும்புக்கரம் கொண்டு அடக்குவதும் ஓர் ஜனநாயக நாட்டின் அரசுக்கு அழகல்ல. நாட்டின் இளந்தலைமுறை மீது ஏவப்பட்டிருக்கும் அரசு வன்முறை, இந்திய ஜனநாயகம் சந்தித்திருக்கும் மிகப்பெரிய வீழ்ச்சியாகும்.

அறவழியில் போராடுபவர்களை வன்முறையால் ஒடுக்க நினைப்பது, அவர்களின் போராட்ட வீரியத்தை இன்னும் அதிகப்படுத்துமே தவிர, ஒருபோதும் தணிக்காது என்பதற்கு பல முன் உதாரணங்கள் வரலாற்றில் உள்ளன. இப்போது நாடே நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறது. கொல்கத்தாவில் மாணவர்கள் கிதார் இசைத்துக்கொண்டு முழக்கமிடுகிறார்கள். திருவனந்தபுரத்தில் பேருந்துகளில் போராட்டத்தை நடத்துகிறார்கள்.கோவாவில் மெழுகுவர்த்தியை ஏந்திக்கொண்டு மாணவர்கள் சாத்வீகமாகப் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். மஹாராஷ்ட்ராவிலும் பூனாவிலும் மாணவர்கள் வகுப்பறையைப் புறக்கணிக்கிறார்கள். தமிழகத்திலும் பெருவாரியான இடங்களில் மாணவர்கள் போராட்டம் நடைபெற்றுள்ளது. நமது ஆட்சியாளர்கள், வழக்கம்போல் மாணவர்களை 'தேச விராதிகளாக' சித்தரிக்கின்றனர். மாணவர்களை நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கும் நோக்கம் கொண்டவர்கள் என்கிறார்கள்.

ஜனநாயகம் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்கு செலுத்துவதோடு முடிந்துவிடுவதில்லை. மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பதே உண்மையான ஜனநாயகம். அரசு, மாணவர்களைத் தனது எதிரிகளாகப் பார்ப்பதை நிறுத்த வேண்டும். அவர்கள் நாட்டின் குடிமக்கள், நாட்டின் சொத்துக்கள். தன் பிடிவாதப் போக்கைக் கைவிட்டு, மாணவர்களின் பிரதிநிதிகளை நேரில் அழைத்து, அவர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டிய கடமை ஆட்சியாளர்களுக்கு உண்டு.

நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து, உச்ச நீதிமன்றக் கண்காணிப்பில் முறையான, வெளிப்படையான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். தேர்வு முகமைகளின் உள்கட்டமைப்பில் கடுமையான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட, மன உளைச்சலுக்கு ஆளான மாணவர்களின் குடும்பங்களுக்குத் தகுந்த நஷ்டஈடும் எதிர்காலப் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். அமைதியான முறையில் போராடிய மாணவர்கள்மீது எடுக்கப்பட்டக் காவல் துறை நடவடிக்கைகளையும் வழக்குகளையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

ஆட்சியாளர்கள் தங்களின் அதிகார பலத்தைக் காட்ட வேண்டிய இடம் மாணவர்களின் மீதல்ல; தேர்வு முறைகேடுகளில் ஈடுபட்டு நாட்டின் எதிர்காலத்தோடு விளையாடும் கல்வி மாஃபியாக்கள் மீதுதான். மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்த பின்னர் இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஒன்றிய அமைச்சர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். இது ஒரு நல்ல அறிகுறி. ஒன்றிய அரசு, மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, அவர்களின் கல்வி உரிமையையும் நாட்டின் ஜனநாயகப் பண்புகளையும் நிலைநாட்ட முன்வர வேண்டும். மாணவர்களின் எதிர்காலம் காக்கப்பட்டால் மட்டுமே, நாட்டின் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும்!

மண் மீது அடக்குமுறையை எழுதுங்கள் நாங்கள் விண்ணதிர புரட்சியை எழுதுவோம்

● அமீர் அஜீஸ் தமிழில்: ஜெ. தீபலட்சுமி

நீங்கள் இரவென்று எழுதுங்கள்; நாங்கள் நிலவென்று எழுதுவோம்.

எங்களைச் சிறையிலடைத்தால் சிறைக்கதவுகளைத் தாண்டிக் குதித்து வந்து எழுதுவோம்.

எங்கள் மீது குற்றப்பத்திரிகை எழுதுங்கள்; நாங்கள் எதிர்கொண்டு வரும் அநீதிகளைப் பற்றி எழுதுவோம்.

எங்களைக் கொலை செய்தால் பேய்களாக வந்து மேலும் எழுதுவோம். நீங்கள் செய்த கொலைகளை நிரூபிக்கும் சாட்சிகளை எழுதுவோம்.



நீங்கள் நீதிமன்றங்களில் அமர்ந்து எள்ளிநகையாடிக் கொண்டிருங்கள். நாங்கள் வீதிகளிலும் தெருச்சுவர்களிலும் எங்களுக்கு வேண்டிய நீதியை எழுதுவோம். செவிப் புலனற்றவர்களுக்கும் கேட்கும்படி உரத்து அறை கூவுவோம். கண்ணிழந்தவர்களும் படிக்கும் படி மிகத்தெளிவாய் எழுதுவோம்.

நீங்கள் இருண்ட தாமரையைப் போற்றலாம். நாங்கள் செந்நிற ரோஜாக்களைப் பற்றி எழுதுவோம். நீங்கள் மண் மீது எங்கள் அடக்குமுறையை எழுதுங்கள். நாங்கள் விண்ணதிர புரட்சியை எழுதுவோம்.

எல்லாம் நினைவில் இருக்கும். எதையுமே மறக்க மாட்டோம்.

தடியடி நடத்தியும் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தும் எங்கள் ஆருயிர் நண்பர்களைக் கொலை செய்தீர்களே, அவர்களின் நினைவாக உடைந்த எங்கள் இதயங்களைப் பொத்தி வைத்திருப்போம். எதையும் மறக்க மாட்டோம். எல்லாமே நினைவில் இருக்கும்.

நீங்கள் மையினைக் கொண்டு பொய்களை எழுதுவீர்கள்; எங்களுக்குத் தெரியும். நாங்கள் எங்கள் குருதியினைக் கொண்டு அப்பட்டமான உண்மைகளை எழுதுவோம். அது நிச்சயம் என்றாவது வெளிச்சத்துக்கு வரும். எல்லாமே நினைவில் இருக்கும். எதையும் மறக்க மாட்டோம்.

அலைபேசி, இணையம், தகவல் தொழில்நுட்பம் அனைத்தையும் பட்டப்பகலில் முடக்கி வைத்து, ஒட்டு மொத்த நகரத்தையும் குளிர் சூழ்ந்த இரவில் சிறையாக மாற்றி, எங்கள் வீடுகளுக்குள் திடீரென்று புகுந்து, எங்கள் சின்னஞ்சிறு வாழ்க்கைகளைச் சின்னாபின்னம் செய்தீர்கள்; என் செல்லக் குழந்தையை நடு வீதியில் கொன்று போட்டீர்கள்; பின்பு எதுவுமே நடவாதது போல் கூட்டத்தில் சென்று சேர்ந்து கொண்டு சிரித்தீர்களே, எதையும் மறக்க மாட்டோம். எல்லாமே நினைவில் இருக்கும்.

தங்களுக்கான உரிமைகளைக் கோரும் மக்களிடம் பகலில் இனிக்க இனிக்கப் பேசி விட்டு, எல்லாம் சரியாகவும் கட்டுக் கோப்பாகவும் இருப்பதாக வாக்களித்து விட்டு இரவானதும், அவர்களை அடக்கி ஒடுக்கித் தாக்குதல் நடத்தியதும், அந்தப் பழியையும் எங்கள் மீதே சுமத்தியதும், எல்லாமே நினைவில் கொள்ளப்படும்.

உங்கள் குரூரச் செயல்களை என் எலும்புகளில் செதுக்கி வைப்பேன். என் அடையாளத்துக்கான ஆவணங்களைக் கேட்கிறாய். நான் என் வாழ்க்கைக்கான சாட்சியத்தை நிச்சயம் உனக்குக் கொடுப்பேன். உனது கடைசி மூச்சு வரை இந்தப் போர் நிகழ்த்தப்படும். எல்லாம் நினைவில் கொள்ளப்படும்.



நீங்கள் எத்தனை விதமாக இந்நாட்டைத் துண்டாட எண்ணினீர்கள் என்பதும் அனைவரும் ஒற்றுமையாய் வாழ நாங்கள் எழுச்சியுடன் எவ்வளவு முயன்றோம் என்பதும் கூட நினைவில் கொள்ளப்படும். 'கோழைத்தனம்' எனும் சொல்லுக்கு எப்போதும் உங்கள் செயல்பாடுகளே எடுத்துக்காட்டாய் வைக்கப்படும்.

மேலும், நல் வாழ்வு என்பது குறித்துப் பேசும் போது எங்கள் பெயர்களே முன்மொழியப்படும்;

சுத்தியல்களால் அடித்து மண்டை உடைக்கப்பட்ட போதும், நொறுங்கி விடாத நோக்கங்களையும் கொள்கைகளையும் கொண்டவர்கள் என்று. சிலரை ஒரு போதும் விலைக்கு வாங்கி விட முடியாது, நீங்கள் விலை போனது போல.

நினைத்துப் பார்க்க முடியாத சூழல்களைச் சிலர் எதிர் கொண்டோம். நாங்கள் இறந்து போன சேதி கேட்டறிந்த பின்பும் வாழ்வைத் தொடர்ந்தோம்.

கண்கள் இமைக்க மறக்கலாம். இந்த பூமி சுழல மறக்கலாம். ஆனால், எங்கள் சுதந்திர வாழ்வைத் ஓயாமல் முயற்சி செய்து நீங்கள் அபகரித்ததும் உங்கள் அடக்குமுறைகளின் பேய்க்கூச்சலும் எங்கள் மனங்களில் என்றும் நீங்காமல் எதிரொலிக்கும்.

நீங்கள் இரவென்று எழுதுங்கள்; நாங்கள் நிலவென்று எழுதுவோம்.

எங்களைச் சிறையிலடைத்தால் சிறைக்கதவுகளைத் தாண்டிக் குதித்து வந்து எழுதுவோம்.

எங்கள் மீது குற்றப்பத்திரிகை எழுதுங்கள் நாங்கள் எதிர்கொண்டு வரும் அநீதிகளைப் பற்றி எழுதுவோம். எங்களைக் கொலை செய்தால் பேய்களாக வந்து மேலும் எழுதுவோம். நீங்கள் செய்த கொலைகளை நிரூபிக்கும் சாட்சிகளை எழுதுவோம்.

நீங்கள் நீதிமன்றங்களில் அமர்ந்து எள்ளிநகையாடிக் கொண்டிருங்கள். நாங்கள் வீதிகளிலும் தெருச்சுவர்களிலும் எங்களுக்கு வேண்டிய நீதியை எழுதுவோம். செவிப் புலனற்றவர்களுக்கும் கேட்கும்படி உரத்து அறை கூவுவோம். கண்ணிழந்தவர்களும் படிக்கும் படி மிகத்தெளிவாய் எழுதுவோம்.

நீங்கள் இருண்ட தாமரையைப் போற்றலாம். நாங்கள் செந்நிற ரோஜாக்களைப் பற்றி எழுதுவோம்.

நீங்கள் மண் மீது எங்கள் அடக்குமுறையை எழுதுங்கள். நாங்கள் விண்ணதிர புரட்சியை எழுதுவோம்.

ஜெ. தீபலட்சுமி <deepalakshmiche2025@gmail.com>

நன்றி: *Quint யூடியூப் சானல்*


6 பிப்ரவரி 2020 அன்று அமீர் அஜீஸ் வாசித்த இந்த எழுச்சி மிகுந்த கவிதை மீண்டும் 20 ஜூலை மாணவர் போராட்டத்தை ஒட்டி நாடு முழுவதும் பரவலாக நினைவு கூரப்படுகிறது. இந்தக் கவிதை காஷ்மீருக்காக ஜாமியாவுக்காக, ஜே.என்.யூவுக்காக, உத்திரப்பிரதேசத்துக்காக, மற்றும் தில்லிக்காக என்று அப்போது அவர் சொன்னது உண்மையாகி இருக்கிறது.

விஜய் டெண்டுல்கர்

● இந்திரா பார்த்தசாரதி

போன நூற்றாண்டில், அறுபதுகளுக்குப் பிறகு அகில இந்திய கவனத்தை ஈர்த்த நாடக ஆசிரியர்களில் முக்கியமானவர் விஜய்டெண்டுல்கர். என்றாலும், அவர் நாடகங்கள், பெரும்பான்மையான நவீனத் தமிழ் நாடக இயக்குநர்களின் கவனத்தை உரிய அளவில் பெறவில்லை. பாசாங்குகளும் போலியான அறிவுஜீவித்தனமும் அவர் நாடகங்களில் இல்லை என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

நாடகம் என்பது சமுதாயச் செயல். சமூக நிகழ்வுகளினால் பாதிக்கப்படுகின்ற கலைஞனின் பார்வையில், அவை, கருத்துக்களை முதன்மைப்படுத்துவதற்கான வடிவங்களை ஏற்று, அவனையும் சமூகத்தையும் அடையாளப்படுத்தும் கலை அனுபவங்களாகின்றன. டெண்டுல்கரின் நாடகங்கள் அனைத்தும் இவ்வகையைச் சார்ந்தவை. வடிவத்தை முதலில் தேர்ந்தெடுத்துவிட்டு, அதற்கேற்ப நாடகக் கருத்தை அவர் அமைத்ததாகத் தெரியவில்லை. இதுவும் அவர் நாடகங்கள் தமிழ்நாட்டில் நவீன நாடக உலகில் பிரபலமாகவில்லை என்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும். யதார்த்த பாணி (Realistic Theatre) என்பது ஒரு கெட்ட வார்த்தையாகி, மிகை வடிவமே (Stylized Form) நம் நாடகப் பாரம்பரியமென்று கொண்டு, அவர் பரிசோதனை ஏதும் பரிசோதனைக்காகவே நடத்தவில்லை என்பதையும், நாம் நம் மனத்தில் கொள்ள வேண்டும்.




நாடகம் என்பது சமுதாயச் செயல் என்று ஏற்றுக் கொண்டால், அது, குடும்ப, சமூக அரசியல், அதிகாரம் பற்றிய விமர்சனமாக இருப்பதனின்றும் தவிர்க்க முடியாது. ஷேக்ஸ்பியருடைய சரித்திர நாடகங்கள், சிலதுன்பவியல் நாடங்கள் போன்றவற்றை இந்த அடிப்படையில் ஆராய முடியும். ஆனால், நாடக ஆசிரியன், முன் வைக்கும் விமர்சனம், எப்படி வெறும் கோஷங்களாக இழிந்துவிடாமல், கலை வடிவங்களாகி, நாடக ஆசிரியனைக் கலைஞனாக அடையாளப்படுத்துகின்றன என்பதுதான் முக்கியம்.

டெண்டுல்கருடைய நாடகங்கள் அனைத்தும் சமூக உறவில் காணும் அரசியல், அதிகார மையங்கள் தனி மனிதர்களை அவரவர் பின்னணிக்கேற்பப் பாதிக்கும்போது ஏற்படக்கூடிய உளவியல் சிக்கல்கள், எப்படி மனப் போராட்டாங்களாக வெளிப்படுகின்றன என்பதைப் பற்றித்தாம் கூறுகின்றன. 'ஷாந்ததா கோர்ட் சாலு ஆஹே', 'காஷிராம் கோட்வால்', சகாராம் பைன்டர்' 'கமலா' போன்ற நாடகங்கள் இதற்குச் சான்றுகள்.

டெண்டுல்கர் ஐம்பதின் தொடக்கத்திலேயே எழுதத் தொடங்கியிருந்தாலும், அவர் பல வருஷங்கள் போராடித்தான் தம்மை நாடக ஆசிரியராக நிலை நிறுத்த வேண்டியிருந்தது. மேல்நாட்டுப் படிப்போ, அல்லது அவர் எழுதிய முதல் நாடகமே அகில இந்திய அளவில் அறியப்பட்டிருந்தஓர் இயக்குநரால் மேடையேற்றப்படக்கூடிய அதிர்ஷ்டமோ, அவருக்கில்லை.

'மனஸ் நவாச்சே பெய்ட்' (மனிதன் ஒரு தீவு) என்பதுதான் அவர் முதல் நாடகம். இதைத் தொடர்ந்து, 1952ல் 'ஷீமந்த்' என்ற நாடகம் எழுதினார். பக்கம் பக்கமாக வசனங்கள் நிறைந்த அக்கால மராத்தி நாடகங்களினின்றும் வேறுபட்டு, மிகக் குறைந்த உரையாடல்கள் மூலமாகவே, முதன்மைக் கதாபாத்திரங்களின் குணச்சித்திரங்களைப் புலப்படுத்தும் அவர் நாடக ஆற்றல், மராத்தி நாடக உலகுக்குப் புது வரவாக இருந்ததோடு மட்டுமல்லாமல், அவர் நாடகத்தின் கதைக் கருவும் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியது. 'ஷீமந்த்' என்ற நாடகத்தில், கல்யாணம் ஆகாமலேயே கருவுற்றிருந்த ஓர் இளம் பெண், கருவைக் கலைக்க மறுத்து விடுகிறாள். பின்னால் அவர் எழுதவிருந்த பல புரட்சிகரமான நாடகங்களுக்கு இது முன்னோட்டமாக அமைந்தது.

1967ல் அவர் எழுதிய 'ஷாந்ததா கோர்ட் சாலு ஆஹே' தான் அவரை அகில இந்திய அளவில் ஒரு நாடக ஆசிரியராக அறிமுகப்படுத்தியது. அந்தக் காலகட்டத்தில், நாடக உலகில், மிகப் பெரிய கௌரவமாகக் கருதப்பட்ட டாக்டர் கமலா தேவி சட்டோப்பாத்யாய விருது இந்த நாடகத்துக்குக் கிடைத்தது. ஃப்ரெடெரிக் டூரன்மாட் என்ற ஸ்விட்சர்லாந்த் நாடக ஆசிரியர் எழுதிய 'Traps' என்ற ஒரு சிறுகதையைத் தழுவி எழுதப்பட்டது இந்த நாடகம். ஊர் ஊராகச் சுற்றும் சிறு பொருள் விற்பவன் ஒருவன், பொழுது போவதற்காகத் தங்கும் கிராமம் ஒன்றில், விளையாட்டுக்காக அங்குக் கூடியவர்களைக் கொண்டு ஒரு விசாரணைக் குழு அமைத்து, தன்னை விசாரணைக்கு உட்படுத்திக் கொள்கிறான். விளையாட்டு வினையாகி, மறைக்கப்பட்டிருந்த பல அந்தரங்கங்கள் பகிரங்கமாகின்றன. டெண்டுல்கர் நாடகத்தில், ஊர் ஊராகச் சென்று நாடகம் போடும் குழு ஒன்று, ஒரு கிராமத்தில் தங்கியபோது,



பொழுது போவதற்காக, அக்குழு நடிகைகளில் ஒருத்தியிடம் போலி விசாரணை நடத்துகிறது. அவள் மணமாகாமல் கருவுற்று, கலக்கத்தினால் கருவைச் சிதைத்தவள். விசாரணை திசை மாறி உக்கிரமடைந்த நிலையில், அவள் சீற்றமடைந்து, பொங்கி எழுந்து, அங்கிருக்கும் ஆண்கள் அனைவருடைய முகத்திரைகளையும் கிழித்தெறிகிறாள். இந்தியக் கலாசாரப் பின்னணியில், டூரன்மாட்டின் சிறுகதை புதிய பரிமாணங்களுடன் நாடகமாகிறது. 'கதை, பேரழிவு நிலையை அடையும் வரை, அது முடிவுக்கு வருவதில்லை' என்பார் டூரென்மாட். இந்த நாடகம் 1971ல் சத்யதேவ் தூபேயால் திரைப்படமாக்கப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது.

1972ல் டெண்டுல்கர் எழுதிய 'சகாராம் பைண்டரும்', 'காஷிராம் கோட்வாலும்' பலத்த சர்ச்சைகளுக்கும் கடுமையான விமர்சனங்களுக்கும் உள்ளாகின. பால் உறவை வெறும் உடற்பசியாகவே கருதி, உணர்ச்சிப் பொறுப்பை அறவே ஒழித்துவிட்ட சகாராம், மற்றவர்கள் பயன்படுத்தியபிறகு புறக்கணித்துவிட்ட பெண்களுக்குத் தங்குமிடமளித்து, அவர்களைத் தானும் உபயோகித்துக்கொள்ளத் தயங்கவில்லை. ஒடுக்கப்பட்டவர்களிடம், அதிகாரம் காட்டும் அரசியல், இங்கு ஆண்-பெண் உறவில் 'பளிச்' சென்று தெரிகிறது. ஆண்டோனின் ஆர்டாட் (Antonin Artaud) என்ற பிரஞ்சு நாடக ஆசிரியர் குறிப்பிடும் மனத்தளவைப் பற்றிய வன்முறை நாடக அரங்கு (Theatre of Cruelty) 'சகாராம்' படிக்கும்போது நினைவுக்கு வருகிறது. அதுவரை ஒரு ஒழுக்கம் இல்லாத கதாபத்திரத்தை நாடகத்தில் கண்டறியாத மராத்தி மத்திய தர வகுப்பினர் அதிர்ச்சியடைந்து இந்நாடகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று கூக்குரல் எழுப்பியதினால் நாடகம் சிறிது காலம் தடை செய்யப்பட்டு, பிறகு எழுத்தாளர் உரிமைப் பிரச்னையாகி, தடை நீங்கியது.

'காஷிராம் கோட்வால்' பதினெட்டாம் நூற்றாண்டில், புனே பேஷ்வாக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தபோது, அதைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட இசை நடனங்களுடன் கூடிய நாடகம். நானா பட்னாவிஸ் அப்பொழுது பிரதம மந்திரி. உல்லாசப் பிரியர். அவருடைய எதேச்சதிகாரத்தை எதிர்த்து, அவரால் பாதிக்கப்பட்ட காஷிராம் என்ற நகரக் காவலன் புரட்சிக் குரல் எழுப்புகிறான். நானா பட்னாவிஸ் ஒரு மிகச் சிறந்த நிர்வாகி, அவரை டெண்டுல்கர் இப்படிச் சித்திரித்திருப்பது சரித்திரத்துக்குப் புறம்பானது என்று புனேவில் பலர் இந்த நாடகத்தை எதிர்த்தார்கள். சிவசேனாப் பிரமுகர்கள், புனே பிராமணச் சமூகம் (நானா பட்னாவிஸ் பிராமணர்) நாடகத்துக்குத் தடை விதிக்கக் கோரினார். இதை மேடையேற்றிய 'முற்போக்கு நாடகக் குழு' உடைந்து, 'ரங்காயன்' என்ற புதிய அமைப்பு உருவாகி, ஜாபர் படேல் இயக்கத்தில் நாடகம் மீண்டும் அரங்கேறியது. டெண்டுல்கர், சரஸ்வத் பிராமணர் (கொங்கணி) என்பதால், வேண்டுமென்றே சித்பவன் பிராமணர்களாகிய பேஷ்வாக்களை அவமதிப்பதற்காக இந்த நாடகத்தை எழுதியிருக்கிறார் என்று அவர் மீது குற்றம் சுமத்தினார்கள். ஆனால், பொது மக்கள் திரண்டு நாடகத்துக்கு ஆதரவு தந்தனர். 6,000 தடவை மேடையேறிய ஒரே இந்திய நாடகம் இதுதான்.

இது ஐரோப்பாவில் பல்வேறு நாடுகளில் காட்டப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இந்திரா காந்தி அமைச்சரவையில் மந்திரியாக இருந்த வசந்த் சாத்தே என்ற சித்பவன் பிராமணர் கடைசி நிமிஷத்தில் அது வெளிநாடு செல்வதைத் தடுத்துவிட்டார். நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. நீதிமன்றம், தடையை விலக்கிவிட்டு, அமைச்சரின் திருப்திக்காகவோ என்னவோ, ஒரு புது உத்தரவும் பிறப்பித்தது. அதாவது, நாடகம் ஐரோப்பாவில் மேடையேறும் ஒவ்வொரு சமயத்திலும், நாடகம் தொடங்குவதற்கு முன்னால், 'நானா பட்னாவிஸ் நிர்வாகத் திறன் மிகுந்த ஒரு சிறந்த அமைச்சர்' என்று அறிவிக்கப்பட வேண்டுமென்பதுதான். இவ்வாறு அறிவிக்கப்படுகின்றதா இல்லையா என்று இது மேடையேறிய நாடுகளிலுள்ள இந்தியத் தூதுவரகங்கள் கண்காணித்தன என்பதுதான் சுவாரஸ்யமான செய்தி.

புதிதாகத் தொடங்கிய 'ரங்காயனி 'ல் நடிக்க ஆரம்பித்த ஷீராம் லக்கு, மோகன் அகாஸே, ஸுலபா தேஷ்பாண்டே போன்றவர்கள் பிறகு அகில இந்திய அளவில் குணச்சித்திர நடிகர்களாக அறியப்பட்டனர்.

சமூகத்தில் காணும் பல்வேறு வகையான வன்முறைகள்பற்றி விஜய் டெண்டுல்கருக்கு ஆழமான

பார்வை இருந்தது. நேரு ஃபெல்லோஷிப்பில் அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட தலைப்பும் வன்முறைப் பற்றித்தான். நானும் அவரும் எழுபதுகளில், ஆகாஷ்வாணி நாடகப் போட்டியில் நடுவர்களாக மூன்றாண்டுகள் தொடர்ந்து இருந்தபோது அவருடன் பழகுவதற்கான வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 'வன்முறை என்பது என் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஒரு விஷயம் என்பதை நான் மறுக்கவில்லை' என்றார் ஒரு சமயம் என்னிடம். 'சமூகம் இழிவடைந்து வரும் இந்நாளில், சதையின் மூலமாகத்தான் தத்துவார்த்தக் கருத்துக்கள் நம் மனத்தைச் சென்றடைய வேண்டும்' என்று ஆர்டாட் கூறியிருப்பது அப்பொழுது என் நினைவுக்கு வந்தது.

டெண்டுல்கர் நாடகங்கள், சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள், நாவல்கள், மொழிபெயர்ப்புக்கள், வரலாறு என்று ஏராளமாக எழுதியிருக்கிறார். சிறுவர்களுக்கென்றே பதினாறு நாடகங்கள் எழுதியிருக்கிறார். டென்னிஸி வில்லியம்ஸின் 'A Street Car Named Desire' என்ற நாடகத்தை மராத்தியில் மொழிபெயர்த்திருக்கிறார். அவருடைய நாடக உரையாடல்களில் டென்னிஸி வில்லியம்ஸின் பாதிப்பைக் காண முடியும்.

இதைதவிர, திரைப்படம், தொலைக்காட்சி உட்பட கலை சம்பந்தமான எல்லாத் துறைகளிலும் டெண்டுல்கர் பங்களிப்பு மிக முக்கியமானது. தேசிய விருது பெற்ற, 'ஆக்ரோஷ்', 'அர்த் சத்ய', 'மந்தான்' போன்ற படங்களின் திரைக்கதையும் உரையாடல்களையும் அவர் எழுதியுள்ளார்.

ஆலிவர் கோல்ட்ஸ்மித் இறந்தபோது அவரைப் பற்றி ஸாம்யுவல் ஜான்ஸன் கூறியது விஜய் டெண்டுல்கருக்கு மிகப் பொருந்தி வரும்.

'அவர் தொடாத துறையில்லை; தொட்டதெல்லாம் பொன்னாயிற்று.'

இந்திரா பார்த்தசாரதி <parthasarathyindira@gmail.com>


SOWBAGHYA®
45+
Shree 2.0
2Ltr Table Top Tilting Wet Grinder
Easy To Tilt
Removable Drum
Convenient To Use
High Quality Grinding Stones
Silent Operation
Effortless Grinding & Perfect Results Every time!
6 YEARS WARRANTY
3 YEARS WARRANTY
Available Colors
Maroon
Blue
Grey
Attachments
Coconut Scraper
Atta Kneader
Sales Helpline - 98946 03899 | Products Available Online at
www.sowbaghya.com
amazon
Ayudha Pooja Corporate Gifting Options
Available From ₹75/-* Onwards
Contact for More Information 95009 98499 / 99449 09944
*T&C Apply
Chennai: 32A, North Usman Road, T.Nagar, Chennai-600017, Ph: +91 44-2834-1760.
Erode: No.314, Perundurai Road, Erode-638011, Ph: +91 989-460-3590, Customer Support: +91 99524 38499
Outside India
Commercial Hotel & Kitchen Equipment Now Available on No-Cost EMI via Fuehrer Contact +91 97894 58499
Write us: grind@sowbaghya.com | www.sowbaghya.com | Available at all leading outlets



56

முயங்கொலிக் குறிப்புகள்

மாற்றம் வந்தேவிட்டது

• கயல்

வண்ணங்களை இழந்துவிட்டு
பூவின் இதழ்களினோரம் வந்தமர்கிற
பட்டாம்பூச்சியைப் போலிருக்கிறது
உணர்ச்சியற்ற உன் தொடுகை.

அடியேய் என்பது
அந்தரங்க தருணத்தின் விளி.
அது பொதுவில்
பிறர்முன் ஒலிக்கையில்
மனசின் ஆழங்களில் தைக்கும்
அதே முள்
படுக்கையில்
அடுத்து பரப்பி வைக்கப்படுகிறது
முகந் திருப்பலாக.

வாதங்களின் இடையே
வீசப்படும் வசைகளை
அதெல்லாம் கோபத்தில்
அப்போதைக்குச் சொல்வது
அவற்றையெல்லாம்
இன்னுமா நினைவில் வைத்திருக்கிறாய்
என்றபடி
வா வா வென
விரிகின்ற கைகளுக்குள்
விதியேயெனப் புகுவது
உயிருள்ள சடலம்.

என்
கவிதை,
பாடல்,
உடை
எது நன்றாக இருக்கிறது
என்று வினவினாலும்
பதிலுக்கு ஒரு கேள்விதான்,
உண்மை உனக்குத் தெரிந்தால்
போதாதா?
ஏன் எல்லாவற்றிருக்கும்
இன்னொருவரின்
அங்கீகாரத்திற்காக ஏங்குகிறாய்?
பொத்தி வைத்துக்கொள்ள
ஆளில்லாவிட்டாலும்
பூப்பதை ஒத்திவைப்பதில்லையே
பூக்கள்!

பத்துக்குப் பத்து படுக்கையறையில்
பல்லாண்டுகால பாவனைத்
தம்பதியராகப்
தம் பெற்றோரைப்
பார்த்துச் சலித்த
ஜென் z யுவதி
தயங்காமல் கேட்கிறாள்,
"உணவும்
உடலும்தான்
ஆதாரத் தேவை என்றால்
அதற்கு ஏன்
ஆணும் பெண்ணும் திருமணம்
செய்துகொள்ளவேண்டும்?"

என்ன சொல்வது
என்று தெரியாமல்
தலையைக் கவிழ்ந்திருக்கும்
மில்லினியம் அம்மாவுக்கு
மகளை நினைத்துக்
கவலைப்படுவதா
கர்வம்கொள்வதா
எனப் புரியவில்லை.

தொடரும்

கயல் <dr.kayalvizhi2023@gmail.com>

காத்திருப்பின் ஒளி
செழியன் எனும் கலைத்தவம்

● சொர்ணவேல்

ஒளிப்பதிவாளர் செழியனின் மறைவு, தமிழ் சினிமாவின் ஒருநுட்பமான ஒளியை நாம் இழந்ததாக உணரவைக்கிறது. காலத்தின் ஓட்டத்தில் கரைந்து போகும் தருணங்களை, கேமராவின் வழியே நிலைநிறுத்தி அழியாத கலைப் பொருட்களாக மாற்றியவர் அவர். அவரது படைப்புலகத்தை, சங்க இலக்கியத்தின் அந்திப் பொழுதுகளோடும் திரைப்படக் கோட்பாட்டின் ஆழமான சிந்தனைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு கலைஞனாக அவரது தனித்துவம் புலப்படுகிறது.

சங்க இலக்கியத்தின் முல்லைத் திணையைப் பாடிய மிலைப் பெருங்கந்தனார், பிரிவாற்றாமையின் வலியை ஒளியின் மாற்றங்களோடு இணைத்துக் குறுந்தொகையின் (பாடல் எண்: 234) வரிகளில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்:



சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கியோரே;
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை;
பகலும் மாலை துணையி லோர்க்கே.

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி தனது துயரத்தின் தீவிரத்தை உணர்த்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது. சூரியன் மறைந்து வானம் சிவக்கும் அந்திப் பொழுதில், ஒளி குறைந்து முல்லை மலர்கள் பூக்கும் நேரத்தை மட்டும்தான் 'மாலை' என்று அறியாதவர்கள் சொல்வார்கள். ஆனால், குடுமியை உடைய சேவல்கள் கூவி அழைக்கும் அதிகாலைப் பொழுதும் வெளிச்சம் நிறைந்த பகல் பொழுதும் கூட, துணை இல்லாதவர்களுக்கு மாலைப் பொழுது தரும் அதே தாங்க முடியாத துயரத்தையே தருகின்றன. அதாவது, காதலர் அருகில் இல்லாமல் தனிமையில் வாடுவோருக்கு, நாளின் விடியல், பகல் என எல்லாப் பொழுதுகளுமே இருள் சூழ்ந்த துன்பமான மாலைப் பொழுதாகவே நீடிக்கிறது என்பதே இப்பாடலின் முழுமையான கருத்தாகும்.

இந்தக் கவிதை, வெறும் கால மாற்றத்தை மட்டும் விவரிக்கவில்லை; மாறாக, ஒளியின் மறைவு ஒரு தேடலின் தொடர்ச்சியாகவும் தனிமையின் வலியாகவும் பதிவாகிறது. புகைப்படம், ஒளிப்பதிவு குறித்த திரைப்படக் கோட்பாட்டாளர் ஆன்ட்ரே பாஜான் (André Bazin) முன்வைத்த புகழ்பெற்ற கூற்றை இங்கு நினைவு கொள்ளலாம்: "புகைப்படக்கலை என்பது வாழ்வின் ஒரு கணத்தைப் பிடித்து, காலத்தின் ஓட்டத்தினால் ஏற்படும் மரணத்திலிருந்து அதைத் தற்காத்துக் கொள்ளும் ஒரு கலை."

செழியனின் ஒளிப்பதிவு என்பது வெறும் பிம்பங்களைப் பதிப்பது மட்டுமல்ல; மாறாக, நிலையற்ற தருணங்களை மரணத்திலிருந்தும் காலத்தின் அழிவிலிருந்தும் மீட்டு, அழியாத கலையாகப் பாதுகாக்கும் ஒரு பெரும் முயற்சியாகும். மிலைப் பெருங்கந்தனாரின் கவிதை வரிகளைப் போலவே, செழியன் கேமராவின் வழியாகச் சேமித்து வைத்த அந்த ஒளியும் நிழலும், அவர் நம்மிடையே இல்லை என்ற குறையை நீக்கி, வாழ்வின் உண்மையை என்றும் அழியாதபடி நம் கண்முன்னே நிறுத்துகின்றன. ஒளியை ஒரு கவிதைபோலக் கையாண்ட செழியன், காலத்தால் அழியாத படிமங்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அந்த ஒளியின் சுவடுகளில் அவர் என்றும் வாழ்வார்.

செழியன் விடைபெற்றுவிட்டார். தமிழ் சினிமா, அதன் பொறுமைமிக்க கலைஞர்களில் ஒருவரை இழந்து நிற்கிறது — துயரத்தைப் போலவே பிம்பத்தையும் அவசரப்படுத்தக் கூடாது என்று நம்பிய ஒளிப்பதிவாளர் அவர். சென்னையில் ஜூலை பத்தாம் தேதி, தான் வாழ்ந்த அதே அமைதியுடன் ஒரு குறுகிய கால நோய்க்குப் பிறகு அவர் மறைந்தார். அவருக்கு வயது



ஐம்பத்தேழு. இது மிக விரைவான முடிவுதான் — அவரது குடும்பத்திற்கும் அவர் வழிகாட்டிய மாணவர்களுக்கும் எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி அவர் கைபிடித்து உயர்த்திய பல இளம் இயக்குநர்களுக்கும் நம் வாழ்வின் மிக நிலையான நட்புகளில் ஒன்றாக அவரை எண்ணியிருந்த என்னைப் போன்றோருக்கும் இது ஈடுசெய்ய முடியாத இழப்பு.

சிவகங்கை பகுதியில் பிறந்தவர் அவர். பள்ளி ஆசிரியர்களான பெற்றோர்: களிமண்ணால் பொம்மைகளைச் செதுக்கிய தந்தை, கதைகள் சொல்லிப் பாடிய தாய். ஒருவேளை அதுதான் அவரது முழு வாழ்க்கை வரலாறும் — வரைந்த கோட்டிற்கும் பேசும் வார்த்தைக்கும் இடையில் வளர்ந்த சிறுவன், தனது வாழ்நாள் முழுவதையும் ஒரு லென்ஸின் வழியாக இரண்டையும் இணைப்பதிலேயே செலவிட்டவன். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் சிவில் இன்ஜினியரிங் டிப்ளமோ பயின்றார். அந்தப் பயிற்சியை அமைதியாகத் துறந்துவிட்டு, அவர் வேறொரு கட்டிடக்கலையைத் தேர்ந்தெடுத்தார்: ஒளியின் கட்டிடக்கலை. மதுரையில் ஒரு ஸ்டுடியோ புகைப்படக் கலைஞரிடம் உதவியாளராகச் சேர்ந்து, கறுப்பு-வெள்ளை புகைப்படக் கலையின் ஒழுக்கத்தைக் கற்றுக்கொண்டார் — ஒவ்வொரு முகத்திற்கும் தனித்த குணமும் அதன் சிறந்த பக்கமும் உண்டு என்பதைத் தனது ஆசிரியர் அவருக்குக் கற்பித்தார். பிறகு, தனது சொந்த ஊரில் சிறிய ஸ்டுடியோவைத் தொடங்கி, கடந்து சென்ற அனைவரையும் படம் பிடித்தார். அந்த ஆண்டுகளின் நிசப்தம் அவரது சட்டகங்களை விட்டு ஒருபோதும் அகலவில்லை. அவரது கேமரா நகர்ந்தபோது கூட, அது ஒரு ஸ்டில் புகைப்படக் கலைஞரின் கண் இயங்குவதைப் போலவே நகர்ந்தது: திட்டமிட்டு, உலகமே நம்மைவிடத் தன்னைத்தானே அழகாக வடிவமைத்துக்கொள்ளும், நாம் காத்திருந்தால் மட்டுமே போதும் என்ற பணிவுடன்.

அதே கண்ணுடன் சென்னைக்கு வந்த அவர், நவீன தமிழ் சினிமாவின் ஒளி சிற்பியான பி.சி. ஸ்ரீராமிடம் கேமரா பிரிவில் உதவியாளராகச் சேர்ந்தார். ஒளிப்பதிவாளராக அவரது பட்டறையாக அது இருந்தது. எனது ‘திரைப்படப் பள்ளி பி.சியின் பள்ளிதான்’ என்று எங்களிடம் பல முறை பெருமையுடன் கூறியிருக்கிறார். *'கல்லூரி'* முதல், அவரது பிம்பங்கள் இந்தத் திரையுலகம் கண்டிராத ஒரு உணர்திறனை வெளிப்படுத்தின: ஒரு கிராமத்துக் கல்லூரியின் தூசி, *'தென்மேற்குப் பருவக்காற்று'* படத்தின் வறட்சி நிறைந்த மென்மை (இப்படம் சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான தேசிய விருதைப் பெற்றது), *'பரதேசி'* படத்தின் காய்ந்த, துன்புறுத்தும் இண்டிகோ நிற மண் (1930-களில் மின்சாரம் இல்லை என்பதால், இயற்கை ஒளியிலும் சிம்னி விளக்குகளிலும் படமாக்கப்பட்டது. இதற்காக லண்டன் திரைப்பட விழாவில் அவருக்கு ஒளிப்பதிவாளர் விருது கிடைத்தது), *'ஜோக்கர்'* படத்தின் நையாண்டியை பிரதிபலிக்கும் ஒளி, *'தாரை தப்பட்டை'* படத்தின் மறைந்துவரும் நாட்டுப்புற நிறங்கள். தனது குருவின் பிம்பங்கள் பெரும்பாலும் ஒலியின் கனதியில் தங்களை வெளிப்படுத்திக்கொள்ளும்; குரு ஸ்டுடியோ லைட்டிங்கின் அழகியலைச் சீரமையுடன்

வெளிப்புறத்துக்கும் கொண்டு வந்த நிகரற்ற ஜாம்பவான். ஆனால், செழியனின் பிம்பங்களோ நிழலின் மொழியில் கிசுகிசுக்கும். அவருடையது நிலத்தின் சினிமா. தென்தமிழக நிலப்பரப்பு வெறும் பின்னணி அல்ல, அது ஒரு கதாபாத்திரம் என்பதை அவர் புரிந்துகொண்டிருந்தார். பருவக்காற்றுக்கும் வறட்சிக்கும் முகம் உண்டு என்பதை அவர் அறிந்திருந்தார், அவற்றை எப்படிப் படம் பிடிப்பது என்பதும் அவருக்குத் தெரியும்.

அந்த ஆரம்ப ஆண்டுகளில், விகடன் குழுமத்துக்காகவும் மின் பிம்பங்களுக்காகவும் எடுக்கப்பட்ட 'வெப்' தொடர்களில் அவருடன் பணியாற்றும் நற்பேறு எனக்குக் கிடைத்தது. அது ஒத்துழைப்பாகத் தொடங்கி, மூன்று தசாப்த கால நட்பாக ஆழமானது. போலவே, கூட்டாளிகளாகப் பயணித்த தம்பிகள் செல்லதுரை, பாண்டியராஜு, ஜெயகிருஷ்ணன், நாககுமார் ஆகியோருடனான நட்பும். அசோக் லேலண்டுக்காக எடுக்கப்பட்ட கார்ப்பரேட் டாக்குமெண்டரியிலும் பணிசெய்திருக்கிறோம். படப்பிடிப்புத் தளத்தில் எனக்கு நினைவிருப்பது அவரது நுட்பம் மட்டுமல்ல (அவரது நுட்பம் குறைபாடற்றதாகவே இருந்தபோதும்), அவரது உணர்திறன் தான். அவர் ஒளி அமைப்பதற்கு முன் வெளியை அவதானித்த விதம், ஒரு துணை நடிகரின் முகத்தை நட்சத்திரத்திற்குத் தரும் அதே மரியாதையுடன் அவர் அணுகிய விதம், ஒரு இடத்திற்குச் செல்லும் முன் அனுமதி கேட்பது போல அவர் அமைதி காத்த விதம். தனது ஊரின் பண்பாட்டை அவர் ஒரு படப்பிடிப்புத் தளத்தின் குழப்பத்திற்கிடையில் கொண்டு வந்தார்: கண்ணியம் ஒரு அறம், கவனிப்பு ஒரு காதல். அந்தப் பணிவுதான் அவரது தத்துவமாகவும் இருந்தது: ஒரு நேர்காணலில் அவர் கூறினார், "இயக்குநர் 'ஆக்‌ஷன்' என்று சொன்னதுடன் ஒளிப்பதிவாளரின் வேலை முடிந்துவிடுகிறது." இது தன்னைத்தாழ்த்திக்கொள்வதாகத் தோன்றலாம்; ஆனால், அது ஒரு கொள்கை. பிம்பத்தின் அனைத்து உழைப்பும், அந்த முக்கியமான தருணத்தில் இயக்குநரின் பார்வையில் கரைந்து போவதற்காகவே இருந்தது. இதனால்தான், அவர் இறுதியாக இயக்கியபோதும், பணியில் எந்த மாற்றமும் இல்லை என்று அவர் வலியுறுத்தினார். தனது முதல் படத்திலிருந்தே, எழுத்து முதல் வெளியீடுவரை அவர் தனது இயக்குநர்களுக்குப் பக்கபலமாகவே இருந்தார். செழியனுக்கு, ஒளிப்பதிவு ஒரு துறை அல்ல; அது முழு படத்தோடும் ஒன்றிணைந்திருக்கும் ஒரு வழி, மையக் கூறு.

அவரது மறைவுக்குப் பிறகு மீண்டும் வேகமாகப் பரவி வரும், தளவாய் சுந்தரத்துடனான ஒரு ஆழமான நேர்காணலில், அந்தத் தத்துவம் நடைமுறையில் என்ன பொருள் கொள்கிறது என்பதை அவர் விளக்கினார்.



'பரதேசி', 'தாரை தப்பட்டை' படங்களில் இயக்குநர் பாலாவுடனான ஒத்துழைப்பைப் பற்றி அவர் பேசினார். "ஒரு படத்திற்காக அழைக்கும்போது, உங்கள் விருப்பு வெறுப்புகளைக் கதையோடு கலக்கக் கூடாது; இயக்குநரின் கதையாடலுக்கு ஏற்ப உங்களை முழுமையாக மாற்றிக்கொள்வதே ஒளிப்பதிவாளரின் பணி" என்று கூறும் செழியன், அந்த ஒழுக்கத்தைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தார். ஒரு காட்சியைப் படமாக்க ஒரு வாரம் தேவைப்படும் என்று பாலா முன்பே கணித்திருந்த நிலையில், செழியன் தன் நுட்பமான திட்டமிடலால் அதே காட்சியை அன்றைய தினம் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கி மதியத்திற்குள்ளேயே நிறைவு செய்தார். ஒரு இயக்குநரின் கதையையும் அதன் தேவையையும் உணர்ந்திருந்த செழியனால், அதை அவரது ஒளி-நிழல் அழகியல் திறனால் அவ்வாறு செய்ய முடிந்தது. மேலதிகமாக, நீள்காட்சியின் (long take) தேர்ந்த கலைஞராகச் செழியன் இருந்தார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் சினிமாவில் பாலாவின் பங்களிப்பைப் பற்றி ஒரு விமர்சகராகச் செழியன் முன்வைத்த மதிப்பீடு மிக

முக்கியமானது: "தமிழ் சினிமாவை பாலாவிற்கு முன், பாலாவிற்குப் பின் என்றுதான் நாம் பிரிக்க வேண்டும்; அந்த அளவுக்கு அவர் சினிமாவின் போக்கை மாற்றியமைத்திருக்கிறார். தொண்ணூறு, தொண்ணூற்றைந்து சதவீத கதைகளை மகிழ்ச்சியில் முடித்து 'சுபம்' முத்திரையிடும் வணிக மரபை உடைத்தவர் அவர். ஒரு படம் எங்கே சென்று முடிய வேண்டுமோ, அங்கே அதைப் பின்தொடரப் பார்வையாளர்களை அவர் பழக்கினார். இருபத்தைந்து ஆண்டுகளில் ஒன்பது படங்கள், மூன்று ஆண்டுகளுக்கு ஒன்று; ஒவ்வொன்றும் பல ஆண்டுகால உழைப்பில் கட்டமைக்கப்பட்ட ராக்கெட்டைப் போன்றவை — சில சுற்றுப்பாதையை அடையும், சில கடலில் விழும்; எது எப்படியாகும் என்று எவராலும் முன்கூட்டியே சொல்ல முடியாது; கடமைப்பட்டதெல்லாம் மொத்த உழைப்பும் முழுமையான நேர்மையும்தான்."

அதே உரையாடல் அவரது தனிப்பட்ட நாயகர்களையும் பட்டியலிட்டது. ஒரு ஒளிப்பதிவாளரை ஏன் அனைவரும் நேசிக்கிறார்கள் என்ற கேள்விக்கு அவர் மிகச்சரியாகப் பதிலளித்தார்: "சட்டகத்தில் நாம் என்ன செய்ய விரும்பினோமோ, அதைத் திரையில் மிகச்சிறப்பாகச் செய்பவர்களைத்தான் நாம் நேசிக்கிறோம் — யாருடைய பிம்பங்கள் 'இதை இப்படியும் செய்யலாமா' என்று நம்மைச் சிந்திக்க வைக்கின்றனவோ, அவர்களை." அவரது விருப்பங்கள் இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டும் அதே பாதையில் அமைந்தன: ரேயின் படங்களுக்குக் கொல்கத்தா பகல் ஒளியைப் பிரதிபலித்த சுப்ரதா மித்ரா; பெர்க்மேனின் முகங்கள் மற்றும் வடக்கத்திய ஒளியின் காவலர் ஸ்வென் நைக்விஸ்ட்; 'இன் தி மூட் ஃபார் லவ்' படத்தில் மிதக்கும், செறிவான மனநிலையைப் படம்பிடித்த கிறிஸ்டோபர் டாயில்; சொந்த வீட்டில் பி.சி. ஸ்ரீராம். பி.சி. ஸ்ரீராமிடம் அவர் கடைநிலை உதவியாளராக இருந்தபோது, பூட்டிய கதவுக்கு முன்னால் கெஞ்சியும் கோமாளித்தனம் செய்தும் கதவைத் திறக்கச் சொன்ன சிறுவன் அவர். அந்தப் பசியுடன் பணிவும் இருந்தது: 'கல்லூரி' படத்தை ஒருபோதும் பி.சி. ஸ்ரீராமிடம் காட்டத் துணியவில்லை என்று சுந்தரத்திடம் ஒப்புக்கொண்டார் — அதில் அவருக்கு ஒரு குருவுடனான மாணவனின் பணிவும் பதட்டமும் தெரிந்தது.

பாலு மகேந்திராவுடன் அவர் கொண்டிருந்த உறவு, ஒரு குரு-சீடர் என்ற எல்லையைத் தாண்டி, ஒரு கலை மரபின் வாரிசுரிமையாகவே நீடித்தது. பாலு மகேந்திராவைப் போலவே, ஒரு கதையைப் பிம்பங்களாகச் சொல்ல முடியும், இல்லையென்றால் சொல்லவே முடியாது என்று நம்பினார். அவர் கிடைத்த ஒளியையும் உண்மையான அறைகளின் ஒழுங்கற்ற தன்மையையும் சொல்லப்படாதவற்றின் வெளிப்பாட்டையும் நம்பினார். பாலு மகேந்திரா தமிழ் சினிமாவிற்கு ஒரு எதார்த்த அழகியலைக் கொண்டு வந்தார் என்றால், செழியன் அதன் மிகவும் அர்ப்பணிப்புள்ள வாரிசாகவும் கடுமையான மனசாட்சியாகவும் இருந்தார். அவர்கள் இருவருக்கும் பின்னால் சத்யஜித் ரேயிலிருந்து தொடங்கும் இந்திய எதார்த்தவாதத்தின் நீண்ட வரிசை இருந்தது. அந்த வரிசையைச் செழியன் தனது வாழ்நாள் முழுவதும் பிம்பங்களாகவும் குறிப்பிடத் தக்க வகையில் சொற்களாகவும் நீட்டித்தார்.

அந்த நெருக்கத்தின் ஆழத்தை நான் அவரது குரலிலேயே கேட்டேன்; 'காட்சிப்பிழை' இதழுக்காக நான் எடுத்த நீண்ட நேர்காணலில் அது பதிவாகியிருந்தது. அது ஒரு சாதாரண நேர்காணல் வடிவைத் தாண்டி, ஒளியின் நினைவுக்குறிப்பாகவே மாறியது. அவர் தனது கேமரா பயணத்தைக் கேமராக்களிலிருந்து தொடங்கவில்லை; கைதட்டல்களிலிருந்து தொடங்கினார். 'மூன்றாம் பிறை' படத்தின் சூரிய உதயங்களையும் மறைவுகளையும் திரையில் கண்டு அமுதா, ஸ்ரீராம் திரையரங்கு ரசிகர்கள் கைதட்டியதையும்; பாலு மகேந்திரா, பி.சி. ஸ்ரீராம் ஆகியோரின் பெயர்கள் திரையில் தோன்றியபோது மீண்டும் அவர்கள் கைதட்டியதையும் கவனித்த சிவகங்கை சிறுவன் அவன். ஒளிக்கும் ஒரு ஆசிரியர் உண்டு என்பதற்கான முதல் சான்று அவனுக்கு அங்கேயே கிடைத்தது. அவனது சிவகங்கை காலங்கள், சினிமா பற்றிய ஒரு உணர்ச்சிகரமான கல்விக்கூடமாக இருந்தன. ஸ்ரீராம் திரையரங்குக்கு எதிரே இருந்த கடையில் ஐந்து பைசாவுக்கு வாங்கப்பட்ட பிலிம் துண்டுகளை நூலில் கோர்த்து, அதை மீண்டும் நகர வைக்க முயன்ற சிறுவனின் அந்த முயற்சி; நான்கு வயதில் எம்.ஜி.ஆருக்கு மாலை போட மேடைக்குத் தூக்கப்பட்டு, அவர் மடியில் அமர வைக்கப்பட்டு முத்தமிடப்பட்ட தருணம் — எம்.ஜி.ஆர் ஒவ்வொரு திரையரங்கின் திரைக்குப் பின்னும் நடப்பார் என்று அவன் நம்பினான்; இல்லையென்றால் அந்த விசில்கள் ஏன் வருகின்றன? அதே படம் அதே இரவு மதுரையில் ஓடுவதைக் கண்டு அவன் தன் முதல் நம்பிக்கை நெருக்கடியைச் சந்தித்தான். பகுத்தறிவுவாதியான அவனது பள்ளி ஆசிரியர் தந்தை, பிலிம் துண்டை ஒளியில் காட்டி, டபுள் ரோல் (இரு வேடம்) மற்றும் டூப்புகளை விளக்கி, அந்த மாயையைக் கலைத்தார். அமுதா திரையரங்கின் இரண்டாம் காட்சி இரவு ஒரு மணிக்கு முடிந்தபோது, கூட்டம் முழுவதும் நிலவொளி வீதியில் நடந்து சென்றபடி அந்தப் படத்தைப் பிரித்து ஆய்வு செய்தனர். தூக்கக் கலக்கத்தில் அவர்கள் நடுவே மிதந்தபோது, ஒரு விமர்சகராகத் தனது முழு அடித்தளத்தையும் அன்றுதான் பெற்றதாக அவர் கூறினார்.

பிறகு, அந்த மாற்றம். அந்த நேர்காணலின் மையம் ஒரு சூரிய உதயம். மதுரையில் அவரது ஆசிரியர் ஷாஜகான் கனி, பாலு மகேந்திராவின் ஊட்டி ஏன் அப்படித் தோன்றியது என்றால் அது விடியற்காலை ஒளிதான் என்று வகுப்பில் கூறினார். அந்த ரகசியத்தை அறிய விரும்புவோர் மறுநாள் காலை ஐந்தரை மணிக்கு யாதவா கல்லூரிக்கு வர வேண்டும் என்று சவால் விட்டார். செழியன் மட்டும், இருட்டில் சிவகங்கையிலிருந்து வந்த முதல் பேருந்தில் சென்றார். நடந்ததை அவர் ஒரு திரைப்பட இயக்குநராகவும் ஆன்மீகவாதியாகவும் விவரித்தார்: மங்கலான ஆரஞ்சு நிறம், புகை இருள் விலகியது, திடீரென்று அந்த மரம் இலை இலையாக மின்னியது. ஒளியின் கதிர்கள் கிளைகளின் வழியே பெருகி, ஆயிரம் கரங்கள் ஆசீர்வதிப்பது போல நின்றது — அது ஒரு தரிசனம் என்று அவர் அழைத்தார். உடல் நடுங்க, கேமராவைக் கைவிட்டு கண்களால் நேரடியாகப் பார்த்தார். சில வினாடிகளில் மேகங்கள் அதை மூடிக்கொண்டன, சூரியன் முகத்தை மறைத்துக்கொண்ட பெண்போலச் சிரித்தது. "அந்தக் காலைக்குப் பிறகு, ஒளியைப் பற்றிய எனது புரிதல் மாறியது," என்றார் அவர். அவர் பின்னர் ஓஷோ, ஜென் தத்துவம், பாரதியின் ஒளி பற்றிய வசன கவிதைகளில் அதற்கான மொழியைக் கண்டார். ஆனால், அவர் நடைமுறையில் பின்பற்றிய இறையியல், மதுரையின் ஸ்டுடியோ புகைப்படக் கலைஞர் சேவியர் தவமணியிடமிருந்து வந்தது. அவர் அவருக்குக் கற்றுக்கொடுத்தது ஒரு பொன்மொழி: "ஒளி என்றால் ஒளிர வேண்டும்." சொல்லிலேயே அதன் பொருள் இருக்கிறது, அதுதான் எல்லாம்.

அந்த நேர்காணலில், பாலு மகேந்திரா வெறும் தாக்கமாக மட்டுமில்லாமல், செழியனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒரு கலைஞராகவே இருந்தார். குருவின் நினைவாகச் சிறுவனாக அவர் வரைந்த ஒரு 'பேக்லிட்' (Backlit) போர்ட்ரெய்ட்டை, "வைக்கோல் அடைத்த தலை" என்று அவரது மாமா நிராகரித்தார். ரயில் தண்டவாளத்தில் ஒரு நண்பன் அவரைப் பார்த்து, "நீ என்ன பெரிய பாலு மகேந்திராவா?" என்று கிண்டல் செய்தான்; அந்த ஏளனமான தருணத்தையே அவர் தங்களின் முதல் சந்திப்பாக மனதிற்குள் நினைவுகூர்ந்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, சாலிகிராமம் சாலையில் விடியற்காலையில் படப்பிடிப்புக்குச் செல்லும்போது, குரங்கு குல்லாய் அணிந்த ஒரு உயரமான உருவம் சோடியம் விளக்குகளை நோக்கி நடப்பதைக் கண்டு, அவர் ஸ்தம்பித்து நின்று மனதிற்குள் வணங்கினார். ஒருமுறை, பாலு மகேந்திராவின் போர்ட்ரெய்ட்டை வரைந்து காட்டியபோது, அன்று அவர் வேலை பார்த்த நிறுவனத்தின் கலை மேலாளர் அதைப் பாராட்டாமல், புகைப்படத்தை ஜெராக்ஸ் எடுத்து அதன் மேல் வரைந்து பூசும் 'நிறுவன முறை'யைக் காட்டினார். அந்தப் பொய்யான கலையைவிட, வேலையைத் துறந்துவிட்டு வெளியேறுவதே மேல் என்று செழியன் உணர்ந்தார்.

அதன்பிறகுதான் பாலு அவர்களுக்கும் செழியனுக்கும் இடையே உண்மையான நட்பு மலர்ந்தது. "ஏன் அந்தப் பஸ் உள்ளே விளக்கு வைத்தாய்?" என்று குரு கேட்கும் அந்த அன்பான, ஆனால், கடுமையான விசாரணைகள் தொடர்ந்தன. 'தென்மேற்குப் பருவக்காற்று' படத்தின் இரவு காட்சிகளைக் கண்டு, "நிஜமான இரவைப் பார்த்தேன்" என்று பாலு மகேந்திரா நெகிழ்ந்த தருணம் அவர் வாழ்வின் பொன்னெழுத்து. டிஜிட்டல் கிரேடிங் (Digital Grading) முறையை எதிர்த்து, பிரேமின் 'கன்னித்தன்மையை'க் காக்க அவர் நடத்திய போர், ஒரு கலைஞனின் அறச்சீற்றம். எஸ்.எம்.எஸ் அனுப்பத் தெரியாததால் தபால் முகவரி கேட்டுத் தவிப்புடன் போன் செய்ததும், ஏற்கனவே எழுதி வைத்த கடிதங்களும் அவர்களின் உறவின் அந்த உன்னதத்தை உணர்த்தின. ஒருநாள், தன் நிறுவனத்தில் எல்லோரும் கிளம்பிய பிறகு, "இந்தத் தனிமை என்னைக் கொன்றுவிடும்" என்று கூறி, செழியனை மூன்று மணி நேரம் தடுத்து நிறுத்தி, தன் இரண்டு நாய்கள், எடுக்கப்படாத கதைகள், தன் முதுமையின் பயம் குறித்துப் பேசி, அவர் ஒரு உயிலையும் முடித்தார்: "என் வேலை முடிந்தது, என் படங்களை ஒப்படைத்துவிட்டேன்; நீங்கள்தான் இதைக் அடுத்த இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்."

சில வாரங்கள் கழித்து, கண்ணாடிப் பெட்டியில் (இறுதிச் சடங்கில்) இருந்த குருவைப் பார்த்தபோது, செழியன் மீண்டும் அந்தப் பரிச்சயமான குரலைத் தன் மனதில் கேட்டார்: "வந்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ்ப்பா." செழியனின் புத்தக அலமாரியில், இறுதிவரை பாலு மகேந்திரா பரிசளித்த 'வீடு', 'சந்தியா ராகம்' திரைப்படங்களின் பிரதிகள் இருந்தன. அதில் பாலு மகேந்திராவின் சொந்தக் கையெழுத்தும் இருந்தது; உள்ளே, அந்தப் படங்களுக்கான சரியான கான்ட்ராஸ்ட், பிரைட்னஸ் அளவீடுகள் ஒட்டப்பட்டிருந்தன. ஒரு கேமராமேனின் கடைசி ஒளி அளவீடுகள், அதைப் பயன்படுத்தத் தெரிந்த ஒரே வாரிசிடம் ஒப்படைக்கப்பட்டன. அந்த நேர்காணலின் டிரான்ஸ்கிரிப்டைப் படிக்கும்போது, செழியன் எல்லாவற்றையும் போலவே இதையும் செய்ததை நான் காண்கிறேன்: அவர் தமிழ் ஒளியின் வரலாற்றைத் தொடர் ஓட்டமாக எழுதினார். அமைதியாக, சொல்லாமலேயே, அந்தத் தடி (ஒளி மரபின் பொறுப்பு) தன் கைக்கு வந்த தருணத்தை அவர் பதிவு செய்தார்.

அவர் ஒருபோதும் ஒளிப்பதிவாளர் மட்டுமன்றி, அரிய இலக்கியவாதியாகவும் இருந்தார். அவரது சிறுகதை "ஹார்மோனியம்" 2004-ல் கதா விருதை வென்றது. 2005 முதல் 2007 வரை ஆனந்த விகடனில் 'உலக சினிமா' பத்தி, தமிழ் வாசகர்களுக்கு உலகப்



படங்களை அறிமுகப்படுத்தியது – திரைப்பட விழாவுக்குச் செல்பவர்களுக்கோ அல்லது சினிமா மாணவர்களுக்கோ அல்ல, சாதாரண இல்லத்து வாசகர்களுக்காக. அந்தத் தொடர் பெரும் வெற்றியைப் பெற்றது, புத்தகங்களாக வெளியாகிப் பல பதிப்புகளைக் கண்டது - மசாலாப் படங்கள் மட்டுமே விரும்பும் என்று விமர்சகர்கள் கருதிய கூட்டம், அன்புடனும் தெளிவுடனும் எழுதப்பட்ட உலகப் படங்களை விரும்பியது என்பதற்கு அது சான்று. ஜெயகாந்தனிடமிருந்து அவர் கடன் வாங்கி தனதாக்கிக்கொண்ட ஒரு வேறுபாட்டுடன் புத்தகங்கள் தொடங்கின: உலக சினிமா என்பது ஒன்று, சினிமா உலகம் என்பது வேறு. சினிமா உலகம் என்பது தொழில் - சந்தைகள், வதந்திகள், நட்சத்திரங்கள். உலக சினிமா என்பது இனம், மதம், மொழி கடந்து மனிதர்களின் உணர்வுகளைப் பேசும் கலை; அதன் உலகளாவிய இலக்கணம், மௌனத்தின் ஆழத்திலிருந்து பொங்கும் சிரிப்பும் அழுகையுமே என்று அவர் எழுதினார். ஒவ்வொரு கட்டுரையிலும் அவரது பதிப்பாளர்கள் சரியாகச் சொன்னது போல, பறவை மொழி இருந்தது - ஒன்றரை பக்கத்தில் ஒரு படத்தின் ஆன்மாவைப் பிடிக்கும் கவித்துவமான, சுருக்கமான மொழி. இது விருந்தோம்பலாக இருந்த விமர்சனம்: அவர் கலையைத் தடுத்து நிறுத்தவில்லை, விருந்து வைத்தார். அந்தப் பத்திகளைப் படித்த வாசகர்கள் அடுத்த தசாப்தத்தின் விழாப் பார்வையாளர்களாகவும் சிறிய படங்களை எடுப்பவர்களாகவும் வளர்ந்தனர்-அவர் தனது சொந்த படங்கள் புரிந்துகொள்ளப்படுவதற்கான நிலத்தைத் தயார் செய்திருந்தார்.

சத்யஜித் ரேயின் மீதான செழியனின் ஈடுபாடு மிக ஆழமானது; அது வெறும் ரசனை என்பதைத் தாண்டி, ஒரு துல்லியமான உழைப்பாகவே மலர்ந்தது. ரேயின் திரைக்கதைகளைத் தமிழுக்கு மொழிபெயர்த்ததில் ஒரு குறியீட்டு அர்த்தம் உண்டு: இந்தியக் கலை சினிமாவின் அடித்தளமான 'பதேர் பாஞ்சாலி' (அவரது முதல் படம்), ரேயின் இறுதிப் படைப்பான 'அகந்துக்' ஆகிய இரண்டையும் அவர் மொழிபெயர்த்தார். அந்த மாபெரும் கலைஞனின் வாழ்வின் தொடக்கத்தையும் முடிவையும் தன் கைகளுக்குள் ஏந்தி, தாய்மொழிக்குக் கொண்டுவந்ததன் மூலம், ரேயின் முழு கலைப் பயணத்தையும் செழியன் தமிழின் சொத்தாக மாற்றினார்.

ஒரு ஒளிப்பதிவாளராகத் திரைக்கதையை மொழிபெயர்ப்பது என்பது சாதாரணமல்ல. அது வெறும் கதையை மொழிபெயர்ப்பது அல்ல; ஒரு வரைபடத்தைப் (blueprint) பிரதி எடுப்பது போன்றது. காட்சிகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் நுட்பமான கேமரா கோணங்களையும் வரிகளுக்கு இடைப்பட்ட மௌனத்தையும் உள்வாங்கி, அந்தப் படங்களின் மிகச்சிறந்த 'டெகூபே' (découpage) முறையைத் தலைகீழாகப் பிரித்து (reverse-engineering), அதன் உயிர்நாடியைத் தமிழ் வாசகர்களுக்குக் கொண்டு சேர்த்தார்.

இந்த மரபுப் பயணம் ரேயுடன் நிற்கவில்லை. ரேயின் வாரிசாகக் கருதப்படும் அடூர் கோபாலகிருஷ்ணன், இலங்கை மேதை பிரசன்னா விதானகே ஆகியோருடனும் செழியனுக்கு நெருக்கமான பிணைப்பு இருந்தது. அந்த நெருக்கம் வெறும் சடங்கு அல்ல; அது ஒரு தொடர் உரையாடல். தனது ஒவ்வொரு புதிய படைப்பையும் அடூரின் இல்லத்திற்கே கொண்டு சென்று திரையிட்டு, தான் தேர்ந்தெடுத்த அந்தப் பெருங்கலைஞர்களின் தீர்ப்புக்குச் சமர்ப்பிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மரபை உரிமை கோருவதை விட, அதன் கடமைகளைச் செய்வதிலேயே அவர் பணிவு கொண்டார்.

"நல்ல படங்கள் தமிழில் உருவாக வேண்டுமெனில், நுட்பங்கள் தமிழில் விளக்கப்பட வேண்டும்" என்பதில் அவர் உறுதியாக இருந்தார். 'பேசும்படம்', 'முகங்களின் திரைப்படம்' போன்ற தனது நூல்கள் வழியாக, சினிமா என்பது பெருநகரங்களின் சொத்து மட்டுமல்ல என்பதை உடைத்துத் தரைமட்டமாக்கினார். காரைக்குடியிலிருந்து வந்த அந்தப் பொறியியல் மாணவர், தான் கடந்து வந்த ஒவ்வொரு தடையையும் புத்தகங்களாகப் பிரித்து எழுதி வைத்ததால்தான், இன்று ஏதோ ஒரு சிறிய நகரத்தில் இருக்கும் அடுத்த செழியன், திறக்கப்பட்ட

கதவுகளின் வழியாக ஒளி உலகத்திற்குள் நுழைய முடிகிறது.

இசைமீதும் அவர் இதே அக்கறையைத் தொடர்ந்தார். மேற்கத்திய செவ்வியல் இசைகுறித்து இரண்டே ஆண்டுகளில் இரண்டாயிரம் பக்கங்களைக் கையெழுத்துப் பிரதிகளாக எழுதினார். அவரது துணைவியார் பிரேமா தட்டச்சு செய்ய, அவை 'தி மியூசிக் ஸ்கூல்' என்ற அச்சகத்தின் பெயரில் பத்து தொகுதிகளாக வெளிவந்தன. லண்டன் டிரினிட்டி கல்லூரியில் அவர் பயின்ற அந்த உயரிய கலை, நகரத்துச் சுவர்களுக்குள் முடங்கிவிடக் கூடாது என்பதற்காக, 2012-ல் சாலிகிராமத்தில் அதே பெயரில் ஒரு இசை அகடமியையும் நிறுவினார். அறிவைப் பகிர்ந்துகொள்வதே ஒரு கலைஞனின் அழியாத கையொப்பம் என்பதை செழியன் தனது வாழ்நாள் முழுவதும் நிரூபித்தார்.

அவரது உரைநடையைப் படிக்கும்போது, ஒளிப்பதிவாளரும் அறிவுஜீவியும் ஒருபோதும் இருவர் அல்ல என்பது புரியும். தமிழ் புலம்பெயர்ந்தோருக்காக அவர் எழுதிய கட்டுரை, ‘From the Obscura to the Alexa,’ முதலில் கேமரா தொழில்நுட்பத்தின் வரலாறுபோலத் தோன்றும்; ஆனால், அது ஒரு சினிமா தத்துவமே. அது ஒரு இயந்திரத்துடன் தொடங்கவில்லை, ஒரு நினைவகத்துடன் தொடங்குகிறது. ‘இரண்டு நண்பர்கள் சைக்கிளில் அடுத்த ஊருக்குச் சென்று, நள்ளிரவு நிலவொளியில் வீடு திரும்பும் அந்த அனுபவம், வருங்கால சந்ததி அறியாத ஒன்று’ என்று அவர் ஒருமுறை எழுதினார். அந்த வரிகளுக்குள் ஒரு தத்துவஞானியின் இயங்கியல் பார்வை ஒளிந்திருந்தது: ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் நமக்கு வசதிகளைத் தந்து மகிழ்விக்கிறது; ஆனால், அதே வேகம் நம்மிடமிருந்து மீட்க முடியாத சில அனுபவங்களை மெல்லப் பறித்துக்கொள்கிறது. சினிமா தனது மாயையையும் மந்திரத்தையும் கடந்த நூறு ஆண்டுகளில் இழந்துவிட்டதாக அவர் வால்டர் பெஞ்சமினின் பார்வையில் அவதானித்தார். ஆனால், அந்தத் தத்துவத்தை அவர் நூலகங்களில் தேடவில்லை; சைக்கிள் பயணத்தில் நிலவொளியின் கீழ் உணர்ந்தார். ஏக்கமுமின்றி, அதே சமயம் வெற்றிக்களிப்புமின்றி, வரலாற்றை அவர் எதிர்கொண்ட விதம் வியக்கத்தக்கது.

அவரது வரலாற்றாய்வு அமைதியான அரசியலைக் கொண்டிருந்தது. சினிமாவின் வரலாறு எந்த ஒரு தனி மேதையின் சொத்தும் அல்ல என்பதை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். அரிஸ்டாட்டிலின் ஒளிக்கருவி முதல், மைப்ரிட்ஜின் இருபத்து நான்கு கேமராக்கள் வரை ஒவ்வொரு கண்டுபிடிப்பாளரும் ஒரு தொடர் விசாரணையில் தத்தமது பங்களிப்பைச் சேர்த்தனர். ஆனால், அவரது மனம் எப்போதுமே வரலாற்றின் ஓரங்களில் மறைக்கப்பட்டவர்கள் மீதே பாய்ந்தது. எடிசனுக்கு முன்பே காகிதத்தில் படம் பிடித்து, நியூயார்க் பயணத்தில் மாயமாய் மறைந்த லூயிஸ் லே பிரின்ஸ்; லூமியர்களுக்கு முன்பே பெர்லினில் படங்களைத் திரையிட்டும் வரலாற்றால் மறக்கப்பட்ட ஸ்கலாடனௌஸ்கி; காப்புரிமைப் போர்களில் எடிசனால் பெயரிழந்து போன போட்டியாளர்கள். மற்றவர்களின் பிம்பங்களை ஒளிமிக்கதாக மாற்றிய செழியன், வரலாறு எப்படி வரவுகளை ஒதுக்கி, இழப்புகளை அநீதியாக்குகிறது என்பதை நன்கு அறிந்திருந்தார். அதனால்தான் அவர் மெனக்கெட்டு தோற்றவர்களை மீண்டும் வரலாற்றின் பக்கங்களில் எழுதினார்.

தொழில்நுட்பச் சொற்களைத் தமிழுக்குத் தந்து, சினிமாவின் நுட்பம் தமிழர்களின் கைகளில் இருக்க வேண்டும் என்று அவர் உழைத்தார். அவரது கட்டுரையில் புதைந்திருக்கும் இந்த வரி, அவருக்கான ஆகச்சிறந்த நினைவஞ்சலி: ‘கேமரா மட்டுமே நேரத்தைப் பதிவு செய்யும் வேலையைச் செய்கிறது; கேமராவிற்கு நிகழ்காலம் மட்டுமே உண்டு.’ அது கடந்த காலத்தின் குழப்பத்தையோ அல்லது எதிர்காலத்தின் பயத்தையோ சுமப்பதில்லை. இதுவே அவரது அழகியலின் சாராம்சம்: பிரேம்களின் பொறுமையான நிகழ்கால கவனிப்பு, செயற்கையான உணர்ச்சிகளைத் தவிர்த்த நேர்மை, அலங்காரங்கள் தேவையில்லை என்ற ஆழமான நம்பிக்கை. அவரது கேமரா நினைவுகூரவில்லை அல்லது எதிர்பார்க்கவில்லை; அது சாட்சியாக மட்டுமே நின்றது. ஆனால், அவரது பிம்பங்கள் திரையில் முடிந்த பிறகும் நம்முள் ஏன் வலிக்கின்றன? ஏனென்றால், அவர் பதிவு செய்த நிகழ்காலத்தின் சுமையை, பார்வையாளர்களாகிய நாம் கடந்த கால நினைவுகளாகச் சுமக்க விடப்பட்டுள்ளோம்.

அனைத்தும் - வம்சாவளி, கற்றல், கொள்கை - 'டூ லெட்' (2017) படத்தில் ஒன்றிணைந்தன. எழுத்தாளர், இயக்குநர், ஒளிப்பதிவாளராக அவரது முதல் படம். ‘ஐடி-பூம்’ சென்னையில் ஒரு வாடகை வீடு தேடும் சிறு குடும்பத்தைப் பற்றிய படம், அது உண்மையில் கண்ணியம் நிற்கும் வெளியைத் தேடும் படம். அவரது துணைவியார் பிரேமா தயாரித்த, நிமாய் கோஷ் காலத்து இணை சினிமா முறையில் குடும்பத்திற்குள் நிதியளிக்கப்பட்டு, ஒரு துளி பின்னணி இசையுமின்றி எடுக்கப்பட்டது — மேற்கத்திய செவ்வியல் இசையில் பயிற்சி பெற்ற மனிதரிடமிருந்து இது வந்தது. அதற்குப் பதிலாகப் பழைய தமிழ் பாடல்கள் வானொலி, தொலைக்காட்சிகளிலிருந்து ஒலிக்கின்றன. நகரத்தின் சத்தத்திற்குள் ஏக்கம் பிணைக்கப்பட்டுள்ளது. நீண்ட காட்சிகள் மற்றும் நகரும் கேமரா, ஒரு கதாபாத்திரத்தின் அகத்தன்மையுடன், ஒரு உலகளாவிய பெருநகரத்தின்



டு லெட்

புறநிலை வீட்டு எதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றன; அதன் மிக அமைதியான பேரழிவு, ஒரு வீட்டு உரிமையாளரின் கேள்விதான் - "நீங்கள் சைவமா?" - சாதி ஒரு கதவை எந்தக் கருத்துமின்றி மூடுகிறது. 'ஜம்ப் கட்' (எண். 59, இலையுதிர் 2019) இதழில் நான் எழுதியது போல, தமிழ் சினிமாவின் நூற்றாண்டு விழாவில் 'டு லெட்' வந்தபோது, தேர்ந்த விமர்சகர் சிதானந்த தாஸ் குப்தா முதல் ஆசான் தியோடர் பாஸ்கரன் வரை விமர்சகர்களின் அரை நூற்றாண்டு கால குற்றச்சாட்டுக்கு - தமிழ் சினிமா உண்மையான இணை சினிமாவை உருவாக்கத் தவறிவிட்டது - விடையளித்தது. அது ரேயின் எதார்த்தவாத அழகியலின் தமிழின் தனிப்பட்ட வாரிசாக அமைந்தது: 'பைசைக்கிள் தீவ்ஸ்' படத்தின் புதிய எதார்த்தவாத வரிசை, இடம், கால அளவு, சொல்வதை விடக் காட்டுதல்; இது அடூர், காசரவள்ளிக்குப் பின்னர் தமிழுக்கு வந்தது.

அந்த நெருக்கம் கல்விசார்ந்ததல்ல. டிசிகாவின் படத்தை அவர் தனது தாத்தா மூலம் ஒருமுறை நினைவு கூர்ந்தார், அவர் சைக்கிள் வாடகை கடை வைத்திருந்தார். திருப்பிக் கொடுக்கப்படாத சைக்கிளைத் தேடி பல நாட்கள் மறைந்து விடுவார், அன்டோனியோ ரிக்கி போல. எப்போதும் வெற்றி பெறாமல் வீடு திரும்புவார். புதிய எதார்த்தவாதம் அவர் கற்ற பாணி அல்ல; அது திரையில் அவர் கண்டறிந்த ஒரு குடும்ப நினைவகம். 'டு லெட்' ஆர்மீனியாவிலிருந்து ஸ்பெயின் வரை விழாச் சுற்றுகளில் பயணம் செய்தபோது, கொல்கத்தாவில் சிறந்த இந்திய மொழிப் படத்திற்கான 'கோல்டன் பெங்கால் டைகர்', இத்தாலியில் சர்வதேச ஒளிப்பதிவு விருது, மற்றும் சிறந்த தமிழ்த் திரைப்படத்திற்கான தேசிய விருதை வென்றது. அடூர் கோபாலகிருஷ்ணனின் பாராட்டைப் பெற்றது. அவர் அதை ஒரு அறிவார்ந்த, அழகான படம் என்று அழைத்தார். செழியன் எழுத்துக்குப் பிறகு, இறுதியில் உலக சினிமாவைத் தனது மக்களுக்காக இயக்கத்தின் மூலமாகவும் மொழிபெயர்த்தார், முதலில் ரேயைத் தமிழ் உரைநடையாக, இறுதியாக ரேயைத் தமிழ் ஒளியாக. அவர் ஒரு சமரசமற்ற கலைஞராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். தொழில் துறை அவரை மையத்தில் விரும்பிய அதே தருணத்தில் அவர் மையத்திலிருந்து வெளியேறினார் என்று நான் அப்போது எழுதினேன். அவரது நினைவஞ்சலியின் நிபந்தனைகளை நான் முன்கூட்டியே எழுதுகிறேன் என்று நான் அன்று அறிந்திருக்கவில்லை.

'டு லெட்' படம் எப்படி உருவானது என்பதை செழியனின் துணைவியார் பிரேமா, தயாரிப்பாளரின் கணக்குப் புத்தக துல்லியத்துடனும் மனைவியின் மென்மையுடனும், தமிழ் இதழ் 'தோழி'க்கு, ஊடகவியலாளர் மகேஸ்வரி அவர்களுக்கு அளித்த நேர்காணலில் சொல்லியிருக்கிறார்: அவர்கள் 2000-ல் திருமணம் செய்து கொண்டனர், 'அலைபாயுதே' திரையரங்குகளில் புதியதாக இருந்தபோது. அவர் 'டு லெட்' கதையை 2007-லேயே எழுதியிருந்தார், படமாக்குவதற்கு ஒரு தசாப்தத்திற்கு முன்பு, படம், அவர்கள் வாழ்க்கையிலும் நண்பர்களின் வாழ்க்கையிலும்

நடந்தவற்றின் தொகுப்பு என்கிறார். படப்பிடிப்பு தொடங்கவிருந்தபோது, பணமதிப்பிழப்பு தாக்கியது. உறைந்த பணத்தால் மனமுடைந்து, ஸ்கிரிப்டை கைவிட்டார் செழியன். துணைவியார்தான் அந்தத் தீர்ப்பை மறுத்தார். "செலவுகள் என் பொறுப்பு. நீங்கள் படப்பிடிப்பைத் தொடங்குங்கள். பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்று அவரிடம் கூறினார். அவர் நம்பாமல் சிரித்தார்; படம் முடிந்தபோது அவர் உண்மையாகவே, அது எப்படி சாத்தியமானது என்று ஆச்சரியப்பட்டார். அவர் அம்மா அவருக்குத் திறமையான மனைவியைத் தேர்ந்தெடுத்திருந்ததில் அவருக்கு மகிழ்ச்சி - "எனக்கு வேறு என்ன விருது வேண்டும்?" 'டூ லெட்' படத்தின் புகழ்பெற்ற சிக்கனத்திற்குப் பின்னால் ஒரு பெரிய அர்ப்பணிப்பு இருந்தது; அது ஒரு திரைப்படம் என்பதைக் கடந்து, அது அவர்களின் வீடே. பயன்படுத்திய பழைய ரேடியோ, ஹேண்ட்பேக், ஹீரோ கையில் இருந்த அடிபட்ட நோக்கியா போன், தலையணைகள் என அனைத்தும் அவர்களின் சொந்தப் பொருட்கள். அந்தச் சிறுவனின் பொம்மைகள், அவர்களின் குழந்தைகளின் பொம்மைகளே. வீட்டைக் காலி செய்யும் காட்சியில் வரும் அந்தப் பொருட்களின் பொதிவுகள் அனைத்தும் அவர்கள் பொருட்களே. சுவரில் இருந்த 'டூ லெட்' பலகையை அவர்களின் மகள் அதிதா எழுத, மகன் சிபி அந்தச் சுவரைக் கிறுக்கல்களால் நிரப்பினான். குடும்பம் திரையில் தோன்றவில்லை; ஆனால், அந்தப் படம் முழுவதுமே அந்தத் தம்பதியின் குடும்பத்தால் ஆனது.

இந்த வெற்றிக்கான புவியியல், ஒரு ஆழமான தனிப்பட்ட காயத்தை மறைத்திருந்தது. கொல்கத்தாவில் வேறொரு படப்பிடிப்பில் இருந்தபோது செழியனின் தாயார் எதிர்பாராதவிதமாகக் காலமானார். அந்த நகரத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு நொறுங்கிய மனதுடன் அவர் வெளியேறினார். அதே கொல்கத்தா நகரத்தில் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாவில்தான், பன்னிரண்டு உலகளாவிய படைப்புகளைப் பின்னுக்குத் தள்ளி 'டூ லெட்' தனது முதல் விருதை வென்றது. வெற்றியாளரின் பெயர் வாசிக்கப்பட்ட அந்தத் தருணத்தில், மேடைக்குத் தனது மனைவி பிரேமாவை அழைத்து, "இப்படத்தின் தயாரிப்பாளர் இவள்" என்று அவர் பெருமிதத்துடன் அறிவித்தார். தனது தாயின் வெற்றிடத்தை அந்த மேடையில் உணர்ந்த அவரது கண்கள் கண்ணீருடன் மின்னின.

மாதங்களுக்குப் பிறகு, தமிழ் புத்தாண்டுக்கு முந்தைய நாள் தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்ட அந்தத் தருணம், அவர் குடும்ப வாழ்வில் இன்னொரு திருப்புமுனை. தேசிய விருதுகளின் இறுதிப் பட்டியலில் 'டூ லெட்' பெயர் ஒலிக்க, துணைவியாரும் குழந்தைகளும் மகிழ்ச்சியில் வீட்டை அதிரச் செய்தனர். ஆனால், செழியன் மட்டும் அதே சிறிய, அமைதியான புன்னகையுடன் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார். 'டூ லெட்' என்பது வெறும் திரைப்படம் அல்ல; 'அது தன் அருமை மகள்' என்று அவரது துணைவியார் இன்றும் அன்போடு சொல்கிறார்.

"அவர் நல்ல பாடகர், சிறந்த ஓவியர்," என்று தனது துணைவியாரால் விவரிக்கப்படும் செழியன் தூங்கிய நேரத்தைப் பொருட்படுத்தாமல் தினமும் அதிகாலை நான்கரை மணிக்கே எழுந்தவர்; மிகப்பெரிய மகிழ்ச்சி தரும் தருணத்தைச் சாதாரண நிகழ்வாகப் பார்த்தவர்; குரலை உயர்த்தாதவர்; அதிகாரத்தைப் பயன்படுத்தாதவர், பெண்களுக்கு இயல்பாக மரியாதை அளித்தவர், மற்றவர்களின் குறைகளுக்கு அப்பால் திறமைகளை மட்டுமே பார்க்க முடிந்தவர். அவரது கையெழுத்து அச்சுக்கோர்த்தது போல இருந்தது என்று கூறும் திருமதி பிரேமா, அவசரத்தில் எழுதிய முகவரி கூட அழகாகக் கிழித்த காகிதத்தில் அச்சிட்ட விசிட்டிங் கார்டு போல இருந்தது என்கிறார்: 'பரதேசி' படத்தின்போது, படம் முழுவதும் கார்டுகளில் வரைபடங்களாக வரைந்தார், பிறகு படத்தின் தலைப்பு எழுத்துக்களை அவரே எழுதினார். ரே, ட்ரினிட்டி கல்லூரி, உலக சினிமாவின் இந்த மாணவர், தன் பெயரை எப்போதும் தமிழில் மட்டுமே கையெழுத்திட்டார்.

சினிமா வரலாறுகுறித்த அவரது கட்டுரை, வழக்கம்போல, கொண்டாட்டத்துடன் அல்லாமல், வாசகர்களிடமும் தன்னிடமும் கேட்கும் கேள்வியுடன் முடிகிறது: பல தலைமுறைகளின் உழைப்பும் தியாகமும் உருவாக்கியதை இவ்வளவு எளிதாகப் பெற்றிருக்கும் நாம் - அதைக் கொண்டு என்ன செய்கிறோம்? அவரது படங்கள், புத்தகங்கள், மொழிபெயர்ப்புகள், அவரது மாணவர்களே அவரது பதில்கள்.

செழியனின் முழுக்கலையும், இன்று பார்க்கையில் காத்திருப்பதன் கலையாகத் தோன்றுகிறது. அவர் சிவகங்கையிலிருந்து அதிகாலையில் இருட்டில் முதல் பேருந்துக்காகக் காத்திருந்தார்; பிறகு, அரச மரத்தின் கீழ் தனிமையில், சூரியனுக்காகக் காத்திருந்தார்; ஒரு கதையை முழுமையாக நேர்மையாகப் படமாக்க முடியும் வரை பத்து ஆண்டுகள் வைத்திருந்தார்; 'கல்லூரி' படத்தின் பேருந்து உட்புறக் காட்சிகளைச் சூரியன் ஒளிவீச வரும் நேரத்திற்காகத் திட்டமிட்டார்; சினிமா உலகில் ஒளியைத் தேடிப் பலரும் ஓடிக்கொண்டிருக்கையில், செழியன் மட்டும் ஒரு காட்சிக்காகக் காத்திருந்தார். கண் இமைக்காமல், இயற்கை தன் ரகசியத்தை அவரிடம் தானே சொல்லும் வரை, ஒரு முனிவரைப் போலப் பொறுமையுடன் காத்திருந்தார். உலகிற்கு சினிமா என்பது நேரத்தைத் தோற்கடிக்க வேண்டிய ஒரு வேகமான எதிரியாகத் தெரிந்தபோது, செழியனுக்கு அது ஒரு பழைய

கூட்டாளியாக இருந்தது. அவர் கடைப்பிடித்த அந்தத் தயக்கம், ஒருபோதும் செயலற்ற நிலை அல்ல; அது பிரார்த்தனைக்கு இணையான ஒரு தியானிப்பு. ஒளியை நாம் கட்டாயப்படுத்திப் பெற முடியாது, அதை மென்மையாக வரவேற்றுப் பெறவே முடியும் என்ற பெரும் உண்மையை அவர் உணர்ந்திருந்தார். ஷட்டரைத் திறப்பதற்கும் பிம்பம் உருவாவதற்கும் இடைப்பட்ட அந்த இருண்ட கணத்தை, அவர் நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் பாதுகாத்தார். விடியற்காலையின் முதல் ஒளிக்கீற்றுடன் அவர் செய்துகொண்ட அந்த உடன்படிக்கைதான், நாம் திரையில் காணும் ஒவ்வொரு காட்சியின் உயிர்ப்பு.

நாளைச் சூரியன் உதிக்கும்போது, அவர் சார்ந்திருந்த அரச மரம் இலை இலையாக மின்னும்; ஆனால், அந்த ஒளியைப் பிடித்து வைக்க வேண்டிய கைகள் மட்டும் அங்கிருக்காது என்பதுதான் நமது ஆழ்துயரம். சிறுவயதில் சிவகங்கையிலிருந்து மதுரைக்கு பிலிம் ரோல்களைச் சுமந்து சென்றபோது கற்ற அந்தப் பொறுமை, இருட்டறையில் 'டெவலப்பிங் ட்ரே'யில் காகிதம் சிவப்பு மௌனத்துடன் காலியாக இருக்கும்போது கண்ட அந்த அதிசயம் – இவை அனைத்தும் இருளைப் பயமாகக் கருதாமல், பிம்பங்கள் கருக்கொள்ளும் கருப்பையாக அவர் பார்த்ததின் விளைவு. அந்த இருள் பிம்பம் முடிவடையும் இடமல்ல; அது ஒளியும் மனமும் ஒன்றிணையும் தொடக்க புள்ளி என்பதை அவர் அறிந்திருந்தார்.

உங்கள் கேமரா இப்போது ஓய்ந்திருக்கலாம்; ஆனால், இருட்டறைகளின் தனிமையிலும் திரையரங்குகளின் மௌனத்திலும் நீங்கள் கண்டடைந்த ஒளியின் தரிசனங்கள், இனி வரும் தலைமுறைக்கு என்றும் வழிகாட்டியாக நிலைத்திருக்கும். கலையை ஒரு எளிய தவமாக மாற்றிய உங்கள் நேர்மை, காலத்தின் எந்தச் சோதனையிலும் சிதையாதது. ஒளியைக் கையாள்வதில் நீங்கள் காட்டிய அசராத பொறுமையும் அதன்பால் நீங்கள் கொண்ட பணிவும் எங்களை என்றும் வழிநடத்தும். ஒளியின் கலைஞனே, உங்கள் பிம்பங்கள் திரையிலிருந்து மறைந்தாலும், நீங்கள் விட்டுச் சென்ற அந்த ஒளிச்சுடர் உங்கள் மாணவர்களின் வழியாக என்றும் சுடர்விட்டுக்கொண்டிருக்கும்; நீங்கள் விதைத்த அந்த ஒளியின் தாக்கம், நமது கூட்டு நினைவுகளில் என்றும் நீங்காத சுவடாகப் பதிந்திருக்கும். ●

சொர்ணவேல் <mswarnavel@gmail.com>

நேர்காணல்கள், முதன்மை ஆதாரங்கள்

- செழியன். சொர்ணவேல் நேர்காணல். காட்சிப்பிழை (Katchippizhai).
- செழியன். "From the Obscura to the Alexa." FeTNA மாநாட்டு மலரில். வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, 2015.
- மகேஸ்வரி. "அவர் நல்ல பாடகர், சிறந்த ஓவியர்" – திருமதி பிரேமா செழியனுடன் நேர்காணல். தோழி (Thozhi).
- சுந்தரம், தளவாய். "RIP Chezhian | இப்படியும் ஒரு மனிதன்! செழியனுடனான வீடியோ நேர்காணல்." YouTube: https://www.youtube.com/watch?v=5ZZtnoDuzh4.

செழியன் படைப்புகள்

- செழியன். உலக சினிமா (World Cinema). 3 தொகுதிகள். சென்னை: விகடன் பிரசுரம் (ஆனந்த விகடனில் தொடராக வந்தது), 2005–2007.
- செழியன். பேசும்படம்: கடைசி இருக்கையிலிருந்து சில குறிப்புகள்.
- செழியன். முகங்களின் திரைப்படம் (The Film of Faces).
- ரே, சத்யஜித். பதேர் பாஞ்சாலி (திரைக்கதை). செழியனின் தமிழ் மொழிபெயர்ப்பு.
- ரே, சத்யஜித். அகந்துக் (திரைக்கதை). செழியனின் தமிழ் மொழிபெயர்ப்பு.
- செழியன். "ஹார்மோனியம்". சிறுகதை; கதா விருது, 2004.
- செழியன், திருமதி பிரேமா செழியன். தி மியூசிக் ஸ்கூல். 10 தொகுதிகள். சென்னை: தி மியூசிக் ஸ்கூல் பப்ளிகேஷன்ஸ்.

துணை ஆதாரம்

- சொர்ணவேல். "Contemporary Tamil Cinema and Its Departure from the Mainstream: Manusangada/Cry Humanity and To Let." ஜம்ப் கட்: எ ரிவியூ ஆஃப் கான்டெம்பரரி மீடியா, எண். 59 (இலையுதிர் 2019). https://www.ejumpcut.org/archive/jc59.2019/Eswaren-Tamil/.

திரைப்படங்கள்


- கல்லூரி (2007); தென்மேற்குப் பருவக்காற்று (2010); பரதேசி (2013); ஜோக்கர் (2016); தாரை தப்பட்டை (2016); டு லெட் (2017); மூன்றாம் பிறை (1982); வீடு (1988); சந்தியா ராகம் (1989); தலைமுறைகள் (2013); அலைபாயுதே (2000); பதேர் பாஞ்சாலி (1955); அகந்துக் (1991); பைசைக்கிள் தீவ்ஸ் (1948); இன் தி மூட் ஃபார் லவ் (2000).


மரமேறி

• T. தம்பிமுத்து தமிழில்: **எழுத்துக்கினியவன்**

எதை ஒரு மனிதன் விரும்புகிறானோ அதுவே அவனை இறுதியில் கொன்று விடும். நான் சிறுவனாக இருந்தபோது மரமேறி வேலுவுக்கு நடந்ததைப் பார்த்ததால் இது உண்மை என்று நினைத்தேன்.

இலங்கையின் அச்சுவேலிக் கிராமத்தில் இருக்கும் தாடித் தாத்தாவின் தோப்புகளில் தான் சிறு பிராயத்தில் இருந்தே வேலு வேலை செய்து வந்தான். பழைய வழக்கப் படி அவன் ஆய்கிற ஒவ்வொரு நூறு தேங்காய்களுக்கும் பத்துக் காய்கள் அவனுக்குக் கூலியாக வழங்கப்பட்டன. நாங்கள் எங்கள் பெற்றோருடன் கொழும்பு நகரில் வசித்தோம். அங்கே தான் பள்ளிக்கூடம் போனோம். ஆனால், நீண்ட பள்ளிக்கூட விடுமுறைகளை அச்சுவேலியில் தான் கழித்தோம். இத்தகைய விடுமுறைகளில் நாங்கள் முதல் செய்வது வேலுவைத் தேடித் தென்னந்தோப்புக்குப் போவதுதான். அவன் எந்த நேரமும் ஏதாவது ஒரு வேலை செய்தபடியே இருப்பான். பனங்கள்ளு தான் திறமானது. பனைமரங்களிலிருந்து கள்ளிறக்க முடியாத மாதங்களில் தென்னை மரங்களிலிருந்து கள்ளிறக்குவான். அல்லது கூரை வேய்வதற்குக் கிடுகு பின்னுவதற்காகக் காய்ந்து போன தென்னோலைகளைக் கீழே இறக்குவான், அல்லது தேங்காய்களைக் கொப்பறா ஆக்குவதற்காகக் காய வைப்பான். கொப்பறா இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் முக்கியமானதொன்றாக இருந்தது. உலகத்திலேயே வளர்ப்பதற்கு எளிதான பயிர் தென்னைதான். எனக்குத் தெரிந்த வரையில் தாராளமாக அள்ளிக் கொடை வழங்கும் தருவாகவும் தென்னையே இருந்தது. இடைக்கிடை அறுவடை காலங்களில் வரும் உதவியாளர்களின் உதவியைத் தவிர, அவன் தனியொருவனாகவே இருநூறு தென்னை மரங்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தான். சில வேளைகளில் அவன் தென்னங்கன்றுகளை நடுவதைக் கண்டிருக்கிறோம். ஒரு பாழடைந்த கிணற்றுக்குள் விதைத் தேங்காய்களை மாதக் கணக்கில் ஊற வைத்தபிறகு, மூன்றடிக்கு ஒன்றாகக் குழி தோண்டி நடுவார்கள். ஒவ்வொரு குழியிலும் உரமாகக் கொஞ்சம் சுண்ணாம்பும் உப்பும் தூவுவார்கள்.





அணில், முள்ளம்பன்றி, எலி, பழ வௌவால் போன்ற பீடைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு தென்னங்கன்றையும் சுற்றிவர ஓலைத் தட்டியால் வேலி கட்டுவான் வேலு. அடிக்கடி அவற்றின் பாத்திகளிலிருந்து களை பிடுங்கி, தண்ணீர் ஊற்றிப் பராமரிப்பான். இளங்குருத்துகளை நாசம் பண்ணும் குடம்பிகள், கறையான்கள், வண்டுகள் போன்றவை பீடித்து விடாமல் பாதுகாப்பான். தென்னங்கன்றுகள் கொஞ்சம் வேரூன்றியதும் அவன் செலுத்தும் கவனமும் அதிகரிக்கும். ஒரு தென்னங்கன்று எட்டு வருடங்களில் வளர்ந்து முதலாவது முறையாகக் காய்க்கத் தொடங்கி விடும். தான் வளர்த்த மரங்களில் வேலு ஆழ்ந்த பாசம் வைத்திருந்தான். எனக்கும் என் சகோதரர்களுக்கும் அப்படியான பாசத்தின் மகத்துவத்தைக் மறக்க முடியாத வகையில் கற்பித்தான். தென்னந்தோப்புகளில் அதிசயங்களும் அன்பும் நிரம்பி வழிவன. அந்தத் தென்னைமயமான உலகத்தில் பல உற்சாகப் படுத்தும் சம்பவங்கள் நடப்பன.

1922ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் விடுமுறைக்காகத் தாத்தா வீட்டுக்கு வந்த கையோடு வேலுவைத் தான் முதலில் தேடிப் போனோம். காதாடிப் பூட்டனாரோடு வேலுவின் குடிசைக்கு நாங்கள் போய்ச்சேர்ந்தபோது சூரியன் மறையும் நேரமாகி விட்டது. பூட்டனாரின் காதுகளில் பெருத்த கடுக்கன் தோடுகள் தொங்கிக் கொண்டிருந்த படியால் தான் அவரைப் பற்றிப் பேசும்போது 'காதாடிப் பூட்டனார்' என்று குறிப்பிட்டோம். அடுத்து வரும் ஆறு வாரங்களுக்கு ஒவ்வொரு நாளும் செவ்விளநீர் தேவை என்று வேலுவிடம் சொல்வதற்குத் தான் பூட்டனார் எங்களுடன் சேர்ந்து வேலுவைத் தேடித் தானும் வந்தார். குளிர்பானமாக அருந்துவதற்கேயென்று



விசேடமாக வளர்க்கபடும் செவ்விளநீர் மரங்கள் அவை.

பழுப்பு நிற ஒலைத்தட்டிகளால் வேயப்பட்ட வேலுவின் செம்மண் குடிசை ஊரில் உள்ள மற்றக் குடிசைகளைப் போலத் தோற்றம் அளித்தாலும், அயலில் இருந்த குடிசைகளைவிட விசாலமானது. அச்சுவேலியில் இருந்த மற்றக் குடிசைகளைப் போலவே இதற்கும் பனையோலையாலேயோ தென்னங்கிடுகளாலேயோ சுற்றிவர வேலி போடப்பட்டு, அதே விதமாகச் செய்த தலைவாசலில் போய் முடிந்தது. தலைவாசலைத் திறந்தால் வெள்ளைக் குருமணற் பாதை. வலப்பக்கத்தில் இருந்த திறந்த கொட்டகைக்குள் வேலுவின் பசுமாடும் ஓரிரு ஆடுகளும் கட்டப் பட்டிருந்தன. இடப்பக்கத்தில் ஒரு குகை போன்ற வாயிலைக் கொண்டிருந்த ஓலையால் வேயப்பட்ட செம்மண் குடில் இருந்தது. மா, பலா மரங்களும் சில வாழை மரங்களும், அன்னாசிச் செடிகளும் குடிசையைச் சூழ்ந்திருந்தன. குடிசைக்கு முன்னால் ஒரு சிறியவீட்டுத் தோட்டம் இருந்தது. அச்சுவேலியிலேயே மிகவும் சீராகப் பராமரிக்கப்பட்ட வீட்டுத் தோட்டம் அது தான். பந்தலிலிருந்து தொங்கிய ஒரு யார் நீளமான புடலங்காய்கள் பச்சையும் வெள்ளியுமாக மினுமினுத்தன. கீழே வளரும் பாகற்காய், பட்டாணிச் செடிகளுக்கூடாக நீண்டு வளர்வதற்காகப் புடலங்காய்களின் நுனிகளில் ஓட்டுத் துண்டுகள் கட்டப் பட்டிருந்தன. கத்தரி, தக்காளி, வெண்டிக்காய்ச் செடிகள், நிலைக்குத்தாக நடப்பட்ட கம்பங்களுடன் வாழை நார்களால் இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. வெற்றிலைச் செடிகளும் பண்ணுக் கிழங்குச் செடிகளும் கம்பங்களைச் சுற்றிப் படர்ந்து மேலே ஏறின. பருத்த நீற்றுப் பூசணிக்காய்களும் செம்மஞ்சள் நிறப் பூசணிக்காய்களும் செம்மண் தரையில் படர்ந்திருந்த அகலமான இலைகளுக்கு நடுவே வீற்றிருந்தன.

வேலு வீட்டுக் கிணறு ஒரு மூலையில் இருந்தது. அதைச் சுற்றி வட்டமான வரிசைகளில் ஒரு நூறு தென்னை மரங்கள் தழைத்தோங்கி நின்றன. ஊரார் சொல்வதன் படி ஒரு ஆறு தென்னை மரங்களும் ஒரு பலா மரமும் ஒரு பசு மாடும் வயல் ஒன்றில் ஒரு பங்கும் ஒருவருக்கு உரித்தாக இருக்குமானால் அவருக்குக் குறையெதுவுமே கிடையாது. இந்தக் கணக்குப்படி பார்த்தால் வேலு மிக வசதியான வாழ்க்கை கொண்டவன்தான்.

நாங்கள் வந்ததை முதலில் கவனித்தது வேலுவின் மனைவி. அவள் ஒரு சிறிய சாதுவான பெண். நாங்கள் வந்தபோது தன் சமையலறையில் அடுப்பில் கறுத்த சட்டிபானைகளோடு மும்முரமாக ஏதோ வேலை செய்தபடி இருந்தாள். அவளது சாதி வழக்கப்படி ரவிக்கை போடாமல் சேலையை மட்டும் உடுத்து முந்தானையை இடது தோளுக்கு மேலாகப் போட்டிருந்தாள். ஒரு பக்கமாக, குதிரைலாடம் போல இருந்த களிமண் அடுப்புகளில் மாலை நேர நெருப்புகள் கோலாகலமாக எரிந்து கொண்டிருந்தன. உள்ளே இருந்த காட்சி, ஒரு சம்பிரதாய பூர்வமான, தன்னிறைவான, ஆனால், மர்மம் கலந்த காட்சியாக இருந்தது—அடுக்குச் சட்டிகள் கூரைச் சிலாகைகளிலிருந்து தொங்கும் உறிகளில் வைக்கப்பட்டிருந்தன. சுவரில் மாட்டப் பட்டிருந்த அழகான பனையோலைக் கொளுக்கிகளில் வேறுபல சட்டிபானைகள் நிரையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. இது ஒரு கிராமத்துப் பெண்ணின் தனிப்பட்ட உலகம்.

“வேலு! வேலூ!” என்று அவனது மனைவி குரலெடுத்துக் கத்தினாள். அவள் கத்தின விதத்திலேயே ஏதோ ஒரு விசேடம் இருக்கிறது என்று வேலுவுக்குப் புரிந்து விட்டது. ஆகவே அவன் மூச்சிரைக்க ஓடி வந்தான். எங்களைக் கண்டதும் அவனது கரடு முரடான சுள்ளித் தாடி கொண்ட உயிர்ப்பு நிறைந்த முகம் சடாரென மலர்ந்தது. தோளில் கிடந்த துண்டை உருவி எடுத்து, இடுப்பைச் சுற்றிக் கட்டி மரியாதை தெரிவித்தான். ஐம்பத்தொரு வயதாகி விட்டாலும், ஒரு இளைஞனைப் போலக் கோடுகள் விழாத சந்தோஷமான முகமும், வில் போன்ற உருவங்கொண்ட, இந்தியருக்கே உரித்தான, மென்மையான உதடுகளும் அவனுக்கு இருந்தன. அவனது முகம் உறுதியும் மென்மையும் கலந்த ஒரு அசல் கிராமத்து முகம். இந்தப் பிரதேசங்களுக்கு வருகை தருபவர்கள் இப்படியான முகங்களைக் கண்டு வியந்து, சிருங்கார ரசத்தோடு அவை பூக்கள் மாதிரி இருக்கும் முகங்கள் என்று சொல்வார்கள். வேலுவைப் பார்த்தால் ஏதோ கள்ளுக் குடித்துக் கொண்டாடிக் கொண்டிருந்து விட்டு வந்தவன் போல இருந்தான்.

“ஹூ! ஹூ! ஹூ! ஹூ!” என்று வாய்விட்டுச் சிரித்தான் வேலு. “இளனி குடிக்கிறத்துக்காக அச்சுவேலிக்குத் திரும்பி வந்திட்டீங்களா! வாங்கோ, வாங்கோ ராசாமார்! உங்களைப் பாக்கவே என்ர கண் குளிருது!”

வேலுவின் மகள், பதினாறு வயதான ஒரு அழகான பெண், நாற்காலிகளை வெளியே கொண்டு வந்து வைத்தாள். நாங்கள் உட்கார்ந்து அளவளாவும் நோக்கத்தோடு வரவில்லை என்றாலும் உட்காரச் சொல்லி வற்புறுத்தினார்கள். வேலுவின் மூத்த மகன் உயரமாக இடுப்பில் வேட்டியை மட்டும் அணிந்த கறுத்த அழகனாக நின்றான். குறுகிய இடைக்கு மேலே அவனது கைகளும் நெஞ்சும் செதுக்கின சிற்பம்போல உருண்டு திரண்டு இருந்தன. விருந்தினருக்குப் பரிமாறுவதற்காக மரவள்ளிக் கிழங்கும் பனங்கிழங்கும் சாமான் அறையிலிருந்து எடுத்துக் கொண்டு வரும்படி அவன் அனுப்பப் பட்டான். இளைய மகன் குண்டு ஒரு வெட்கச்

சிரிப்புடன் மசுங்கி நின்றான். அண்ணனுக்கு எதிர்மாறான சிவந்த நிறத்துடன் தலை நிறைய அடங்காமல் திமிறும் தலை முடியுள்ள, குறும்புத்தனம் நிறைந்த, ஒன்பது வயதுப் பையன்.

“ஹலோ, குண்டு,” என்று கொஞ்சம் சந்தேகத்துடன் அவனை மேலும் கீழும் பார்த்தபடி கேட்டேன். அவன் கைகளை முதுகுக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டான்.

“இந்த முறை மரமேறப் போறியளோ?” என்று கொஞ்சம் இறுமாப்புடன் தலையாட்டியபடி கேட்டான். குண்டு அவன் தந்தையைப் போலவே மரமேறுவதில் விற்பன்னன். போன தடவை நாங்கள் மரமேற முயன்றும் எங்களால் முடியவேயில்லை.

“யாருக்கு மரமேற வேணும்?” என்று அக்கறையில்லாதவன் போலக் கொஞ்சம் சூடாகப் பதில் சொன்னேன். ஆனால், அவன் புத்திசாலி! எனது மரமேறும் ஆசை அவனுக்கு அப்பட்டமாகத் தெரிந்தது.

வேலு அவசரமாக, “நீங்கள் ஏதாவது குடிக்க வேணும்!” என்றான்.

“இல்லையில்ல, இப்ப வேண்டாம்,” என்றான் எனது அண்ணன் இரத்தினம். ஏதாவது அருந்தச் சொல்லிக் கேட்கும்போது வேண்டாம் என்று மறுப்பதுதான் நல்ல பண்பான பழக்கம் என்று எங்கள் எல்லோருக்குமே தெரிந்த விடயம்.

ஆனால், அது ஒரு சம்பிரதாய பூர்வமான மறுப்புதான். தனது குடிசைக்குப் பக்கத்திலே வளரும் விசேடமான செவ்விளநீர் மரங்களிருந்து எங்களுக்குக் குடிபானம் தருவதிலிருந்து வேலுவை எந்தச் சக்தியும் நிறுத்த முடியாது. வெள்ளை வெளேரென்று இருந்த வேட்டியைத் தன் கால்களுக்கிடையில் கொடுக்குக் கட்டிக் கொண்டு கிடுகிடுவென அந்த மூன்றுக்குள் உயரமாக இருந்த மரத்தில் ஏறினான். அதுதான் அவனுக்கு மிகவும் பிடித்தமான மரம். கிட்டத்தட்ட தொண்ணூறு அடி உயரமாகவாவது இருந்தது. அதன் இளநீர்த் தேங்காய்கள், காம்பை எடுத்தபிறகு அழகான பவள நிறத்தில் மின்னுவன. அவற்றின் மேற்பகுதியைச் சீவினால் உள்ளேயும் அதே கண்ணைப் பறிக்கும் பவள நிறம். எங்கள் அனுபவத்தில் இந்த நிறம்தான் அந்த மரத்தின் தேங்காய்களுக்குத் தனித்துவத்தைக் கொடுத்தது.

வேலு மிகுந்த வாஞ்சையோடு தன் கொடுவாள் கத்தியால் ஒரே சீவில் அந்த இளநீர்த் தேங்காய்களைச் சீவினான். பிறகு கத்தி முனையால் வட்டமான அல்லது சாய்சதுர வடிவமான துளைகளை ஏற்படுத்த உள்ளேயிருந்த அமுதம் ஷாம்பேன் மாதிரிச் சீறிக் கொண்டு வந்தது. பல மாத இடைவெளிக்குப் பிறகு அந்தக் கிராம அமுதத்தைச் சுவைக்கும்போது, இயற்கை வளத்தின் கொடையை நன்றாகவே உணர்ந்து கொண்டோம். இலங்கையிலேயே திறமான விலையுயர்ந்த எலுமிச்சம்பழச் சாறு கூடப் புதிதாக ஆய்ந்த செவ்விளநீருக்கு நிகராகாது!

‘நல்ல மரம்,’ ‘தீய மரம்,’ என்ற நம்பிக்கைகள் ஊரிலே பரவலாக இருந்தன. அரச மரம் நல்லது, வேப்ப மரம் தீயது. இப்படியான நேரங்களில் தென்னை மரங்கள் நல்லவை என்றே எனக்குத் தோன்றியது. வேலுவும் எங்களுக்கு அதைத்தான் போதித்தான். ஒருவனுக்கு ஒரு செவ்விளநீர் மரம் சொந்தமாக இருக்குமானால் அவனுக்கு இருக்கிற செல்வம் ஒரு பசு, ஒரு ஆளிச்செடித் தோட்டம், ஒரு சோடாப்பானத் தொழிற்சாலை, ஒரு திராட்சைத் தோட்டம், ஒரு மரக்காடு, கூரை வேய ஒரு வைக்கல் கும்பு, பசளைக்கு ஒரு உரக் குவியல், கால்நடைத் தீனி, ஒரு கரும்புத் தோட்டம், ஒரு நிலக்கடலை வயல் போன்ற எல்லாச் செல்வங்களையும் ஒரே நேரத்தில் வைத்திருப்பதற்குச் சமனானது என்பான். “தேவையான செல்வத்தை எல்லாம் வழங்கும் கற்பகதருதான் தென்னை. வெண்ணெய், பால், சாராயத்திலிருந்து, குடிசை கட்டுவதற்குத் தேவையான சகல பொருட்கள்வரை, சர்க்கரை, கயிறு, கள், எண்ணெய், இப்படிப் பலவற்றைத் தரும். உலகத்திலேயே ஆகப் பிரயோசனமான மரம் இதுதான்,” என்று எங்களுக்கு வேலு போதிப்பான். நாங்கள் அதை முற்றாக நம்பினோம்.

நாங்கள் விடுமுறையில் அச்சுவேலியில் தங்கியிருந்த ஒவ்வொரு நாளும், விடிகாலையில் முற்றத்தில் சூரிய வெளிச்சம் படும் நேரத்திலேயே வேலு எங்கள் வீட்டுக்கு வருவான். பிறகு மாலைப் பொழுதிலும் ஒருமுறை வருவான். தோளிலே எங்களுக்குச் செவ்விளநீரும், ஒரு உறியில் பெரிய பானையொன்றில் பூட்டனாருக்காகப் புதிதாக இறக்கிய கள்ளும் காவிக் கொண்டு வருவான். எங்களுக்கு உடனேயே இளநீர் அருந்த வேண்டும் என்றால் முற்றத்தில் குந்தி இருந்து தன் கொடுவாள் கத்தியால் இளநீர் வெட்டித் தருவான். இளநீர் சீவுவதில் அவன் விற்பன்னன். கூர்மையான கத்தியால் ஒரே சீவாகச் சீவுவதால், வாய்வைத்து இளநீர் அருந்தும் மேற்பரப்பு தட்டையாக வழுவழுப்பாக இருக்கும். கட்டடங்களாலும் புரசை மரங்களாகும் சூழப்பட்ட தாடித்தாத்தாவின் வீட்டு முற்றம் தான் வேலுவின் நடமாட்டங்களின் எல்லை. எல்லா உயர்த்தப்பட்ட சாதியினரின் வீடுகள் போலவே இங்கும் அந்த முற்றத்து எல்லையைத் தாண்டி அவன் உள்ளே வரமாட்டான். அதே மாதிரியே, அவன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் என்பதால் அவன் வீட்டுக்குள்ளே நாங்கள் போக முடியாது. அவன் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரைக் கூட அருந்த முடியாது. அவனுடைய கள்ளைக் குடிக்கலாம் என்றால் அவன் வீட்டுத் தண்ணீரை

அருந்துவதற்குத் தடை விதிப்பது எங்களுக்கு அபத்தமாகத் தெரிந்தது. இப்படியான மரபுவழிப் பழக்கங்களின் ஆதிக்கம் குறைவான கொழும்பு நகரப் பகுதிகளில் சாதி வித்தியாசம் பார்ப்பது அறவே கிடையாது, திருமணச் சம்பந்தங்களைத் தவிர.

வேலுவின் காலை வேளை வருகைகளுக்கு முதலே நாங்கள் அவனைத் தேடித் தென்னந்தோப்புக்குப் போய் விடுவோம். அவனைக் கண்டு பிடிப்பது சுலபம். ஏனென்றால், 'டக் டக்,' என்று அவன் எண்பது அடி உயரத்துக்கு மேல் நின்றபடி தென்னம் பூக்களை வெட்டும் சத்தம் தென்னந்தோப்பு முழுவதும் வியாபிக்கும். வெட்டின பூக்களுக்கு மேல் உப்பையும் வேறு வாசனைத் திரவியங்களையும் பூசி விடுவான். வானமெங்கும் அளாவி, சூரிய வெளிச்சத்தில் மினுமினுக்கும் அந்தப் பச்சைத் தென்னோலைக் கடலில் மூழ்கியிருந்த வேலு, வெட்டிய தென்னம் பூக்களுக்குக் கீழே மண்பானைகளைக் கட்ட அவற்றுக்குள் கருப்பநீர் கசியும்.

சிலவேளைகளில் பருவமழைக் காலம் வர முதல் வீசும் வாடைக் காற்றின் ஆவேசத்தில் தென்னோலைகள் தாண்டவம் ஆடுவன. வாள் சண்டையில் மோதும் வாள்களைப் போலவோ அல்லது பாம்புகளைப் போலவோ தென்னோலைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வன. அந்தப் பச்சைக் கடலில் அவன் மிதந்து கொண்டிருக்கும்போது தென்னை மரங்கள் காற்றின் உக்கிரத்தில் சாய்ந்தாடுவது பயங்கரமாக இருக்கும். இருண்டு வருகையில், ஓலமிட்டபடி அவை ஆடுவது வானத்தில் ஒரு விருத்தபாகம் வரைவது போல இருக்கும். அப்படியான நேரங்களில் தென்னை மரங்கள் ஆபத்தானவை போலத் தெரிவன. ஒரு நாள், "இந்த மரத்தில இருக்கிற தேன்கூட்டை எடுக்க வேணும்," என்று அவன் சொன்னபோது அப்படித்தான் தெரிந்தது.

அன்றிரவு வேலுவுடனும் அவனது மூத்த மகனுடனும் தென்னந்தோப்புக்குப் போனோம். வேலு மரத்தில் ஏறியபோது இருண்டு விட்டதால் அவன் என்ன செய்கிறான் என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. திடீரென்று மர உச்சியில் நெருப்புப் பற்றிக் கொண்டது போலத் தெரிந்தது. ஒரு தென்னம் பொச்சுக்குத் தீயூட்டி அதை அங்குமிங்கும் ஆட்டியபடி வேலு தேனீக்களைப் புகைத்துக்கொண்டிருந்தான். தென்னோலைகளுக்கு நடுவில் தீப்பொறிகள் பறந்து சரமாரியாகக் கீழே பொழிந்தன. தென்னைமரம் கோபத்தில் நெருப்பும் புகையும் கக்குவது போல இருந்தது. கொஞ்ச நேரத்தில் வழக்கம்போலச் சிரித்தபடி தேனடைகளைக் காவிக் கொண்டு வேலு கீழே இறங்கி வந்தாலும், அந்த இருளில் வேலு ஏதோ தீயசக்திகளோடு சேட்டை விடுகிறான் என்கிற நினைப்பு என் மனத்தை ஆக்கிரமித்தது.

ஒரு நாள் வேலுவின் மனைவி தென்னந்தோப்புக்கு வந்தாள். கொஞ்சம் கூனலுடன் ஏதோ ஒரு பாம்பையோ உடும்பையோ தேடுவது போல அவளது கண்கள் அங்குமிங்கும் துள்ளிப்பாய, "குண்டு ! குண்டு !" என்று கத்தினாள். குண்டு வழக்கம்போல ஏதோ ஒரு மர உச்சியில் ஒளித்திருந்தான்.

அவளது கன்னங்கரேலென்ற தலைமுடி பிடரியில் ஒரு சிறிய குடுமியாகக் கட்டப் பட்டிருந்தது. தன் சிறிய முகத்தைச் சுளித்தபடி சந்தேகத்துடன் சுற்றிப் பார்த்தாள். "தம்பிமார், குண்டு எங்கை எண்டு உங்களுக்குத் தெரியுமா ?" என்று ஆற்றாமையோடு கேட்டாள்.

நாங்கள் பதில் சொல்ல முதலே, வேலு தன் மரத்திலிருந்து இறங்கி வந்து, குறும்புத்தனமான பள்ளிகூட மாணவன்போல, "அவனோட உனக்கென்ன வேண்டியிருக்கு ?" என்று குதர்க்கமாகக் கேட்டான்.

"அவனைச் சந்திக் கடைக்கு அனுப்பிச் சவுக்காரம் வாங்க வேணும்," என்று அவள் திருப்பிக் கத்தினாள். அதைக் கேட்டதும் குண்டு தான் இருந்த இடத்திலிருந்து தேங்காய்களை மழை போலப் பொழிய வைத்தான்.

அவளுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. வேலுவின் பக்கம் திரும்பி, "நீயும் உன்ர மரங்களும் ! நீ குண்டுவைப் பழுதாக்கிறாய். இன்னுங் கொஞ்ச நாளில அவன் ஈயோட்டக் கூட வக்கில்லாதவனா வந்திடுவான். கடவுளே, என்னைக் கொண்டு போயிடு !" என்று வசைந்தபடி தான் வந்த வழியால் திரும்பி நடந்தாள். குண்டு வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான். வேலுவும், "ஹூ ! ஹூ ! ஹூ !" என்று வயிறு குலுங்க வாய்விட்டுச் சிரித்தான். பையனைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தான். குண்டு செய்வதற்கு என்று தோப்பில் ஒரு வேலையும் இல்லையென்றாலும் குண்டுவைத் தென்னந்தோப்பிலேயே தன்னுடன் வைத்திருக்கத் தான் வேலு சதித்திட்டம் தீட்டுகிறான் போல இருந்தது.

"ஏன் அவ தென்னமரங்களைக் கூடாதவை எண்டு சொல்லுறா ?" என்று நான் என் அண்ணன் இரத்தினத்தைக் கேட்டேன்.

"ஆருக்குத் தெரியும் ? அதுகள் கூடாத மரங்களா இருக்கலாம்," என்றான் இரத்தினம்.

வேலுவுடன் நாங்கள் இருந்தபோது இயற்கையின் கொடைகளைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திப்பது கடினம். முப்பத்தாறு வருடங்களாக, கண்ணின் மணிகளைப் போல அவன் பாதுகாத்து வளர்த்த வளர்ப்பில் தான் இந்த மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. எங்களுக்கு ஒரு அதிசயம் ததும்பும் முழுத் தென்னை உலகத்தையும் அவன் திரைதிறந்து காண்பித்தான். சில மரங்களைச் சுட்டிக் காட்டி, "இதுகள் தான்

திறமான போர்த்தேங்காய் மரங்கள்,'' என்றான். இந்த மரங்களிலிருந்துதான் கடினமான உறுதிமிகுந்த ஓடுகள் கொண்ட தேங்காய்கள் கிடைப்பன. இவற்றை வைத்தே போர்த்தேங்காய் விளையாடுவார்கள். வேலுவும் போர்த்தேங்காய் விளையாடுபவர்களில் ஒருவன்.

போர்த்தேங்காய் விளையாட்டில் எதிரி அணியில் உள்ள ஒருவன் ஒரு தேங்காயை அசுர வேகத்தில் எறிவான். அதை நோக்கி வேலு தன் கையில் இருந்த போர்த்தேங்காயை எறிவான். வேலுவின் தேங்காய் பிளந்து உடைந்தாலோ அல்லது எதிரியின் தேங்காயைப் பிளக்கத் தவறினாலோ, அந்த ஆட்டத்தை வேலு இழந்துவிட்டதாகக் கருதப்படும். சில கிராமங்களில், உடைந்த போர்த்தேங்காய்களிலிருந்து எடுக்கப்பட்ட புனித இளநீரை ஒரு பானையில் ஏந்தி அக்கம்பக்கக் கிராமங்களுக்கூடாக "ஹோயா!'' என்று கத்தியபடி ஊர்வலமாகக் கொண்டு செல்வார்கள் என்று வேலு சொன்னான். இளநீர் புனிதமானது. நோய் துன்பங்களை விரட்டியடிக்கும் வல்லமை கொண்டது. வேலு பேசுவதைக் கேட்கும்போது தென்னை மரங்களும் வேப்பமரங்கள், புளியமரங்கள் போலப் பேய்பிசாசு வாழும் தீய மரங்களாக இருக்குமோ என்று எனக்கு இருந்த சந்தேகங்கள் எல்லாம் கரைந்து போயின.

எப்போதாவது அவனது மரங்களில் ஒன்றைத் தறிக்க வேண்டி இருந்தால் வேலுவைச் சோகம் கவ்வும். ஒரு நாள் ஒரு பழைய மரத்தை எங்களுக்குக் காட்டி அது ஆபத்தான மரம் என்று சொன்னான். "நல்ல வேளை இது நான் நட்ட மரமில்லை, என்ர பாட்டா நட்ட மரம்,'' என்று சொல்லி ஆறுதல் பட்டுக் கொண்டான். வேலுவும் குண்டுவும் கயிற்றால் மரத்தை இழுத்துக் கட்டிய பிறகு, தன் கோடாலியால் மரத்தின் அடிப்பாகத்தை வேலு ஓங்கி வெட்ட, அந்தப் பழைய மரம் நிலம் அதிர விழுந்தது. "அநியாயம்,'' என்றான் வேலு. நானும் அப்படியே நினைத்தேன். அதற்குப் பிறகு மரத்தின் நடுவில் இருந்த வெண்ணெய் நிறத் தென்னங் குருத்தைக் கத்தியால் வெட்டி எடுத்தான். அதன் சுவை பாதாம்பருப்பும் இலைக்கோசுவும் கலந்த மாதிரியான ஒரு அலாதியான சுவை! சுவை பார்த்தபிறகு மிஞ்சியிருந்ததில் ஊறுகாய் போடப்பட்டது. இந்த மரத்தின் குருத்தை நாங்கள் அனுபவிக்க கிட்டத்தட்ட நூறு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்தக் காத்திருப்பு வீணாகவில்லை. அதற்குப் பிறகு விழுந்த மரத்தை ஒரு துலாவாக உபயோகிக்கக்கூடிய வகையில் வேலு செப்பனிட்டான்.

"மனுசரின்ர சத்தமோ அல்லது கடலின்ர சத்தமோ கேக்கிற இடங்களை விட்டு எதிர்ப்பக்கமாத் தென்னை மரங்கள் வளராது எண்டு உங்களுக்குத் தெரியுமா?'' என்று வேலு எங்களைக் கேட்டான். அது இலங்கைக் கிராமத்தவர்களின் ஒரு நம்பிக்கை. ஆகவே, நாங்கள் தென்னந்தோப்புக்கூடாக நடந்து போகும்போது உரக்கப் பேசிக் கொண்டு போனோம். தென்னை மரங்கள் செவிமடுத்துக் கேட்டன.

அந்த விடுமுறை அச்சுவேலியில் அருமையாகக் கழிந்தது. சூரியன் இதமாக எறித்தான். அது எங்களுக்குக் குதூகலம் ஊட்டியது. தொட்டவை எல்லாவற்றுக்கும் இளமையும் பளபளப்பும் வழங்கும் சூரிய வெளிச்சம் அது. விடுமுறை முடியப்போகும் தருணம், வாடைக்கால பருவமழை ஆரம்பிக்க முன்னர், ஒரு மாலைப் பொழுதில், முகில்கள் குழுமி சூரியனை மறைத்தன. தென்னந்தோப்பபிலும் மாந்தோப்பிலும் ஏதோ இனந்தெரியாத திகில் மூட்டும் இருள் சூழ்ந்தது. அப்போது தான் சூறாவளி அடிக்க ஆரம்பித்தது.

சூறாவளி அடிக்கும்போது நிலத்திலிருந்து எழும் சுழல் காற்று புழுதியையும் காய்ந்த மாவிலைகளையும் தூக்கிச் சுழற்றிக் கடாசி எறியும். காடு ஓலமிடும். காற்றின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் தென்னை மரங்கள் இராமனின் வில் போல வளைந்தாடுவன. தென்னோலைகள் பீதி கொண்டு சலசலப்பன. புயல்காற்றின் சத்தத்துக்கூடாகத் தேங்காய்கள் பொத் பொத்தென்று விழும் சத்தம் கேட்கும். திடீரென்று வானம் திறந்து பயமூட்டும் வக்கிரத்தோடு பெருமழை பொழியும். வெள்ளம் திரண்டு குழாய்களுக்கூடாகவும் கால்வாய்களுக்கூடாகவும் பாயும் சத்தம் மனிதர்களின் குரல்களை அமுக்கி விடும். புளியமரத்திலும் மற்ற தீய மரங்களிலும் வதியும் பேய்பூதங்கள் அலைந்து திரிய ஆரம்பிப்பன. சூறைக்காற்றால் கடலிலிருந்து வானோக்கி எழும் நீர்த்தாரைகள் மீன்களையும் சேர்த்துத் தூக்க, எங்கள் முற்றங்களில் மீன்கள் வானத்திலிருந்து விழுவன.

இந்த ஊழித்தாண்டவம் கொஞ்சம் அடங்கியபோது குண்டு ஒரு அணைந்துபோன அரிக்கன் விளக்கை ஏந்தியபடி எங்கள் வீட்டுக்கு ஓடி வந்தான். "அப்பாக்குக் காயம் பட்டுட்டுது,'' என்று சொல்லிவிட்டு விக்கி விக்கி அழுதான். எங்களுடைய தொப்பிகளையும் குடைகளையும் எடுத்துக் கொண்டு, தாடித் தாத்தாவுடனும் பூட்டனாருடனும் மழைவெள்ளத்துக்கு ஊடாக ஓடிப் போனோம். முள்ளுப் பற்றைகளிலும் சுண்ணக்கற் பாறைகளிலும் தடக்கி விடாமல் இருப்பதற்காகக் கை விளக்குகளை எங்களுக்கு முன்னால் விரிந்த பாதையை நோக்கிப் பிடித்தபடி ஓடினோம்.

வேலுவின் குடிசையை அடைந்தபோது காத்திருந்த காட்சி எங்களை அதிர வைத்தது. கைவிளக்குகளினதும் தென்னோலைப் பந்தங்களினதும் வெளிச்சத்தில் வேலுவின் குடிசை முட்டைக் கோது போல நசுக்கப் பட்டிருந்ததைக் கண்டோம். நொருங்கிப் போயிருந்த குடிசைக்கு மேலே ஒரு கொடூரமான பயங்கர வடிவம்

அதன் நீண்ட உருவம் ஈரத்தில் மினுமினுத்தபடி கிடந்தது. அது வேலுவுக்குப் பிரியமான செவ்விளநீர் மரங்களில் ஒன்று. எல்லாவற்றிலும் உயரமான, பவளநிறத் தேங்காய்களைத் தந்த, வேலுவின் மனதுக்கு மிகவும் உகந்த மரம். புயலின் உச்சகட்டத்தில் அது சரிந்து விழுந்திருக்கிறது. இப்போ ஏதோ வெற்றிக் களைப்பில் அதன் ஓலைகள் பாம்பு சீறுவது போல மெதுவாகச் சலசலத்துக் கொண்டிருந்தன. வேலு அந்தப் பெரிய மரத்தின் கீழ் மாட்டுப் பட்டிருந்தான். அயலவர்கள் அவனை விடுவிக்க அவசரமாக முயன்று கொண்டிருந்தனர். யாரும் எதுவும் பேசவில்லை, ஆனால், எல்லோரையும் கவலை கவ்வியிருந்தது. அவர்கள் வேலுவை ஒருவாறாக ஒரு தூக்குப் படுக்கையில் ஏற்றிக்கொண்டபோது எனக்கு அருகில் போய்ப் பார்க்கும் துணிச்சல் இருக்கவில்லை. அவனது மனைவியும் மகளும் அவனது மூத்த மகனுக்கருகே நின்றபடி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தனர். இளைய மகன், சிறுவன் குண்டு, அவர்கள் வேலுவை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றும்போது, மூச்சு விடாமல் தன் தகப்பனுக்கு ஏதோவெல்லாம் கதை சொல்லிக்கொண்டிருந்தான்.

பந்தங்களின் வெளிச்சத்தில் எங்களைக் கண்டு கொண்ட வேலு மெதுவாகச் சிரித்தான். "அந்த மரம்தான்," என்று சோர்வுடன் சொன்னான், "ஆனா ஒண்டுக்கும் யோசியாதேங்கோ. நான் கெதியாத் திரும்பி வந்து தோட்ட வேலையெல்லாம் பாத்துக் கொள்ளுவன்."

"ஓம் வேலு," என்றார் பூட்டனார். அவரது முகத்தில் கவலை படர்ந்திருந்தது. வேலு சின்னப் பையனாக இருந்த காலத்திலிருந்தே அவனை அவருக்குத் தெரியும்.

எனது சகோதரர்களும் நானும் வேலுவைப் பார்க்கப் பத்து மைல் தொலைவில் இருக்கிற மானிப்பாய் வைத்தியசாலைக்குப் போனோம். அங்கே இலங்கை மருத்துவர்களும் அமெரிக்க மருத்துவர்களும் பணி புரிந்தார்கள். பூட்டனாரும் எங்களுடன் வந்தார். அந்த வைத்தியசாலை பளிச்சென்று துப்புரவாகவும் குளிர்மையுடனும் இருந்தது. வெள்ளைச் சேலைகள் அணிந்த தாதிகள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். வேலுவுக்கு இன்னும் மயக்கம் தெளிந்து சுய நினைவு வரவில்லை. அடுத்த நாள் விடிய முதலே வேலு காலமாகி விட்டான் என்ற செய்தி கிடைத்தது. அவனது உடலை எடுத்துக் கொண்டு அச்சுவேலிக்குத் திரும்பினோம்.

அன்று பறை மேளம் கொட்டிச் சங்கு ஊத ஊர்ப் பெண்கள் வேலுவுக்காக ஒப்பாரி வைத்தார்கள். சிலர் வரிசையில் நிற்கச் சிலர் வட்டமாகக் கூடியிருந்தார்கள். ஒவ்வொருவரும் வேலுவின் சிறப்புகளைப் பற்றியோ அல்லது அவன் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றியோ பாட்டாக இரண்டு அடி சொன்னார்கள். ஒருவரை அடுத்து இன்னொருவர் மாறி மாறிப் பாடினார்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து பல்லவி பாடினார்கள். யாரோ ஒருவர் அந்தச் செவ்விளநீர் மரத்தைச் சபித்தார். ஒப்பாரி நாள் முழுவதும் தொடர்ந்தது. நானும் என் சகோதரர்களும் பாடையில் கிடத்தியிருந்த வேலுவின் உடலைக் கடைசி முறையாகப் பார்ப்பதற்காக, அவசரமாகக் கட்டப்பட்ட செத்தவீட்டுப் பந்தலுக்குள் நுழைந்தோம். வெள்ளைப் பாடையில் மல்லிகை, அலரிப் பூக்கள் சூழ, ஒரு சாந்தமான முகபாவத்துடன் படுத்திருந்தான். எட்டு திரிகளுள்ள உயரமான தேங்காய் எண்ணெய்க் குத்து விளக்குகள் அவனது தலைமாட்டிலும் கால்களுக்குப் பக்கத்திலும் சொலித்துக் கொண்டிருந்தன.

சவ ஊர்வலத்தோடு சுடுகாட்டுக்குப் போனோம். வேலுவின் மூத்த மகன் தோளில் வைத்திருந்த மண் குடத்திலிருந்து தண்ணீரை நிலத்தில் தெளித்தபடி பாடையை மூன்று முறை சுற்றி வந்தான். பிறகு அந்தக் குடத்தை பாடைக்கு மேல் எறிய அது போர்த்தேங்காய் போல உடைந்து தண்ணீர் பீறிட்டுப் பாய்ந்தது. அவன் பாடையின் நான்கு மூலைகளிலும் கொள்ளி வைக்க, சுற்றி வர இருந்தவர்கள் தேங்காய் எண்ணையைத் தூவினார்கள். பாடை பகபகவென்று பற்றிக் கொண்டு எரிந்தது.

எந்த மரம் நல்லது, எது தீயது என்று திட்டவட்டமாகச் சொல்வது கடினமென்றாலும் அந்த நாளிலே நான் தென்னை மரம் தீயது என்ற முடிவுக்கு வந்தேன்.

"நீ என்ன நினைக்கிறாய்?" என்று என் அண்ணன் இரத்தினத்திடம் கேட்டேன்.

"எனக்குத் தெரியாது. ஆனால், தென்னை மரங்களில நிறைய உபயோகம் இருக்கு," என்றான் அவன்.

"ஓம்," என்றேன் நான், "எங்களைக் கொல்லும் வரை."

இன்று அச்சுவேலியில் தோப்புகளைப் பராமரிப்பது குண்டுதான். அவன் உயரமாக, இளமையோடு, ஜொலித்துக் கொண்டு இருப்பான். தனது தலைப் பாகையை ஒரு கோணத்தில் அணிந்திருப்பான். அவன் காற்றில் சாய்ந்தாடும் ஒரு மர உச்சியில் நின்று கொண்டு தேங்காய்களைக் கீழே போடுவதை அசப்பில் பார்த்தால் அது வேலு தான் என்று நாங்கள் கற்பனை செய்யலாம். அவனுக்கும் அதே சிரிப்பும் அதே நம்பிக்கை மிகுந்த நடத்தையும்.

எழுத்துக்கினியவன் <ez.iniyavan@gmail.com>

('The Reporter' அமெரிக்கச் சஞ்சிகையில் 1956ஆம் ஆண்டில் வெளிவந்த, 'The Tree Climber' கதையின் தமிழாக்கம்)

மூன்று கவிதைகள்

1. ஊர்க்காவலன்

தரைச்சூட்டில் மெலிந்துபோய்
நடக்கத் திராணியற்றுக் கிடக்கிறது
காற்று

நாள் முழுவதும்
அசைந்த களைப்பில்
ஓய்வெடுக்கின்றன இலைகள்

தரவுகள் தீர்ந்து
மூடிக்கிடக்கிறது
அலைபேசியின் திரைகள்

பறவைகளின் உறக்கத்தில் நிசப்தம்
கூடிக்கிடக்கிறது இரவு

பேச்சுத்துணைக்கு ஆளின்றி
மௌனமாய்
ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருக்கிறது
நிலா!

- நேசன் மகதி

2. தேநீர்

மனம் வாடும் தருணங்களில்
கண்ணீரோடு நடக்க
அவசியமில்லை
ஒரு கோப்பை
தேநீரிலும் கடக்கலாம்.

- மு. பிரபு

3. குட்டிப் பூனைகள்

திருட்டு வேலை செய்துவிட்டு
பார்க்கிறோமா என்று
தலை திருப்பிப் பார்க்கும்
சிறு குழந்தையென
சோபாவைச் சுரண்டி விட்டு
திருதிருவென விழிக்கிறது
இந்த குட்டிப்பூனைகள்


- கண்ணன் விஸ்வகாந்தி

1927 - 2014

கேபிரியல் கார்சியா மார்க்வெஸ்
[GABRIEL GARCÍA MÁRQUEZ]

தமிழில்: **ஸிந்துஜா**

நூற்றாண்டு காணும் சில இலக்கிய, கலைச் சிற்பிகளைப் பற்றிய தொடர் இது. அவரவர் கால, சமூக, அரசியல் பின்னணிகளை முன் வைத்து, இலக்கியப் பிரக்ஞையுடனும் கலைத்திறனுடனும் அவர்கள் படைத்த ஆக்கங்கள் மூலம், கடந்து சென்ற காலத்தின் நேர்த்தியானதும் நேர்த்தியற்றதுமான வடிவங்களை ஆழமாக ஒருவர் கண்டுணர முடியும். உலகப் போர்களின் தாக்கங்கள், ஆழ்ந்த மனிதாபிமானம் நிரம்பிய நேச உணர்வுகள், காதலைப் பற்றிய முற்றிலும் வேறுபட்ட பார்வைகள், தனிமனிதப் போராட்டங்கள் இத்யாதி நாவல்களாகவும் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் நாடகங்களாகவும் புகைப்படங்களாகவும் இந்த ஆளுமைகளால் உருவாக்கப்பட்டுள்ளன. அவர்களின் எண்ணங்கள் நேர்காணல்களாகவும் கட்டுரைகளாகவும் இத்தொடரில் வெளிப்படுகின்றன. இந்த இதழில் கேபிரியல் கார்சியா மார்க்வெஸ்...




நவீன இலக்கியத்தின் மாபெரும் ஆளுமையும், 1982ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றவருமான புகழ்பெற்ற கொலம்பிய எழுத்தாளர் கேபிரியல் கார்சியா மார்க்வெஸ் தனது படைப்பாற்றல் மற்றும் எழுத்தாளரின் கலை குறித்த கருத்துக்களை யுனஸ்கோ கூரியர் இதழுக்காக பகத் எல்நாடி, அடல் ரிஃபாத், மிகெல் லாபர்க்கா ஆகியோருடன் பகிர்ந்து கொள்கிறார்.

கலாச்சாரத்தைப் பாதுகாக்க முடியுமா?

அரசுகளும் கலாச்சாரத்தில் ஆர்வம் கொண்டவர்களும் எழுப்ப வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், ஓர் அரசு, கலாச்சாரத்தில் தலையிடுவது, அதைத் தன்வசப்படுத்துவது, முக்கியமாக அரசியல் தத்துவத்திற்கு அதை அடிபணியச் செய்வது, ஆகியவற்றை விலக்கிக் கலாச்சாரத்திற்கு எந்த வகையான பாதுகாப்பைத் தன்னால் தர முடியும் என்று தீர்மானிக்க வேண்டும். ஆனால், லத்தீன் அமெரிக்காவில் இருக்கும் கலாச்சார அமைச்சகங்களோ தேசிய அரசியலின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப அடிபணிந்து கிடக்கின்றன. அமைச்சரவை மாற்றங்கள், கலாச்சார நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அரசாங்கத்திற்குள் நடக்கும் அதிகாரப் போட்டிகள், கலாச்சாரத்தில் எந்தவிதமான ஆர்வமும் இல்லாதவரை, அல்லது முந்தைய அமைச்சரின் கொள்கைகளை எதிர்ப்பவரைக் கலாச்சார அமைச்சராக நியமிப்பதில் குறியாயிருக்கின்றன. இதன் விளைவாக, கலாச்சாரம் என்பது கலாச்சாரத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாத, ஆனால், அரசியலுடன் - அதிலும் மிக மோசமாகக், கட்சி அரசியலுடன் - சேர்ந்து கொண்டு, தொடர்ச்சியான மாற்றங்களைச் சந்திக்க வேண்டியதாகிறது.

கலாச்சாரம் சுதந்திரமாக வளர, அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் அதற்கு உதவ வேண்டும். ஆனால், நடைமுறையில் இதை உருவாக்குவது பெரும் சிக்கல் நிரம்பிய ஒன்று. படைப்பாற்றலின் செயல்பாடுகளை முன்கூட்டியே கணிப்பதோ அல்லது எதையும் திட்டமிட்டுச் செயலாற்றுவதோ எப்போதும் கலையின் உயிர்நாடியைச் சிதைத்து விடுகிறது. தவிர கலாச்சாரம் என்றால் என்ன என்பதை வரையறுக்காமல், கலாச்சாரத்தைப் பற்றி ஒருவர் எப்படி எதையும் தீர்மானிக்க முடியும்?

யுனஸ்கோ கூற்றுப்படி, கலாச்சாரம் என்பது மனிதர்கள் இயற்கையோடு இயைந்து செயலாற்றுவது. கலாச்சாரம் என்பது மனித நுண்ணறிவின் சமூகப்



பயன்பாடு என்று நான் நம்புகிறேன். ஆழ்மனதில் நம் அனைவருக்கும் ‘கலாச்சாரம்’ என்ற சொல்லின் அர்த்தம் தெரியும். ஆனால், அதை ஒரு சில வார்த்தைகளில் சுருக்கிச் சொல்வதில் நமக்குக் கஷ்டமிருக்கிறது. கலாச்சாரம் என்பது – பிரான்சின் முன்னாள் கலாச்சார அமைச்சர் ஜாக் லாங் இதைக் கூறினார் என்று நினைக்கிறேன் – சமைப்பது, இயல்பாக நடமாடுவது, உடலுறவு கொள்வது, வாழ்வது, என இவையனைத்திலும் பரந்து விரிந்திருப்பதுதான். அது ஒவ்வொரு செயலிலும் கலாச்சாரத்தின் சாயலைக் கொண்டுள்ளது. இதில் உள்ள ஆபத்து என்னவென்றால், கலாச்சாரத்தின் கருத்து எந்த அளவுக்குப் பரவலாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதைப் பாதுகாப்பது எப்படி என்பதை அறிவது அவ்வளவு எளிதானதல்ல.

கலாச்சாரத்தைக் கற்பிக்க முடியுமா?

இப்போது கலை, இலக்கியம், இதழியல் (என்னைப் பொறுத்தவரை இது இலக்கியத்தின் ஒரு வடிவம்) மற்றும் சினிமா (இது நிச்சயமாக ஒரு கலை) ஆகியவற்றை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதைப் பற்றி நான் யோசித்து வருகிறேன். இந்த வகையான கல்வி ஒரே ஒரு முறை மட்டுமே ஒருவருக்குத் தரப்படுவதாக இருக்க வேண்டும், மேலும் அது இயல்பானதொன்றாக இருக்க வேண்டும். கியூபாவின் சான் அன்டோனியோ டி லோஸ் பானோஸ் சினிமாப் பள்ளியில், ‘எப்படி ஒரு கதையைச் சொல்வது?’ என்ற பெயரில் ஒரு பட்டறையை நான் நடத்துகிறேன். அங்குத் திரைக்கதை அனுபவமுள்ள அதிகபட்சம் ஒரு டஜன் இளைஞர்களை ஒரு மேஜையைச் சுற்றி அமர வைக்கிறேன். கதைகளை ஒன்றாகச் சேர்ந்து உருவாக்க முடியுமா, ஒரு மேஜையைச் சுற்றிப் படைப்பு அற்புதம் சாத்தியமா என்பதை நாங்கள் சோதிக்க முயல்கிறோம். சில சமயங்களில் நாங்கள் அதைச் சாதித்திருக்கிறோம். அவர்களில் ஒருவரிடம் சமீபத்தில் பார்த்த படம்பற்றிக் கேட்பதன் மூலம் நான் பேச்சைத் தொடங்குவேன். ‘படம் எதைப் பற்றியது என்று கூறுங்கள்’ என்று நான் கேட்பேன். அவர்களில் சிலருக்குக் கதை சொல்லத் தெரியும், அடுத்திருப்பவருக்குத் தெரியாது. ஒருவர், ‘இது நவீன நகர வாழ்க்கையின் முரண்பாடுகளை எதிர்கொள்ளும் ஒரு கிராமத்துப் பெண்ணின் கதை’ என்பார். இன்னொருவர் ‘ஒரு

கிராமத்துப் பெண் தன் குடும்பத்தால் சோர்வுற்று ஒரு நாள் எதிர்ப்படும் முதல் பஸ்ஸில் ஏறி விடுகிறாள். அவள் ஓட்டுனருடன் ஓடி விடுகிறாள். அதன் பின் அவள் சந்திப்பது...' என்று ஆரம்பித்து அந்தப் பெண்ணின் கதையை விரிவாக்கிக் கூறுவார்.

முதல் இளைஞன் திறமைசாலிதான், ஆனால், அவனுக்கு ஒரு கதையை எப்படிச் சொல்வது என்று ஒருக்காலும் தெரியாது. அவன் கதை சொல்லும் திறமையுடன் பிறக்கவில்லை. கதையைச் சொல்லத் தெரிந்த மற்றொரு தோழர், எழுத்தாளராக மாறுவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது; அவர் எழுத்து நுட்பத்தையும் மிக முக்கியமான அடிப்படைக் கலாச்சாரத்தையும் கற்றாக வேண்டும். ஒருவர் தனது சொந்த நிலைப்பாட்டை அறியும் பொருட்டாவது, தனக்கு முந்தைய பல்லாயிர ஆண்டுக் கால இலக்கியத்தைப் பற்றி ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும். அத்தகைய அனுபவமற்ற ஒருவர் ஒரு நாவலை எழுதுவதைப் பற்றி நினைக்க முடியும் என்பதையே கூட என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. இதற்குப் பின் எழுத்தாளர் தனது அன்றாட வேலைகளில் கவனம் செலுத்த வேண்டும், ஏனென்றால் படைப்புத்திறன் வானத்திலிருந்து வந்து குதித்து விடாது. ஒவ்வொரு வார்த்தைக்காகவும் வாரத்தின் ஒவ்வொரு நாளிலும், முழுக்க உழைக்க வேண்டும்.

எழுத்து என்பது ஒரு கலை; அது ஓவியம் மற்றும் இசையமைப்பைப் போலவே அதிக கவனமும் ஒழுக்கமும் தேவைப்படும் ஒரு கடினமான கலை. தொடர்ந்து பயிற்சி செய்வதன் மூலம், கதை சொல்லத் தெரிந்த ஒருவர் எழுத்தாளராக மாற முடியும்; மாறாக எவ்வளவு கடினமாக உழைத்தாலும் சிலரால் அதைச் சாதிக்க முடியாது. இசையிலும் அப்படித்தான். உங்கள் குழந்தைகளுக்கு ஒரு மெல்லிசையை நீங்கள் கற்றுக் கொடுத்தால், சில குழந்தைகள் அதை அப்படியே சரியாகத் திரும்பச் சொல்வார்கள். சிலருக்கு அது சாத்தியப்படுவதில்லை.

உங்களை ஒரு அறிவுஜீவி என்று நீங்கள் கருதுகிறீர்களா?

முழுமையாக என்று கூற முடியாது. என்னைப் பொறுத்தவரை அறிவுஜீவி என்பவன், முன்முடிவுகளுடன் கைக்குலுக்குபவன். அவன் அவற்றைத் தொடர்ந்து நிஜ வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயல்கிறான். உண்மையில், அந்த அறிவுஜீவி தனது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கருத்துக்களின் மூலம் யதார்த்தத்தை விளக்க முற்படுகிறான். ஒரு மனிதரை அல்லது ஒரு நிகழ்வைச் சுற்றிப் படரும் அனுபவங்களையும், அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளையும் கவனித்தபடி நான் நடமாடுகிறேன். முன்முடிவுகள் ஏதுமின்றி, எனது அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் படிப்படியாக நான் பெறும் உலக அறிவு ஆகியவற்றின் மூலம் உலகைப் புரிந்து கொள்ளவும் கலையை உருவாக்கவும் நான் முயல்கிறேன். அதனால்தான், நேர்காணல்களில் என்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சுருக்கமாகப் பதில்களைத் தாருங்கள் என்று வேண்டுவதை ஏற்பது எனக்குக் கடினமாக இருக்கிறது. என் எழுத்தின் தொடக்கப் புள்ளி உண்மையுடன் இணைந்திருக்க வேண்டும். அப்படித்தான் நான் ஒரு எழுத்தாளனாகச் செயல்படுகிறேன். எனது புத்தகங்களில் உள்ள ஒவ்வொரு வரியும் உண்மையை, அதாவது நான் கேட்ட, அனுபவித்த அல்லது அறிந்த ஒன்றை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டது என்பதை என்னால் நிரூபிக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் உலகத்தில், பட்டறிவு பல விஷயங்களை உள்ளடக்கியது.

ஆம், அது உண்மைதான். எனது 'தனிமையின் நூறு ஆண்டுகள்' நாவலில் நம்ப முடியாத, நடக்கவே முடியாத விஷயங்கள் இருப்பதாக மக்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை, இந்த விஷயங்கள் நிஜ வாழ்க்கையோடு தொடர்புடையவைதான். நான் படித்த சில புத்தகங்கள் என் வாழ்நாளில் அழியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. உதாரணத்திற்கு, ஒருமுறை நான் ஒரு பெட்டியில் கண்டெடுத்த, இதற்கு முன் நான் கேள்விப்பட்டிராத புத்தகமான 'ஆயிரத்தொரு இரவுகள்'. என் இளம் பருவத்தில் பறக்கும் தரைவிரிப்புகள் மற்றும் விளக்குகளிலிருந்து தோன்றும் பூதங்கள் ஆகியவற்றைக் குறித்த கற்பனைகளாலேயே நான் ஈர்க்கப்பட்டேன். அது மிகவும் அற்புதமாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை, அது முற்றிலும் உண்மையும் கூட. மேலும், என்னை மிகவும் சிலிர்ப்படைய வைத்த, கற்பனைக்கு எட்டாததாகத் தோன்றிய பகுதிகளில் ஒன்று முற்றிலும் நம்பத் தகுந்ததாயிருந்தது. அதாவது, ஒரு மீனவன் தனது பக்கத்து வீட்டுக்காரியிடம் தன் வலைக்கு வேண்டிய ஈயத்தைக் கடனாகக் கேட்கிறான். அதற்குப் பதிலாகத் தான் பிடிக்கும் முதல் மீனை அவளுக்குத் தருவதாக உறுதியளிக்கிறான். அவள் ஈயத்தைக் கடனாகத் தருகிறாள், மீனவனும் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிறான். அவள் அந்த மீனை அறுத்துப் பார்க்கும்போது, உள்ளே ஒரு வைரத்தைக் காண்கிறாள்.

வாழ்க்கையில் நிறைந்திருக்கும் பல இயற்கையான விஷயங்களை மனிதர்கள் பார்க்கத் தவறி விடுகிறார்கள். சாதாரண விஷயங்களில் அசாதாரணத்தைப் பார்ப்பதுதான் கவிஞர்களின் அறிவுத்திறன். எனவே, இதுதான் நான் என்னையே கேட்டுக் கொள்ளும் கேள்வி: 'ஆயிரத்தொரு இரவுகள்' கதையின் பறக்கும் தரைவிரிப்புகளை நம்பிய மக்கள், எனது சொந்த

கிராமத்திலும் பறக்கும் செயல் நடந்தது என்பதை ஏன் நம்பக் கூடாது? என் கிராமத்தில் தரைவிரிப்புகள் இல்லை, ஆனால், பாய்கள் இருக்கின்றன. எனவே மக்கள் பாய்களில் பறக்கிறார்கள், பல அதிசயமான காரியங்களைச் செய்கிறார்கள், அவற்றுக்கு நடுவில்தான் நாங்கள் வளர்ந்து வாழ்ந்தோம்.ஒரு புதிய யதார்த்தத்தைக் கண்டுபிடிக்கவோ அல்லது உருவாக்கவோ நான் முயலவில்லை. மாறாக நான் எந்த யதார்த்தத்துடன் பரிச்சயம் கொண்டிருந்தேனோ, எதைப் பற்றி என்னை அடையாளப்படுத்திக் கொண்டே நான் அறிந்திருந்தேனோ அதையே நான் பின்பற்றினேன். ஒரு எழுத்தாளனாக இப்படித்தான் என்னைப் பற்றிச் சொல்ல முடியும்.

'தனிமையின் நூறு ஆண்டுகள்' நாவலுக்குப் பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?

நான் என் மீதே அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கினேன். ஏற்கனவேயே நான் செய்திருந்ததை, கூறியிருந்ததைத் திரும்பச் செய்யக் கூடாது. இதற்கு நான் கடுமையாக உழைக்க வேண்டும். வார்த்தைகளில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம், நான் யதார்த்தத்திற்குள் ஆழமாகச் செல்ல வேண்டும். இதை உணராமலேயே, ஒரே விஷயத்தை மீண்டும் சொல்வதும் ஏற்கனவே பயன்படுத்திய வார்த்தைகளையும் அடைமொழிகளையும் தவிர்க்காமலிருப்பதுமான பழக்கம் என்னிடம் இருக்கிறது.

சில படைப்பாளிகள் மற்றவர்கள்மீது ஏற்படுத்திய தாக்கம்பற்றி மக்கள் அடிக்கடி பேசுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை, நான் ரசித்த படைப்பாளிகளைப் பின்பற்ற ஒருபோதும் முயற்சித்ததில்லை. அதற்கு மாறாக, அவர்களைப் போல நான் எழுதி விடக் கூடாது என்பதற்காக என்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கிறேன். ஆனால், இந்தத் தனித்துவமாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தில், அதற்கு எதிரான ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் அபாயம் உள்ளது. தன்னைத் தானே பின்பற்றுவதைத் தவிர்ப்பது எப்படி என்பதுதான் எனக்கு முன்னால் இருக்கும் பிரச்சனையாகும். எனது சமீபத்திய நாவலான 'காதலும் மற்ற பிசாசுகளும்', பதினெட்டாம் நூற்றாண்டில் கார்ட்டஹேனா டி இண்டியாஸில் நடைபெறும் கதை. அதில் அன்றைய கால கட்டத்து கலாச்சாரம், மனநிலை மற்றும் சகிப்புத்தன்மையின்மையை மீண்டும் உருவாக்க முயன்றேன். ஆனால், எல்லாவற்றிலும் மிகவும் கடினமான விஷயம் என்னவென்றால், இந்த நாவல் முந்தைய நாவல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதை உறுதி செய்வதே ஆகும். இதை முதலில் படித்த வாசகர்கள், இது எனது பாணிக்குப் பொருந்தாத ஒரு வகையான எளிமையைக் கொண்டிருந்ததாகக் கருதினார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன், ஏனென்றால் என்னை விட்டு விலகிச் செல்வது அல்ல, மாறாக எனது மற்ற புத்தகங்களிலிருந்து இதைத் தனித்துக் காட்டுவதே எனது நோக்கமாக இருந்தது. இது என்னுடையதாக இருக்க வேண்டும்; எல்லாப் புத்தகங்களும் அவற்றின் ஆசிரியர்களைப் போலவே இருக்கும். ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொரு புத்தகமும் சுயசரிதைதான். மேலும், ஒவ்வொரு பாத்திரமும் மாற்றுக் குணம் கொண்டதாகவோ அல்லது ஆசிரியரின் ஏதாவதொரு அம்சத்தையோ, அவரது நினைவுகள் மற்றும் அறிவைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு தொகுப்பாகவோ இருக்கும். என்னைப் பொறுத்தவரை, ஒரு எழுத்தாளரின் படைப்பு என்பது தனக்குள் ஆழமாகத் தோண்டி, அங்கே என்ன இருக்கிறது என்று பார்ப்பதன் விளைவாகவே உருவாகிறது; அதில்தான் மரணம் என்பதன் புதிர் மறைந்து கிடக்கிறது. வாழ்க்கையின் மர்மம் ஒருபோதும் தீர்க்கப்படாது என்பது நமக்குத் தெரியும்.

இந்த ஆர்வம் லத்தீன் அமெரிக்க இலக்கியத்திற்கு மட்டுமே உரியதா?

லத்தீன் அமெரிக்கா மிகவும் குறிப்பிட்ட ஒரு வகையான சாகசக் கதைகள், வீரதீரக் கதைகள் நிரம்பிய இலக்கியத்திலிருந்து பிறந்தது என்பது உண்மை. ஸ்பானியக் காலனிகளில் வீரதீர சாகச நாவல்கள் தடை செய்யப்பட்டிருந்ததால், இது தற்செயலாக நடக்கவில்லை. அவை கற்பனையை ஏவிவிட்டன! இந்த நாவல்களின் காரணமாக, வரலாற்று ஆசிரியர்கள் தாங்கள் கண்டதை நம்பத் தயாராக இருந்தனர். ஆனால், அவர்கள் கண்டவை அவர்களின் நம்பக்கூடிய திறனுக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. இதுவே பின்னர் 'மேஜிகல் ரியலிசம்' என்று அழைக்கப்பட்ட ஒரு கற்பனை உலகின் பிறப்புக்கு வழிவகுத்தது, மேலும் இது லத்தீன் அமெரிக்கக் கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அடையாளமாக விளங்குகிறது.

லத்தீன் அமெரிக்கா, ஸ்பானிஷ் மொழி பேசும் உலகம் என்னும் பார்வையிலா அல்லது ஒட்டுமொத்த உலகம் என்னும் பார்வையிலா உங்கள் வாசகர்களைப் பற்றி நீங்கள் சிந்திக்கிறீர்கள்?

முதலில் நாம் நம்முடைய சொந்த மக்களை ஈர்க்க வேண்டும். அதை வெற்றிகரமாகச் செய்து விட்டால், நாம் ஏதோ ஒரு சரியான விஷயத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று அர்த்தம்; அதன் பிறகுதான் நாம் உலகின் பிற குதியினரையும் ஈர்க்க முடியும். அதிர்ஷ்டத்தை நம்பி யாரையும் வாசகராகப் பெற்றுவிட முடியாது. முதலில் இந்த மக்களுக்கு விருப்பமான யதார்த்தத்துடன் ஒரு தொடர்பு இருக்க வேண்டும். பின்னர் அந்தத் தொடர்பு விரிவடைகையில்

அது உலகத்தையே ஈர்க்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதைச் செய்ய வேண்டும், தொடர்ந்து செய்ய வேண்டும். அதன்பின் விஷயங்கள் தானாகவே நடக்கத் தொடங்கும். நான் எழுதத் தொடங்கியபோது, ஏராளமான வாசகர்களை விடுங்கள், எனக்கென்று வாசகர்கள் யாரும் இருப்பதாகக் கூட நான் கற்பனை செய்யவில்லை. 'தனிமையின் நூறு ஆண்டுகள்' எனது ஐந்தாவது புத்தகம். எனது முதல் புத்தகம் வெளியிடப்படுவதற்கு ஐந்து ஆண்டுகளாகின. அது ஒரு பதிப்பாளரிடமிருந்து மற்றொரு பதிப்பாளருக்கும் ஒரு அச்சகத்திலிருந்து இன்னொரு அச்சகத்திற்குமாகச் சென்றது. இறுதியாக அது வெளிவந்தும் விற்பனையாவதற்கு நீண்ட காலம் ஆனது. நீங்கள் உங்கள் பணியைச் செய்ய வேண்டும், பிறகு பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஒருவர் எழுத்தைக் கொண்டே வாழ முடிவது ஒரு அதிர்ஷ்டம். ஆனால், அதை இலக்காகக் கொள்ள முடியாது.

ஒரு எழுத்தாளராக உங்களுக்குப் புதிய ஆரம்பங்கள், சந்தேகத் தருணங்கள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?

நான் இருமுறை, விளைவுகளைப் பற்றி எண்ணாமல் துணிச்சலாக முடிவுகளை எடுத்தேன். முதலாவது, புகை பிடிப்பதை நிறுத்தியது. 'சிகரெட் என்னைப் புகைப்பதை நிறுத்தியது' என்று நான் சொல்வதுதான் சரியாக இருக்கும். நான் அதற்கு முழு அடிமையாகி, ஒரு நாளைக்கு நான்கு கட்டுகள் என்று புகைத்தேன். எனக்கு ஒரு போதும் மூச்சுக்குழாய் அழற்சி ஏற்பட்டதில்லை, மருத்துவர்களும் புகை பிடிப்பதை நிறுத்தும்படி சொன்னதில்லை. ஆனால், ஒரு நாள் நான் புகை பிடிப்பதை நிறுத்தினேன். அதன்பின் மறுபடியும் புகைக்கவே இல்லை. பிறகு, நான் எழுத அமர்ந்த போதுதான் உணர்ந்தேன், ஒரு சிகரெட் புகைக்காமல் நான் அதுவரை ஒரு வரி கூட எழுதியதில்லை என்று. 'இப்போது என்ன செய்வது?' என்று எனக்குள் யோசித்தேன். புகைக்காமல் எழுதுவதற்குப் பழகும் வரை நான் காத்திருக்க வேண்டுமா, அல்லது உடனடியாக அமர்ந்து எழுதத் தொடங்க வேண்டுமா? எழுதுவதற்கான ஆர்வம் தான் வலுவானது என்று நிரூபணமானது, நான் எனது தட்டச்சுப் பொறிக்கு முன் அமர்ந்தேன். ஆனால், அப்போது மற்றொரு பிரச்சனை எழுந்தது: அது என் கைகள். என் கையில் சிகரெட் இல்லாததால், அது இப்போது எனக்குத் தொந்திரவாக இருந்தது! அதிர்ஷ்டவசமாக என் மனம் பாதிக்கப்படவில்லை. அது முன்பைப் போலவே தனது வேலையைத் தொடர்ந்தது. நான் எடுத்த இரண்டாவது துணிச்சலான முடிவு, ஒரு நாள் நான் விழித்தெழுந்து, நான் செய்ய வேண்டிய ஒரே வேலை எழுதுவது மட்டும்தான் என்பதை உணர்ந்தபோது நிகழ்ந்தது. அதற்கு முன்பு ஒன்று எழுத வேண்டும், அல்லது தொலைக்காட்சி, விளம்பரம் அல்லது வானொலிக்காக வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. என் மனைவி மெர்சிடிஸ் ஒருமுறை 'இன்று நீங்கள் என்ன செய்கிறீர்கள், வேலை பார்க்கிறீர்களா அல்லது எழுதுகிறீர்களா?' என்று கேட்டாள். பணம் தரும் 'வேலையை', இன்பம் தரும் 'எழுத்திலிருந்து' நாங்கள் பிரித்திருந்தோம். பின்னர், ஒரு நாள் நான் விழித்தெழுந்து என்னிடமே கூறிக் கொண்டேன். 'இனிமேல் நான் 'வேலை' செய்ய வேண்டியதில்லை. நான் எழுதலாம் அல்லது எழுதாமலும் இருக்கலாம்.' ஆனால், இந்தச் சுதந்திரம் கொண்டு வந்த ஆபத்தை நான் விரைவில் புரிந்து கொண்டேன். நான் அன்று எழுதவில்லை என்றால், ஒருவேளை நாளையும் அல்லது அதற்கு அடுத்த நாளும் எழுதமாட்டேன். ஆகவே நான் தொடர்ந்து எழுதினேன். அப்போது நான் மற்றொரு பிரச்சனையை எதிர்கொண்டேன்.

நாளிதழ் ஒன்றில் செய்தியாளராக என் வாழ்க்கையைத் தொடங்கியவன் நான். அந்த நாள்களில், செய்தித் தாள்கள் இரவில்தான் அச்சிடப்படும். அதிகாலை ஒரு மணிவரை பத்திரிகையில் வேலை பார்த்துவிட்டு, பின் மூன்று மணிவரை கவிதை அல்லது சிறுகதை எழுதுவேன். அதன் பிறகு நண்பர்களுடன் பியர் அருந்தவோ, எறிபந்து (skittles) விளையாடவோ செல்வது வழக்கம். அதிகாலையில் வீடு திரும்பும்போது, நீங்கள் குடிகாரனாக இருக்கலாம் அல்லது அவர்களைத் தாக்கவோ பாலியல் வன்கொடுமை செய்யவோ திட்டமிடலாம் என்ற அச்சத்தில் தேவாலயத்திற்குச் செல்லும் பெண்கள், சாலையின் மறுபக்கம் நடந்து செல்வார்கள்.

எழுதுவதற்காக இரவிலிருந்து பகலுக்கு என் வாழ்க்கை முறையை மாற்றுவது எளிதாக இல்லை. எனக்குக் கிடைத்த இந்தப் புதிய சுதந்திரத்தைக் கொண்டு, தினமும் சரியான நேரத்தில் வேலையைத் தொடங்குவதற்கு, ஒரு வங்கி ஊழியரின் வேலை நேரத்தை நான் கடைப்பிடிக்கத் தொடங்கினேன். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலையைத் தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் முடிப்பது மிகவும் முக்கியமானது. நீங்கள் அளவுக்கு அதிகமாக அதில் ஈடுபட்டு சரியான நேரத்தில் நிறுத்தத் தவறினால், அடுத்தடுத்த பக்கங்கள் ஒரு சோர்வான மனிதனால் எழுதப்படும். முழு நேரமாக எழுதப் போதுமான வருமானம் இல்லாத பெரும்பாலான எழுத்தாளர்களின் பெரிய பிரச்சனை என்னவென்றால், அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில்தான் எழுதுகிறார்கள்; அதாவது அவர்கள் ஏற்கனவே சோர்வாக இருக்கும்போது. இது சோர்வான மனிதர்களால் உருவாக்கப்படும் இலக்கியம். நான் என்னையறியாமல் அதிக நேரம் தொடர்ந்து எழுதும்போது, கடைசியில் சோர்வோடுதான் எழுத முடிகிறது. குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கிக்



குறிப்பிட்ட நேரத்தில் முடிப்பதற்குக் கண்டிப்பான ஒழுக்கம் தேவை.

என் குழந்தைகளின் பள்ளி காலை 8 மணிக்குத் தொடங்கும். அவர்களை நான்தான் அழைத்துச் செல்வேன். பின்னர் மதியம் 2 மணிவரை எழுதி விட்டுக் குழந்தைகளை வீட்டிற்குத் திரும்ப அழைத்து வருவேன். மனசாட்சிப்படி, அன்றைய நாளுக்குரிய எனது கடமையையும் உணவையும் நான் சம்பாதித்து விட்டதாக உணர்வேன். சில நாள்களில் மதியத்திற்கு மேல் சினிமாவுக்குச் செல்வேன், நண்பர்களைச் சந்திப்பேன் அல்லது பல்வேறு சின்னஞ் சிறு வேலைகளைச் செய்வேன். குற்ற உணர்ச்சி எதுவுமின்றி இதைச் செய்தேன். ஆனால், புத்தகங்களை எழுதி முடிக்கும் இடைவெளியில் எனக்குக் குற்ற உணர்ச்சி ஏற்படும். ஒரு புத்தகத்தை முடித்ததும், சிறிது காலம் நான் எழுதமாட்டேன்; பிறகு எப்படி எழுதுவது என்பதை முதலிலிருந்து மீண்டும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த இடைவெளியில் கைகள் சோர்வடைந்து விடுகின்றன; மீண்டும் நீங்கள் எழுதும்போது ஏற்படும் அந்த அரவணைப்பை உணர்வதற்கு முன், நீங்கள் புதிதாகக் கற்கும் செயல்முறைக்கு உட்பட்டாக வேண்டும். எனவே, புத்தகங்களுக்கு இடையில் என்னைத் தொடர்ந்து எழுத வைக்கும் ஒன்றை நான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. எனது நினைவுக் குறிப்புகளை (memoirs) எழுதுவதன் மூலம் அந்தச் சிக்கலைத் தீர்த்தேன். அன்றிலிருந்து, நான் ஒரு நாள் கூட எனது மேசையை விட்டு அகன்றதில்லை. நான் பயணம் செய்யும்போது இவ்வளவு கண்டிப்புடன் இருப்பதில்லை, ஆனாலும் காலையில் எப்போதும் குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்வேன். ‘எழுத்து என்பது, நூறில் ஒரு பங்கு உத்வேகம், மீதம் தொண்ணூற்றொம்பது பங்கு கடும் உழைப்பு’ என்ற பழமொழியில் எத்தனையோ உண்மை இருக்கிறது என்பதை இவை அனைத்தும் உணர்த்துகின்றன. உத்வேகத்தின் அவசியத்தையும் நான் ஆதரிக்கிறேன்; ஆனால், அது தெய்வம் தரும் வரம் என்று நம்பிய ரொமாண்டிக் எழுத்தாளர்களின் அர்த்தத்தில் அல்ல. நீங்கள் ஒரு விஷயத்தில் கடுமையாக உழைத்து, அதன் சாரத்தைப் புரிந்துகொள்ள முயன்று, அதைப் பற்றிக் கவலைப்பட்டு, அதை ஒரு பெரிய நெருப்பாக ஊதி எழுப்பும்போது, ஒரு கட்டத்தை அடைவீர்கள். அங்கு நீங்கள் அதை முழுமையாகக் கட்டுப்படுத்தி, அதனுடன் ஒன்றிப் போய் விடுகிறீர்கள். இதன் விளைவாக ஒரு தெய்வீக அருள் உங்களை நடத்திச் செல்வதாக உணருகிறீர்கள். அந்த உத்வேக நிலை நிஜமாகவே இருக்கிறது. ஆம், அதை நீங்கள் அனுபவிக்கும்போது. அது நீண்ட காலம் நீடிக்காவிட்டாலும் கூட. ஒருவரால் அனுபவிக்கக்கூடிய மகிழ்ச்சி நிரம்பிய பேரனுபவம் அதுதான்.

ஸிந்துஜா weenvy@gmail.com

ஒரு கைப்பிடி சிவப்பு மண்

● இளங்கோ

ஓவியம்: ராட் கார்கில்

நான் முத்துவைச் சந்தித்தபோது அவருக்கு முப்பதாறு வயது. சிலோனிலிருந்து வந்திருந்த முத்து எனது கஸின் ஒருவன் மூலமாக எனக்கு அறிமுகமானார். அப்போது முத்துவின் ஏதோ ஒரு படைப்பு எங்கள் நகரின் பத்திரிகையிலொன்றில் வெளிவந்திருந்தது. அதை வாசித்ததைத் தவிர முத்துவைப் பற்றி எந்த அறிமுகமும் எனக்கு இருக்கவில்லை.

நான் அன்று வெள்ளை ஜார்ஜெட் சேலையும் அதே நிறத்தில் ப்ளவுஸும் அணிந்திருந்தேன். சேலையின் விளிம்புகள் வெல்வேட் சிவப்பு வர்ணத்தில் இருந்தது. முத்துவின் நீண்ட தலைமயிர் அவரின் தோள்களில் தவழ்ந்து கிடந்தது. அன்று அவர் கறுப்பு சர்வாணி அணிந்து கம்பீரமாக இருந்தார்.

பின்னாளில் எங்கள் முதல் சந்திப்பை முத்து நினைவுகூர்கின்ற போதெல்லாம், அரபிக்கடலில் தீப்பற்றிய ஓடும் ஓர் குதிரைபோல நீங்கள் இருந்தீர்கள் என்று சொல்வார். என்னவானாலும் முத்து ஓர் அசல் கவிஞனல்லவா. கவிஞர்களின் கற்பனை அசலான குதிரைகளை விட வேகமாக கடல்களின் மேலாகவும் ஓடக்கூடியவைதான்.



எனக்கு ஏனோ முத்துவை முதல் சந்திப்பிலே நன்கு பிடித்துவிட்டது. நாங்கள் இரண்டு வாரங்கள் தொடர்ந்து ஒவ்வொருநாளும் கிட்டத்தட்ட சந்தித்துக் கொண்டிருந்தோம். பெருநகரின் சந்தடிகள் தாண்டி புறநகரில் அமைந்திருந்த எங்கள் ஊர் முத்துவைக் கவர்ந்திருந்தது. அதன் விளிம்பிலிருந்த கடற்கரையில் தென்னைமரங்களும் சவுக்குகளும் நிறைந்திருந்தன. மாலைப்பொழுதுகளில் இந்த அழகில் மயங்கி நிற்கும் முத்து, சிலோனில் தான் கழித்த பள்ளிக்காலங்களை இது நினைவூட்டுகிறது என்பார்.


உங்களால் நம்புவதற்குக் கடினம் என்றாலும் நாங்கள் சந்தித்து பதினெட்டாம் நாளில் நானும் முத்துவும் திருமணம் செய்து கொண்டோம். முத்துவின் வாழ்க்கை இதற்கு முன்னர் எப்படி இருந்தது என்பதைக் கூட அவ்வளவு நானறியேன். என் உள்ளுணர்வு இந்த அருமையான மனிதனை இப்போது கைவிட்டேன் என்றால், எப்போதும் அவர் அருகில் இருக்கமுடியாது என்று சொல்லியிருக்க வேண்டும் போலும்.

எங்களுடைய தேனிநிலவுக் காலம் இந்தியாவின் பல்வேறு நகர்களில் கழிந்தது. முத்து அப்போதே உலகிற்கு நன்கு அறிமுகமான கவிஞன். நாங்கள் டெல்கிக்குப் போனபோது பிரதமர் நேருவை ஒரு நேர்காணல் முத்து செய்தார். அந்தப் பொழுதில் முத்து, ஜவஹர்லால் நேருவைப் பற்றி 'Times of Ceylon'இல் எழுதிய கவிதைகளைக் கொடுக்க, நேரு அதை வாசித்து அவ்வளவு மகிழ்ந்தார். எங்களுக்கு தனது இரண்டு புகைப்படங்களில் நேரு கையெழுத்திட்டு அன்புடன் அனுப்பி வைத்தார்.

நாங்கள் டெல்கியிலிருந்து, சிறிநகர், காஷ்மீர் என்று கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் தேனிலவைக் கொண்டாடினோம். காஷ்மீரில் இருந்தபோது நேரு தன் வீட்டுத் தோட்டத்தில் வைத்த ஒரு விருந்துக்கு எங்களையும் அழைத்தார். தூரத்திலே நானும் முத்துவும் வருவதைப் பார்த்த நேரு, "வாருங்கள் வாருங்கள்" என எங்களை அடையாளம் கண்டு உற்சாகமாக அழைத்தார். உரையாடலின் நடுவில், "இனி ஒரு போர் இந்தியாவில் வந்தால், காஷ்மீர்தான் தனக்கு மிகவும் பாதுகாப்பான இடம்" என்று சொன்னார். அதை இப்போது யோசிக்க சற்று அதிர்ச்சியாக இருந்தாலும், நேருவுக்கு அந்தக் காலத்தில் காஷ்மீர் பாதுகாப்பான இடமாகத் தோன்றியிருக்க வேண்டும்.

நாங்கள் அரசினுடைய விருந்தாளிகளாகவே காஷ்மீரில் சுற்றித் திரிந்தோம். காஷ்மீர் மன்னரும் எங்களை அழைத்து ஒரு தேநீர் விருந்து கொடுத்தார். முத்துவை அவரோடு பேசவிட்டு நான் ஷீக்காரா எடுத்து காஷ்மீர் ஏரியின் மோகனத்தை மாலை வெயிலில் அருந்தினேன்.

காஷ்மீரில் தங்கிருந்த நாட்களில் முத்துவுக்கு ஹேரி என்றவொரு ஆங்கிலேய எழுத்தாளர் அறிமுகமாயிருந்தார். அவரோடுதான் மாலைவேளைகளில் மது அருந்தியபடி இலக்கியம்பற்றி முத்து இரவிரவாகப் பேசியபடியிருப்பார். ஒருநாள் ஹேரி என்னைப் பார்த்து, "இந்த எழுத்தாளர்களோடு சேர்ந்து வாழ்வது என்பது மிகவும் கடினமானது.



அவர்கள் பிறரால் சகித்துக்கொள்ள முடியாத ஒருவகை விசித்திரமான உயிரினங்கள். எல்லாவிதமான அகச்சிக்கல்களையும் தம்வசத்தே உடையவர்கள். நானும் அதற்கு விதிவிலக்கல்ல. உங்களுக்கு குடும்பவாழ்க்கையில் முத்துவோடு சிக்கல் ஏதேனும் வந்தால், ஒரு சகோதர் போல என்னை எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்'' என்று சொன்னார். நான், ''மிக்க நன்றி ஹேரி'' என்று சிரித்தபடி தலையசைத்தேன். எனக்கு பின்னாட்களில் என் இல்லறத்தில் சிக்கல் வந்தபோது நான் ஹேரியைத் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர் நான் தொடர்புகொள்ள முடியாத எல்லைக்கு அப்பால் காலத்தின் நீட்சியில் போயிருந்தார்.

எங்கள் தேனிலவு முடிந்தபின் நாங்கள் எனது சொந்த நகருக்குத் திரும்பினோம். அந்த வீட்டில் எனது பெற்றோர் வாழ்ந்து கொண்டிருந்தனர். நானும் முத்துவும் அங்கேயே இருந்தோம். முத்துவுக்கு எனது பெற்றோரை நன்கு பிடித்துவிட்டது. முத்து ஓர் எழுத்தாளன் என்பதில் என் அப்பாவுக்கு எப்போதும் பெருமைதான். அவர்கள் இருவரும் சேர்ந்து பூத்தோட்டம் செய்தனர். தங்களின் நினைவுக்கு என்று மாதுளைமரமொன்றை ஊன்றி, தினமும் கவனமாகப் பராமரித்தனர்.

வாழ்வு இனிதாகக் கழிந்தாலும் முத்துவுக்கு இந்நகரில் இருந்தால் தன் படைப்புத் திறன் இல்லாமல் போய்விடும் என்ற எண்ணம் தலைதூக்கத் தொடங்கியது.

அது முத்துவின் தலைக்குள் ஒரு பல்லியைப் போல ஊரத்தொடங்கியதால் அந்த யோசனையை கைவிடவும் அவரால் முடியவில்லை.

நாங்கள் மீண்டும் பயணிக்கத் தொடங்கினோம். இம்முறை இந்தியாவுக்குள் அல்ல, முத்துக்குத் தெரிந்த இங்கிலாந்துக்கும் அல்ல. முத்து இந்தத் தடவை அமெரிக்காவுக்குப் போவது என்று அவ்வளவு உறுதியாக இருந்தார். இங்கிலாந்திலாவது முத்துவுக்கு நண்பர்கள் இருந்தார்கள், அங்கே ஏற்கனவே அவர் வெளியிட்ட சஞ்சிகையினால் முத்துவிற்கு இலக்கிய உலகிலும் ஒரு பெயர் இருந்தது. ஆனால், இவை அனைத்தையும் உதறிவிட்டு முத்து ஏன் அமெரிக்காவின் நியூயார்க்கைத் தேர்ந்தெடுத்தார் என்று எனக்கு இப்போதுவரை சரியான காரணத்தைக் கணடுபிடிக்க முடியவில்லை. ஒரு மனிதன் அழியவேண்டும் என்று தீர்மானித்தால் அதை எதனாலும் தடுக்கமுடியாது என்று சொல்வது, முத்துவுக்கு அமெரிக்காவுக்கு போவதில் இருந்த பெருவிருப்பின் பின்னால் இருந்ததோ என்றுகூட நான் சிலவேளைகளில் நினைப்பதுண்டு.

அமெரிக்காவுக்குப் போவதற்கு முன் நாங்கள் சிலோனுக்குப் போனோம். சிலோன் அவ்வளவு அழகான ஒரு தீவு. முத்துவின் குடும்பத்தினரும் நண்பர்களும் எங்களை வரவேற்று இனிமையான அனுபவங்களைத் தந்தார்கள். முத்து கொழும்பில் படித்த சென்.ஜோசப் கல்லூரிக்கு அழைத்துச் சென்று காட்டினார். அது போல அவர் தனது விடுமுறை நாட்களைக் கழித்த அவரின் பேரனாரின் ஊரான அச்சுவேலிக்கும் ஒரு நாள் கூட்டிச் சென்றார். முதன்முறையாக யாழ்ப்பாணத்தில்தான் சிவப்பு நிற மண்ணைப் பார்த்தேன். அந்தச் சிவப்பு மண்ணில் பசுமையாக காய்கறிகள் மலர்ந்து நின்று சிரித்துக் கொண்டு நின்றன.

முத்து கொழும்பிலோ, பின்னர் இங்கிலாந்திலோ வாழ்ந்தாலும் அவருக்கு யாழ்ப்பாணத்து மண்ணின் மீது ஈர்ப்பு இருந்திருக்கின்றது. அதனால்தான் அவர் சிறுகதைகளை எழுதத் தொடங்கிய காலத்தில், ஒரு பதிப்பாளர் தொகுப்பொன்றை விரைவில் வெளியிடலாம் என்று சொன்னபோது அதற்கு 'கையளவு சிவப்பு மண்' என்று தலைப்பு வைத்தவர். ஐந்து கதைகளை எழுதிவிட்டு, மீதி ஐந்து கதைகளைப் புதிதாக எழுதி பத்துக் கதைகளோடு ஒரு தொகுப்பாக வந்திருக்க வேண்டியது 'கையளவு சிவப்பு' என்கின்ற முத்துவின் சிறுகதைத் தொகுப்பு. ஆனால், 'மீண்டும் வேப்பம் மரத்திலேறிய பிசாசை'ப் போல முத்துவுக்கு மீண்டும் சிறுபத்திரிகை நடத்தும் ஆர்வம் வந்ததால், அத்தொகுப்பை அவர் கைவிட்டிருந்தது என்னால் ஒருபோதும் தாங்கிக் கொள்ளமுடியாத சோகம் எனச் சொல்வேன். எங்கள் திருமண வாழ்வு இடைநடுவில் கலங்கிப் போய் பிரிவு என்கின்ற எல்லைக்குப் போனதற்கும் முத்துவுக்கு சிறுபத்திரிகை வெளியிடுவதில் இருந்த மிகப்பெரும் வெறிதான் முக்கிய காரணம் எனச் சொல்வேன்.

நாங்கள் அமெரிக்கா போகும் வழியில் இங்கிலாந்தில் கொஞ்ச வாரங்கள் தரித்து நின்றோம். இங்கிலாந்தில் முத்துவுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் நண்பர்கள் விருந்துகளுக்கு அழைத்தார்கள். யன்னல்களை மூடிய அறைகளுக்குள் உட்கார்ந்தபடி மதுவும் புகைபிடிப்பதுமாக முத்துவும் நண்பர்களும் உரையாடிக் கொள்வார்கள். எனக்கு ஏற்கனவே ஆஸ்மாப் பிரச்சினை இருந்தது. மூடிய அறைகளுக்குள் புகை நிரம்ப எனக்கு மூச்சுவிடும் பிரச்சினை வரத் தொடங்கியது. இந்த அனுபவங்களால் எனக்கு இங்கிலாந்து துப்பரவாகப் பிடிக்காது போனது.

ஒருநாள் முத்துவையும் என்னையும் பிரபல்யமான கவிஞரான டி.எஸ்.எலியட் தேநீர் விருந்துக்கு அழைத்தார். எலியட்டுக்கு முத்துவின் எழுத்திலும் கறாரான வாசிப்பிலும் மிகுந்த மதிப்பிருந்தது. அன்றைய இங்கிலாந்தில் புதுக்கவிஞர்களுக்குரிய சிறந்த சஞ்சிகை முத்துவின் கவிதைக்கான சிற்றிதழே என்று எலியட் சொல்லியிருந்தார். முத்துவுக்கும் எலியட்டின் கவிதைகள் மீது மிகுந்த மதிப்பிருந்தது. எலியட்டின் அறுபதாவது வயதுக் கொண்டாட்டத்தின்போது அவருக்காக ஒரு சிறப்பு கவிதைத் தொகுப்பை முத்து வெளியிட்டு கௌரவப்படுத்தியும் இருந்தார்.

நாங்கள் இங்கிலாந்தில் இருந்து 'மகாராணி எலிஸபெத்' என்கின்ற கப்பலில் அமெரிக்காவுக்குப் போய் இறங்கினோம். நான் இந்தியாவை விட்டு எந்த நாட்டுக்கும் இதுவரை போனதில்லை, வசித்ததில்லை. எனக்கு எல்லாமே புதிதாக இருந்தது. முத்துவும் இதுவரை அமெரிக்காவுக்குப் போனதில்லை. எங்களுக்கு அமெரிக்கா வாழ்க்கைக்கு மட்டுமில்லை, காலநிலைக்கும் ஏற்ப எங்களை மாற்றிக் கொள்ளவும் மிகவும் கடினமாக இருந்தது.

நாங்கள் கையில் வெறும் அறுநூறு டாலர்ஸ்களோடு போயிருந்தோம். அமெரிக்கா போன முதல்நாள் முத்து ஒரு உணவகத்தில் மதுவருந்திக் கொண்டிருந்தபோது, எங்கள் சம்பாஷணையைக் கேட்ட அந்த உணவகத்தை நடத்திக் கொண்டிருந்தவர், “இன்று இங்கே Thanks Giving Day, எங்களின் வான்கோழி விருந்தை நீங்கள் எங்கள் செலவில் சாப்பிடவேண்டும்” என்று அழைத்தார். நானும் முத்துவும் வேண்டாம் வேண்டாம் என்று மறுத்தபோதும் அவர் தனது விருந்தைச் சாப்பிடாது போகக் கூடாது என்று கட்டாயப்படுத்தினார். விருந்தின் பிறகு அவர் சொன்னார், “நானும் உங்களைப் போல முப்பது வருடங்களுக்கு முன் கையில் எதுவும் இல்லாமல், உறவுகளைக் கைவிட்டு இந்த நாட்டுக்கு வந்திறங்கினேன். இப்போது உங்களைப் பார்க்கும்போது நீங்கள் என் கடந்தகாலத்தை நினைவுபடுத்தினீர்கள்” என்றார்.

இப்படியும் கருணை மிகுந்த மனிதர்கள் நியூயார்க்கில் இருப்பார்களா என்று எனக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால், இப்படி நிறைய அருமையான மனிதர்களை நான் அமெரிக்காவில் இருந்த அடுத்த ஆறு வருடங்களில் சந்தித்திருக்கின்றேன் என்பது எனக்குத் தரப்பட்ட ஆசிர்வாதம் என்பேன்.

நாங்கள் சில வாரங்கள் ஹொட்டலில் தங்கிவிட்டு எங்கேனும் வாடகை வீடு எடுப்பது என்று வீடு தேடத் தொடங்கினோம். பத்திரிகையில் வீடு வாடகைக்குத் தரும் விளம்பரம் ஒன்றைப் பார்த்துவிட்டு முத்து அழைத்தபோது எதிர்முனையில், "ஓ நீங்கள் முத்துவா, உங்கள் சிறுசஞ்சிகையின் இரண்டு இதழ்கள் எங்களிடம் இருக்கின்றன, என்னவொரு ஆச்சரியம்" என்று எதிர்முனையில் இருந்தவர் உரத்தகுரலில் சொன்னது எனக்கும் கேட்டது. இங்கிலாந்தில் இருந்து வெளிவந்த ஒரு சிற்றிதழை, அதன் ஆசிரியரை அமெரிக்காவிலும் அறிந்து வைத்திருப்பார்களா என்று எனக்கு வியப்பாக இருந்தது. எனது கணவர் முத்து அவ்வளவு இலேசுப்பட்ட ஆளென்று என்று எனக்குள் அந்தப்பொழுது பெருமிதம் பொங்கியது.

கலையில் உச்சத்தில் எப்போதும் ததும்பிக் கொண்டிருந்த முத்துவால், குடும்ப வாழ்க்கையின் பொறுப்புக்களைச் சுமக்கும் எளியவனாகக் கூடத் தன்னைப் பொருத்திக் கொள்ள முடியாததுதான், நமது குடும்பச் சக்கரம் தொடர்ந்தும் நாம் விரும்பிய திசையில் சுழலமுடியாமல் போனதற்குக் காரணமாயிற்று என்பது வேறு விடயம்.

முத்து வாடகைக்கு வீடு கேட்டு அழைத்துவிட்டு அந்த விடயத்தை கிட்டத்தட்ட மறந்துவிட்டு வேறொரு உலகில் சஞ்சாரிக்கத் தொடங்கிவிட்டிருந்தார். அந்த வீட்டுக்காரின் மனைவிதான், "முத்து விரைவில் எங்கள் வீட்டுக்கு வாருங்கள், உங்களுக்கான விஸ்கி குளிர்விட்டுப் போய்க் கொண்டிருந்தது" என்று நகைச்சுவையாக தொலைபேசியில் அழைத்து ஞாபகமூட்டினார். 'விஸ்கி' என்று நாமத்தைக் கேட்டவுடன் முத்து விடுவாரா என்ன? பிறகு நாங்கள் அந்த வீட்டில்தான் நீண்டகாலம் வாடகைக்கு இருந்தோம். வீட்டுச் சொந்தக்காரர்களும் எங்கள் குடும்பத்தில் ஒருவர் போல அவ்வளவு அந்நியோன்னியமாக ஆகியிருந்தார்கள்.

முத்து ஓர் எழுத்தாளரே தவிர, அவரொரு பத்திரிகையாளர் அல்ல. எனவே எழுத்தின் மூலம் பணம் கிடைப்பது அரிதாகவே இருக்கும். இந்தக் காலத்தில் நாங்கள் நிறையவே கஷ்டப்பட்டோம். நான் கொண்டுவந்திருந்த நகைகளை அடகுவைத்துத்தான் எங்கள் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. முத்து இந்தக் காலத்தில் அதுவரை எழுதிவந்த கவிதைகளை எழுதுவதைத் தவிர்த்து கதைகளை எழுதத் தொடங்கினார். அவற்றுக்கு நல்ல வரவேற்பும் கிடைத்திருந்தன. அப்படி எழுதிய கதைகளில் ஒன்றான 'மாதுளைமரம்' நியூ யார்க்கர் பத்திரிகையில் வெளிவந்தது. நியூ யார்க்கரில் ஓர் ஆக்க இலக்கியம் வெளிவருவது என்று எளிதல்ல. அதுவும் முத்துவைப் போன்ற மண்ணிறக்காரரின் கதைகளை அவர்கள் வெளியிடுவது என்பதே ஓர் விதிவிலக்கு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், முத்து கதைகளை எழுதத் தொடங்கிய ஆரம்ப காலங்களிலே இதை எளிதாகச் சாதித்துக் காட்டியவர். முத்து ஒரு ஜீனியஸ்தான். அதில் எந்தச் சந்தேகமும் எனக்கு இருக்கவில்லை. முத்து கதைகளை எழுதி அது பிரசுரமாகும்போது வரும் பணத்தை வைத்து, நான் அடகுவைத்த நகைகளை மீட்பேன்.

முத்து ஐந்தாறு கதைகளை எழுதியவுடன் ஒரு பதிப்பகம் அவரின் சிறுகதைத் தொகுப்பை வெளியிட பெரும்பணத்துடன் முன்வந்தது. இன்னும் ஐந்து கதைகளை எழுதியவுடன் பதிப்பிக்கலாம் என்று உடன்படிக்கையும் செய்திருந்தார்கள். ஆனால், படைப்பின் உச்சத்தில் இருப்பவர்களுக்கும் எளிதில் தங்களை அழித்துக் கொள்வதற்கும் என்ன தொடர்பு இருக்கின்றதோ தெரியாது. முத்து ஆக்கத்தின் பாதைக்குப் பதிலாக அழிவின் பாதையை எளிதாகத் தேர்ந்தெடுத்தார். தனது சொந்த ஆக்கங்களை எழுதுவதை விட, பலரின் ஆக்கங்கள் வரும் ஒரு சஞ்சிகைக்கு ஆசிரியராவதே பெரும்பணியென சிறுபத்திரிகையொன்றை மீண்டும் அமெரிக்காவிலிருந்து வெளியிடவேண்டும் என்று கங்கணம் கட்டத் தொடங்கினார்.

"முத்து, இப்போது நீங்கள் நன்றாகக் கதைகள் எழுதுகின்றீர்கள். அதனால் எங்கள் நிதிநிலைமையும் கொஞ்சம் சுமுகமடைகிறது. சொந்தக்காசைச் செலவிட்டு சிறுபத்திரிகை வெளியிடுவதெல்லாம் ஆபத்தானது. இப்போது வேண்டாம்" என்று அவரிடம் நான் எவ்வளவோ கெஞ்சியிருக்கின்றேன். சாத்தான் உங்கள் வீட்டு வாசலில் நிற்கும்போது கூரையைப் பிரித்து லட்சுமி வந்தாலும் அவளை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன் என்று அடம்பிடிப்பவர்களோடு நாங்கள் என்ன செய்யமுடியும்? கடைசியில் நான் முத்துவை விட்டு விலகிப் போக வேண்டியிருந்தது.

முத்து, சிலோனிலிருந்து இங்கிலாந்துக்கு வந்தபோது அவருக்கு இருபத்து மூன்று வயது. இங்கிலாந்துக்கு வந்துதான் முத்துவின் இலக்கியத்திறமை முகிழ்ந்ததென்று சொல்ல முடியாது. இலங்கையில் இருக்கும்போதே முத்து இரண்டு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருந்தார். இங்கிலாந்துக்கு முத்து போய் இரண்டு வருடங்களிலே கலை அவரது வாழ்வை காணிக்கையாகக் கேட்டிருக்கின்றது. முத்து அவரது இருபத்தைந்தாவது வயதில் முதல் சிற்றிதழை இங்கிலாந்தில் வெளியிடுகின்றார். நவீன கவிதைகளுக்கான இதழாக இருந்த அது,

மரபுக்கவிதைகளுக்குள் திணறிக்கொண்டிருந்த அன்றைய இங்கிலாந்து இலக்கியச் சூழலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த இதழில் எழுதுவதே கவிதை உலகினுள் இருப்பவர்களுக்கு மரியாதைக் தருகின்றது என்கின்ற பேச்சை முத்துவின் சிற்றிதழ் ஓரிரு இதழ்களிலே ஏற்படுத்தியிருந்தது.

முத்து ஒரு கவிஞர் மட்டுமில்லை. நேர்த்தியான வாசகரும் கறாரான எடிட்டரும் கூட. அவர் தனது சிற்றிதழில் எழுதும் ஆசிரியத்துவமே அவ்வளவு அற்புதமாக இருக்குமென பலர் குறிப்பிட்டிருக்கின்றனர். ஒரு சிற்றிதழை பெரும் பின்னணியில்லாது நடத்துவது அவ்வளவு இலகுவல்ல. அதுவும் ஒரு குடியேறி மண்ணிறக்காரர் வெள்ளையினத்துவர்களுக்கு மாற்றாக அந்நியமண்ணில் நிமிர்ந்து நிற்பது சுலபமும் அல்ல. ஆனால், முத்து புறக்காரணங்களை விடுத்து கலைக்கு தன்னை முழுதாகத் தாரை வார்த்தவர். கலையன்னையும் முத்துவுக்குள் திறமையை அள்ளியள்ளி கொட்டினாள். இளமையின் தீவிரமும் எழுத்தின் மீதான காதலும் முயங்க முத்து ஒரு தனித்த நட்சத்திரமாக இலக்கிய வானில் மின்னத் தொடங்கினார்.

இந்தக் காலத்தில்தான் முத்து, ஹென்றி மில்லரினதும், விளாடிமீர் நபக்கோவினதும் நாவல்களையும் தனது பதிப்பகத்தினூடாக வெளியிட்டார். பத்து வருடங்களில் பதினைந்து இதழ்களையும், பல எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டபோதும், வாழ்வதற்கான பணமீட்டுதலில் முத்து எப்போதும் பின் தங்கியே நின்றார். கையில் காசு புழங்கும்போது நண்பர்களோடு விருந்துகளுக்குச் செலவழிக்கத் தயங்காத ஒருவராகத்தான் முத்துவை அவரின் நண்பர்களை நான் இங்கிலாந்தில் சந்தித்தபோது சொல்லியிருக்கின்றார்கள்.

ஒருசமயம் சிற்றிதழை வெளியிட கையில் அவ்வளவு காசு இருக்காதபோது, நபக்கோவின் 'லோலிடா'வும், ஹென்றி மில்லரின் 'Tropic of Cancer'ம், முத்துவின் பதிப்பகத்துக்கு பிரசுரிக்க வந்திருக்கின்றது. முத்து ஒரு கறாரான வாசகர் என்பது ஏற்கனவே நமக்குத் தெரிந்தது. நபக்கோவின் முன்னைய ஆக்கத்தின் தரத்துக்கு 'லோலிடா' இல்லையென்றும், மில்லரின் நாவல் பாலியலை இலக்கியத்தரத்துக்கு உயர்த்தவில்லை என்றும் முத்து நிராகரித்திருந்தார். அதுதான் முத்து. அவர் எங்கும் சமரசம் செய்வதற்கு தயாராக இருந்ததில்லை. ஆனால், இலக்கிய உலகில் லோலிடாவும், Tropic of Cancerம் எந்தளவுக்குப் பின்னர் பிரபல்யமானது என்று அனைவருக்கும் தெரியும். ஒருவேளை முத்து தன் எழுத்தின் மீதான் அறத்தைக் கைவிட்டிருந்தாரென்றிருந்தால் அன்றே அவர் வசதியான ஒரு பதிப்பாளராக மாறியிருக்கலாம். ஆனால், எந்த இடாம்பீகத்தையும் தன் கலை மனதுக்கு எதிராக சூடிக்கொள்ளக்கூடாது என்பதில் முத்து உறுதியானவர் என்பதால் எனக்கு இந்தச் சம்பவங்களைப் பின்னர் அறிந்தபோதெல்லாம் வியப்பு வரவில்லை.

ஒருமுறை நியூ யார்க்கில் 'இண்டியா ஹவுஸில் ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கு அன்றைய ஜனாதிபதியும் தத்துவவவாதியுமான ராதாகிருஷ்ணன் வந்திருந்தார். முத்துவுக்கு எல்லாம் மனிதர்களும் ஒரே மாதிரியானவர்களே. நேருவைச் சந்தித்த அதே மகிழ்ச்சியோடு, அவரைத் தெருவில் அடையாளம் கண்டு பேசும் அந்நியரோடும் முத்துவால் கவிதைகள் குறித்து உரையாட முடியும். இந்த விருந்தில் முத்து, ராதாகிருஷ்ணனைக் கைகளைப் பிடித்தபடி தமிழில் தாலாட்டுப் பாடல்களைச் சேர்ந்து பாடியிருக்கின்றார். எனக்கு தமிழ்மொழி தெரியாது. ஆனால், இவர்கள் இருவரும் பாடியதைக் கேட்க எனக்குள் அமெரிக்க தந்த மனவழுத்தமெல்லாம் கொஞ்சநேரத்துக்கு விட்டுவிலகியது போலத் தோன்றியது. அம்மாவின் மடியில் மீண்டும் குழந்தையாக மாறியது போல அந்தத் தாலாட்டுப் பாடல்களில் நானென்னை உணர்ந்தேன்.

முத்து அவரது தாயை அவரின் பதினாறு வயதில் இழந்தவர். அவருக்கும் இந்த தாலாட்டுப்பாடல் ஒருவகையில் தாயைத் தொலைத்த துயரத்துக்கு இதம் கொடுத்திருக்கக் கூடும்.

முத்து ஒரு ஜீனியஸ்தான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால், ஒரு பெண்ணால் ஒருவரின் அறிவையோ ஆளுமையோ மட்டும் வைத்துக் கொண்டு இல்லறத்தை அவருடன் நடத்திவிட முடியாது. எங்களுக்குள் நிறையப் பிரச்சினைகள் வரத்தொடங்கின. என்னாலும் எவ்வளவு காலத்துக்குப் பொறுத்துக் கொள்ள முடியும். எனக்குள் இருந்த ஆஸ்மா, மனவழுத்தம் கூடும் காலங்களில் நிறைய வந்து நான் மிகவும் கஷ்டப்பட்டேன். ஒருநாள் முத்து தனக்கு சுதந்திரமாக இருந்து எழுத வேண்டும், என்னால் இந்தக் குடும்பச் சுமையைத் தாங்க முடியாது என்று அழுத்தமாகச் சொன்னபோது, எனக்கு அதற்குப் பிறகு எந்தத் தேர்வும் இருக்கவில்லை. நான் ஆறுவருடங்களுக்குப் பிறகு அமெரிக்காவிலிருந்து என்றென்றைக்குமாக முத்துவை விட்டுப் பிரிந்து தாய்நாடான இந்தியாவுக்குத் திரும்பினேன்.

அதற்குப் பிறகு முத்துவின் வாழ்க்கை இன்னும் கடினமாகிக் கொண்டு போனது. கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கு அடிமையாகவும் முத்து மாறத்தொடங்கினார். ஆனால், வைராக்கியத்துடன் வறுமைக்கிடையிலும் அமெரிக்காவிலிருந்து சிறுசஞ்சிகையை வெளியிடத் தொடங்கினார். முத்துவின் அந்த சஞ்சிகையில்தான் அன்றைய அமெரிக்கா 'பீட்ஸ்' தலைமுறை எழுத்தாளர்கள் நிறையப் பேர் எழுதத் தொடங்கினார்கள். தனது இதழுக்கு நிதியுதவி செய்த பெண்மணிக்கு, ஆலன் கிங்ஸ்பேர்க்கை அறிமுகம் செய்து, அவரின் செலவீனங்களைப் பொறுப்பேற்கச் செய்தவர் முத்து. ஆனால், பின்னாட்களில் முத்து வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் திணறியபோது, முத்துவின் நண்பர், ஆலனிடம் முத்துவுக்கு உதவி செய்யக்



கோரியபோது, ''நாம் எல்லோரும் வறுமையின் பிடிக்குள்தான் இருக்கின்றோம்'' என்று முத்துவுக்கு அவர் உதவாவததையிட்டு எனக்குக் கவலை இருக்கின்றது. இத்தனைக்கும் முத்து, ஹார்வேட்டின் கவிதை கிளப்புக்கு தலைவராகப் போட்டியிடவேண்டும் என்று முத்துவைப் பரிந்துரை செய்து உற்சாகப்படுத்தியவரே இந்த ஆலன் கிங்ஸ்பேர்க்தான்.

இந்தக் காலத்தில்தான் முத்து, எஸ்தா ஸ்மித்தை திருமணம் செய்திருந்தார். அவர்களுக்கொரு மகள் பிறந்தபோது நான் தான் அந்தக் குழந்தையின் god mother என்று முத்து சொல்லியிருக்கின்றார். அதுமட்டுமின்றி சகுந்தலா என்கின்ற அவளுக்கு என்னுடைய பெயரை இடைப்பெயராகவும் முத்து சூட்டியிருந்தார். நான் அவள் பிறக்கப்போகின்றாள் என்ற செய்தியறிந்து என் கையாலே அவளுக்கு ஸ்வெட்டரும் குல்லாயும் பின்னி அனுப்பியிருக்கின்றேன்.

நான் முத்துவின் மனைவி என்ற அடையாளத்திலிருந்து எப்போதோ வெளியே வந்திருந்தாலும், முத்துவை ஒருபோதும் கைவிடத் தயாரில்லை. என்னதான் பிள்ளைகள் தவறான பாதையில் நடந்துபோனாலும், அவர்களின் அன்னைகள் அப்பிள்ளைகளைக் கைவிடாது அரவணைப்பது இல்லையா? அப்படித்தான் நான் முத்துவை அவ்வளவு எளிதில் கைவிடத் தயாராக இருக்கவில்லை. முத்துவால் ஒரு சாதாரண லௌகீக வாழ்க்கையை நடத்த முடியவில்லை என்பது கசப்பான உண்மை. ஆனால், அவருக்குள் ஊறிக்கொண்டிருந்த எழுத்துத் திறமையை அருகிலிருந்து கவனித்த நான் முத்துவை எப்படி வெறுக்க முடியும்?

முத்துவுக்கு பெண்களின் துணை எப்போதும் தேவை. ஆனால், ஒருகட்டத்துக்குப் பிறகு அவரால் அந்த அரவணைப்பின் வெம்மையைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர் என்னைப் போல எஸ்தா ஸ்மித்திடமிருந்தும் விவாகரத்துப் பெற்றுவிட்டு, பதினெட்டு வருடங்கள் அமெரிக்காவில் கழித்துவிட்டு மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பியிருந்தார்.

நான் முத்துவை இங்கிலாந்தில் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்குப் பிறகு நேரில் சந்தித்தேன். இந்த இடைக்காலத்தில் நான் எனது தந்தையரை வயோதிகத்தின் நிமித்தம் இழந்திருந்தேன். அப்போது முத்து எனது தாயாருக்கு அவ்வளவு உருக்கமான கடிதமொன்றை எழுதியிருந்தார். அதை வாசிக்குந்தோறும் அம்மாவின் விழிகளில் நீர் பெருகியபடி இருக்கும். முத்துவும் எனது அப்பாவும் சேர்ந்து நட்டு வளர்ந்த மாதுளை இப்போது முத்துமுத்தான மாதுளம் பழங்களைத் தருகின்றது. தனது சிறுவயது ஞாபகங்களை வைத்து முத்து, நியூ யார்க்கரில் 'மாதுளைமரம்' என்று ஒரு கதையை எழுதியதுபோல, என்றேனும் ஒருநாள் எங்கள் வீட்டு மாதுளை குறித்தும் முத்து ஒரு கதை எழுதுவார் என்று நான் எதிர்பார்த்திருக்கின்றேன்.

முத்துவை இருபது வருடங்களின் பின் சந்தித்தபோது முத்துவிடமிருந்து எதுவோ தொலைந்து போனது போல இருந்தது. இப்போது முத்து எனக்கு ஓர் அந்நியன். நான் நெருங்கவே முடியாத தொலைவில் இருப்பவர். தனிமையும் துயரமும் முகத்திலும் உடலிலும் வழியும் ஒரு முத்துவை நான் அப்போது கண்டேன். ஆனால், முத்துவின் நகைச்சுவை உணர்வு குறையவே இல்லை. ஏதோ இப்போதுதான் புதுக்காதலியை காண்கின்றது மாதிரி ஒரு ரோஜாப்பூவோடுதான் விமானநிலையத்துக்கு வந்திருந்தார். அது தன் வீட்டுத் தோட்டத்தில் வளர்ந்த ரோஜாச் செடியிலிருந்து பறித்துக்கொண்டு வந்தது என்று சொன்னார்.

வறுமை முத்துவை ஆழ்குழிக்குள் புதைத்திருந்தாலும், கலை அவரைக் கைவிடத் தயாராக இருக்கவில்லை. அவர் இங்கிலாந்தில், இந்திய-இலங்கை கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் ஒரு இடம் அமைக்கவேண்டுமென்ற கனவில் இயங்கிக் கொண்டிருந்தார். என்னைச் சந்தித்த இரண்டு ஆண்டுகளில் இந்தியாவுக்கு

அவரின் மகளோடு வந்திருந்தார். முத்து இன்னும் கம்பீரம் இழக்காத காட்டு யானையாகவே அந்த வயதிலும் இருந்தார். அப்போதைய பிரதமராக இருந்த இந்திரா காந்தியைச் சந்தித்து முத்து தனது கனவுத் திட்டத்தைச் சொன்னார். இந்திராவும் மிகவும் அகமகிழ்ந்து அதற்கு ஒப்புதல் கொடுத்து, முத்து இந்தியாவைச் சுற்றிப்பார்க்கும் முழுச்செலவையும் தானே எடுத்துக் கொள்வதாகவும் சொன்னார். முத்துவும் மகளும் விரும்பியவளவுக்கு இந்தியாவைச் சுற்றி பார்த்து மீண்டும் இங்கிலாந்துக்குக்குத் திரும்பியிருந்தார்.

இதற்கிடையில் ஒருநாள் அவர்கள் இருவரும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தனர். முத்து எங்கள் வீட்டில் ஒருவருடம் கழித்த நாட்களைப் பற்றி தன் மகள் சகுந்தலாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது முத்து அமெரிக்காவுக்குப் போனதன் பிறகும் என் அப்பா முத்துவின் ஞாபகமாய் வளர்த்தெடுத்த மாதுளை மரத்தைப் பார்த்ததும் முத்து சட்டென்று கேவி அழத் தொடங்கினார்.

முத்துவின் இருக்கும் குழந்தை மனதை நான் அவருக்கு மனைவியாக இருந்தபோது அருகிலிருந்து பார்த்தவள். ஆனால், மகள் சகுந்தலாவுக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. நான் முத்துவை அணைத்து ஆறுதல் சொன்னேன். சட்டென்று, "சாஃபியா உனக்கும் உன் குடும்பத்தினருக்கும் நான் பெரும் தவறு இழைத்துவிட்டேன் அல்லவா?" என்று என் நெஞ்சுக்குள் புதைந்த முத்து சொன்னபோது என்னாலும் உணர்வுகளை அடக்கமுடியவில்லை. நானும் உடைந்து அழத் தொடங்கிவிட்டேன்.

கடந்தகாலம் எப்போதும் அழகாக இருக்கின்றது. நிகழ்காலம் மட்டும் ஏன் இப்போது கொடுமையாக இருக்கின்றதோ தெரியவில்லை. இல்லை, இந்த நிகழ்காலத்தின் அழகைப் பார்ப்பதற்கும் அது கடந்தகாலமாகப் போவதுவரை காத்திருக்க வேண்டுமா என்றும் எனக்குத் தெரியவில்லை. முத்து எழுதிய கவிதைகளில், தத்துவமும் ஆன்மீகமும் பின்னிப்பிணைந்த நீள்கவிதையான 'கீதா சரஸ்வதி' அவரின் உச்சப்படைப்பு என்று பலர் சொல்வார்கள். முத்துவுக்கு கலைகளில் உச்சத்தில் இருக்க சரஸ்வதி அருள் வழங்கியதுபோல, அவர் ஒரு குடும்பத் தலைவனாக இருக்க எந்தக் கடவுளும் ஆசி வழங்கவில்லை போலுமென முத்துவை நினைக்குந்தோறும் எனக்குள் சொல்லி ஆறுதற்படுத்திக் கொள்வேன்.

முத்து இந்திய-இலங்கை கலை கலாச்சாரத்துக்கென ஓர் அரங்கு அமைக்க விரும்பிய இடத்தில் இருந்த அலுவலகத்தில் ஓர் நாள் சட்டென்று உடல் நலிந்து கீழே விழுந்தார். பிறகு சில நாட்கள் வைத்தியசாலையில் இருந்தபின் இறந்தும் போனார். அவருக்கு வந்தது மாரடைப்பு என்றனர். முத்து அவரின் கனவொன்று நனவாக முன்னர் காலமாகிவிட்டார் என்பது எனக்கு மிகுந்த கவலை. அதற்குள் மூன்றாவது தடவையாக இங்கிலாந்தில் இருந்து புதிதாக ஒரு சிற்றிதழைத் தொடங்கி இரண்டு மூன்று இதழ்களையும் வெளியிட்டிருந்தார். அதுதான் முத்து. எழுத்து என்று வரும்போது ஒருபோதும் ஓய்ந்து கிடப்பதை விரும்புவதில்லை அவர்.

இன்றைக்கு முத்து தூவிய கனவில் இந்திய கலாசார மண்டபம் இங்கிலாந்து மண்ணில் உயர்ந்து நிற்கின்றது. அங்கே உலகில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் கலைஞர்கள் வந்து தமது கலைகளை அரங்காற்றியபடி இருக்கின்றனர். இன்று நிகழ்த்துக்கலைகள் நிகழும் இடத்திலே முத்துவின் அன்றைய அலுவலகம் இருந்தது.

"சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும், என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்று ஈழக்கவிஞன் பாடியிருக்கின்றான் என்று முத்து அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். முத்துவுக்கு ஆங்கில கிறிஸ்தவ பெயர் இருந்தபோதும் அவர் ஒருபோதும் அதைப் பாவித்ததில்லை. அவர் தனித்தமிழ் பெயரையே கடைசிவரை பாவித்தவர். அதுமட்டுமின்றி முத்துவின் பல நண்பர்களுக்கு முத்து ஓர் தமிழ் இந்து என்றுதான் தெரியும். அவரின் மரணச்சடங்கு கிறிஸ்தவ தேவாலயத்தில் நடந்தபோதுதான் அவர் ஒரு கத்தோலிக்கர் என்பதைப் பலர் முதன்முதலாக அறிந்திருக்கின்றனர்.

அதுபோல ஒரு தமிழ் பேசும் நிலத்திலிருந்து வந்த முத்து கடைசிவரை எந்தவகை துயரம் அவரைச் சூழ்ந்தபோதும் இலக்கியத்தின் மீதான பித்திலிருந்து வெளியேறவே இல்லை. முத்துவுக்கும் எனக்கும் இடையில் வந்த சிக்கல்கள் ஒரு நூறாவது இருக்கும். முத்து இல்லாதபோது இப்போது அதைப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கப் போகின்றது. எந்த ஒருவரும் நெருங்கிப் பார்க்காத முத்துவின் இன்னொரு பக்கம் நானறிவேன். சொர்க்கமும் நரகமும் பற்றியெறிய நடராஜர் ஒரு நடனமாடினால் எப்படியிருக்கும்? அப்படித்தான் முத்துவை நான் உருவகப்படுத்திக் கொள்வேன்.

முத்துவின் எழுத்துக்கு ஓர் இடம் இருப்பதைப் போல, அவர் எங்கள் வீட்டு மாதுளையின் முன் விட்ட கண்ணீருக்கும் ஓரிடம் இருக்கின்றது. நீங்கள் அவரின் இலக்கியப் பக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நான் முத்துவின் அந்தக் கண்ணீரின் ஒருதுளியை எனக்காக எடுத்துக் கொள்கிறேன்.

நான் முத்துவை அந்தளவு நேசிக்கின்றேன். முத்து! நீங்கள் இனியொரு பொழுதும் என் முன் மட்டும் அல்ல, எவர் முன்னும் அழக்கூடாது.

தனது நித்திய காதலன் அழுவதை எந்தப் பெண்ணால்தான் தாங்கமுடியும்?

இளங்கோ <elanko@rogers.com>



வெ. தமிழ்க்கனல் கவிதைகள்

1. ஒற்றைச் சொல்

முதலில் எச்சரித்தீர்கள்
பின்பு மிரட்டினீர்கள்
பிறகு தோதான
ஒரு மாலை வேளையில்
தடதடக்கும் ரயில் நிலையத்தில்
கருக்கேறிய வீச்சருவாள்களுக்கு
எங்களை இரையாக்கி
மீசை முறுக்கிச் சென்றீர்கள்
உயிர் பிரியும் தருவாயில் கூட
உங்கள் ஆசை மகளின்
சன்னமான குரலில் எழுந்தடங்கியது
அப்பாவென்ற அந்த
ஒற்றைச் சொல்தானென்பது மட்டும்
கடைசிவரை உங்களுக்குத்
தெரியாதிருக்கட்டும்

2. பின் தொனித்தக் குரல்

தகிக்கும் வெய்யிலில்
கட்டை விரல் உயர்த்தி
லி.்.ப்ட் கேட்டவருக்குத்
தெரு முக்கில் வளைவதாகச்
சொன்னீர்கள்
யாகசம் கேட்டு எதிர்ப்பட்ட
முதியவளிடத்தில்
உதடு பிதுக்கினீர்கள்
மூணா நம்பர் போயிருச்சாப்பா
என்ற கேள்விக்கு
உங்களிடத்தில் பதிலேதுமில்லை
ஆக்ஸிலேட்டர் முறுக்கி விரைகையில்
தம்பி சைடு ஸ்டாண்டு என
பின் தொனித்த அக்குரல் மட்டும்
நிச்சயமாக
உங்களுக்கானவைதான்

3. வழிபாடு

பேருந்தின்
சன்னலோர இருக்கையில்
பயணித்து வருபவர்
வழிநெடுகே தென்படும்
கோயில்களைக் காணும்போதெல்லாம்
கன்னத்தில் போட்டுக்கொள்கிறார்
தரினம் தனக்கு வாய்க்கவில்லையே
என்றெண்ணியபோது
அடுத்த நிறுத்தமொன்றில் ஏறினாள்
வயதான ஒரு மூதாட்டி
அவருக்கு இடமளித்து
நான் எழுந்துகொள்கையில்
"எஞ்சாமி நல்லாருக்கணும்" என்கிறாள்
தன் பொக்கை வாய் தழுதழுக்க
இப்போது அந்த சன்னலோர
இருக்கைக்காரருக்கு
பேருந்திற்குள்ளும்
தென்படத் துவங்கியிருக்கலாம்
மற்றுமோர்க் கடவுள்

4. மாற்றுச் சேலை

தொட்டிலில்
சிறுநீர்க் கழித்த
சிறு குழந்தைக்குத்
தெரிய வாய்ப்பில்லை
கட்டியதுபோக
தன் தாயிடம் இருப்பது
இந்த ஒரு சேலைதானென்று

வெ. தமிழ்க்கனல் <mohanasundaram359@gmail.com>

தாயை மாண்புள்ள மனுசியாகப் பார்க்கும் நூறு சாமி

● அ.இருதயராஜ்

இயக்குநர் சசி இயக்கத்தில் வெளி வந்திருக்கிற ‘நூறு சாமி’ எளிமையான கதையோடும் அழுத்தமான திரைக்கதையோடும் குறைவான பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படம். என்றாலும் தமிழகமெங்கும் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. ஏற்கனவே ‘பிச்சைக்காரன்’ படத்தில் தாயை ஒரு தெய்வமாகப் பார்க்கிற கதையை முன்னிறுத்திய சசி, ‘நூறு சாமி’ படத்தில், தாயை மனுசியாகப் பார்க்க முயற்சி எடுத்திருக்கிறார்.

கணவனை இழந்த ஒரு பெண், சமூகத்தில் சவால்களை எப்படி தன்னந்தனியாகச் சந்திக்கிறாள்; அவளுடைய குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் எப்படி அரும் பாடுபடுகிறாள்; அவர்களைப் படிக்க வைத்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காக எப்படிப்பட்ட துன்பங்களையெல்லாம் தாங்குகிறாள் என்பது பலருக்கும் தெரியாமல் போய்விடுகிறது. இந்த படம், செல்வி என்ற கைம்பெண் தன்னுடைய குடும்பம், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், பொது சமூகம் இவை அனைத்தையும் எப்படி சமாளிக்கிறாள் என்பதை மிக அழகாகக் காட்டியிருக்கிறது. இதன் மூலம், இந்தச் சமூகம் சுமத்துகிற பல்வேறு விதமான அவப் பெயர்களையும் சகித்துக் கொள்ள முடியாத வலிகளையும் சங்கடங்களையும் ஒரு கைம் பெண் எப்படி கடந்து செல்கிறாள் என்பதை சசி பேசுபொருளாக மாற்றியிருக்கிறார்.



இந்து பாரம்பரியத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும், அவனுடைய இறந்த உடலோடு சேர்ந்து புதைப்பட வேண்டும் அல்லது எரிக்கப்பட வேண்டம் என்கிற நிலை இருந்திருக்கிறது. சதி என்ற உடன்கட்டை ஏறும் இந்த அகோரமான பழக்கவழக்கத்தை எதிர்த்துப் பல தலைவர்கள் கடுமையாகப் போராடியிருக்கிறார்கள். சதிகோட்பாட்டை உடைப்பதற்கு பாடுபட்டிருக்கிறார்கள். அதிலிருந்து மீண்டு பின்னர் கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்ளலாம் என்ற கருத்தைப் பரப்பியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில், பெரியார் முன்நின்று ஒரு சில விதவை திருமணங்களையும் நடத்தி வைத்தார். இது அவர் காலகட்டத்தில் மாபெரும் புரடசிகரமான நிகழ்வு. அதன் பிறகு விதவை திருமணத்துக்கு சாதமாகப் பல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், இன்றும் சமூகத்தில் மறுமணத்தை ஆதரிக்கிற எண்ணங்கள், சிந்தனைகள், குறைவாகவே இருக்கின்றன.

இந்தப் படத்தில் செல்வி, ஓர் ஆசிரியருடைய, “நீங்கள் ஏன் மறு திருமணம் செய்து கொள்ளக் கூடாது?” என்ற கேள்விக்குப் பதில் தேடுகிறாள். அவளது மூத்த மகன் பாஸ்கரிடம், “ஏன் உங்க அம்மாவுக்கு ஒரு திருமணம் செய்து வைக்கக் கூடாது” என்ற அந்தப் பள்ளிக்கூட ஆசிரியர் கேள்விக்கு அவன் பதிலே சொல்லவில்லை. அம்மாவிற்கு அப்படியொரு ஆசை இருப்பதை எண்ணி அவன் கோபப்படுகிறான். அம்மாவை வெறுக்கிற பிள்ளையைக் கண்டு தாயே பயப்படுகிறாள். ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, பாஸ்கர் பக்குவப்பட்ட நிலைக்கு வந்தபிறகு, தானும் ஒரு பெண்ணை அன்பு செய்ய முயற்சிக்கிறபொழுது, தன்னுடைய அம்மா தனியாக இருக்கிறார்களே என்று சிந்திக்கிறான். ஒரு பெண் துறவியின் சிந்தனைப் பகிர்வு அவனுடைய மனக்கண்களைத் திறக்கிறது. அந்தப் பெண் துறவி, பாஸ்கரிடம், “இந்த உலகத்துல பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் மூன்று விதமான அடிப்படைத் தேவைகள் இருக்கின்றன. சாப்பிடுவது, தூங்குவது, ஒரு துணையைத் தேடுவது. உடல் ரீதியான ஏக்கத்தைப் போக்குவதற்கு தான் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்தை யோசித்திருக்கிறார்கள். ஒரு பெண் அல்லது ஆண், துணை இல்லாமல் வாழவே முடியாது. அது கொஞ்சம் கொஞ்சமா நம்மளை கொன்னுகிட்டே இருக்கும். எனவே 43 வயசு ஆனாலும் அம்மாவுக்கு ஒரு ஆசை



இருந்தால், அந்த ஆசையைத் தெரிந்துகொண்டால், மறுமணம் செய்து வைப்பதில் எந்தத் தவறும் இல்லை. இதை நீயே உங்க அம்மா கிட்ட கேட்கலாம். என்ன இருந்தாலும் நீ அவளுடைய பிள்ளை. அவள் உனக்கு அம்மா. அவள் கிட்ட கேக்குறதுக்கு ஒன்னும் தயங்க தேவையில்லை'' என்று கூறுகிறார். அதன் பிறகுதான் அவன் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்க முன் வருகிறான். செல்வி விரும்புகிறபோது பாஸ்கர் மறுமணத்தை ஆதரிக்கவில்லை. பாஸ்கர், அம்மாவுக்குத் திருமணம் செய்து வைக்க முன் வருகிறபொழுது, அவள் பயப்படுகிறாள்.

கணவனை இழந்த பிறகு செல்வி தனிமையைச் சந்திக்கிறாள். கணவனும் இல்லாமல் பிள்ளையும் இல்லாமல் வெறிச்சோடிப் போயிருக்கிற வீட்டில் தனிமை போக்குவதற்காக உயிரற்ற ஜடமான ஒரு மின் விசிறியிடம் பேசுகிறாள். இறந்து போன கணவரிடம் பேசுவது போன்ற தோற்றத்தை அது தருகிறது. ஒவ்வொரு உயிருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஆசை அடிப்படையிலே இருக்கும். ஆனால், அந்த ஆசையை அப்படியே வெளியில் சொல்ல முடியாமல் மனப் புழுகத்துடன் தான் ஒவ்வொரு பெண்ணும் இந்தச் சமூகத்தில் வாழ வேண்டியிருக்கிறது. கணவனை இழந்த ஒரு கைம்பெண் தனக்கு இன்னொரு துணை தேவை என வெளியிலே திறந்த மண்ணுடன் பேச முடியாது. பேச முயற்சி எடுத்தாலும் அதை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவார்கள். அதைத்தான் செல்வியின் மகனும் செய்கிறான். ஒரு பெண் தனியாக எப்படி இருக்க முடியும் என்ற சிந்தனை தான் அந்த ஊரில் ஒவ்வொருவருக்குள்ளும் ஓடிக் கொண்டிருக்கிறது. அவளை எப்படி சீண்டி பார்க்கலாம்? அவளை எப்படி தன்னுடைய கைக்குள்ளே கொண்டு வரலாம்? இந்தச் சமூகத்தினுடைய பொது ஒழுங்கை மீறி அவள் இன்னொரு திருமணம் முடிக்க முடியுமா? அதையெல்லாம் பார்த்துவிட்டுத் தான் செல்வி கேள்வி கேட்கிறாள்: ''தனியாக இருக்கிற ஒரு பெண்ணை மதிப்புடனும் கௌரவமாகவும் நடத்துகிற சமூகம் எங்காவது இருக்கா என்ன?''

'நூறு சாமி' படம் முழுவதும் ஒரு கருத்தியல் போர் நடக்கிறது. இந்தச் சமூகம் ஒரு கைம்பெண் மீது திணித்து வைத்திருக்கிற அடிமைத்தனங்களை உடைத்தெரிந்து, திமிறி எழுவதற்கான ஆசையும் கனவும் செல்விக்கு இருக்கிறது. மறுபுறம், அதை எப்படி எல்லாம் சிதைத்து விடலாம் என்ற எண்ணத்தில் ஆணாதிக்க சிந்தனை செயல்படுகிறது. ஆனால், சசி, செல்வி என்ற கதாபாத்திரத்தின் மூலமாக, ஒரு பெண் தனக்கான வாழ்க்கையை எங்கிருந்தும் எப்பொழுதும் ஆரம்பிக்கலாம் என்பதை ஆழமாக வெளிப்படுத்துகிறார். இந்தச் சிந்தனை இந்தக் காலகட்டத்திற்கு தேவையான

ஒன்றாக இருக்கிறது. இதற்காகத்தான் சாவித்திரிபாய் பூலே, அம்பேத்கர், பெரியார் போன்ற மாபெரும் தலைவர்கள் போராடினார்கள். பெண் விடுதலையையும் பெண் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழலையும் உருவாக்குவதற்காக உரக்கப் பேசினார்கள். ஒரு சில செயல்பாடுகளையும் முன்னெடுத்தார்கள். தமிழ்நாட்டில், பெரியார், கைம்பெண்களுக்காக வலுவான குரல் கொடுத்தார். ஜாதி மீறிய திருமணங்களை வரவேற்றார். அவரே மறுமணம் நடத்தி வைத்தார். ஆனால், இதற்கு நேர் எதிராக, கணவனை இழந்த பெண்ணுக்கு மறுமணம் தேவையில்லை; கணவனை இழந்த பிறகு அவளுக்கு வாழ்க்கையே இல்லை என்கிற கருத்தியல் புரையோடிப் போயிருக்கிறது. எனவேதான் செல்வி மறுமணம் செய்துகொள்ளலாம் என்ற ஆசையோடு வெளிவருகிறபொழுது, அவளுடைய மகன் முதலில் எதிர்ப்பு தெரிவிக்கிறான். அவளுடைய உறவினர்கள் அப்படிப்பட்ட முடிவை நிராகரிப்பதோடு அவளை இந்த உலகத்திலிருந்தே அனுப்பிவிட வேண்டும் என்று கொலைவெறியோடு அலைகின்றனர். ஆணாதிக்க சிந்தனையின் அடையாளமாக இருக்கிற பச்சைப்பெருமாளும் அவருடன் இருக்கிற ஆண்களும் செல்வியின் மறுமணத்தை கடுமையாக விமரசிப்பதோடு, அதைத் தடுத்து நிறுத்தவும் பார்க்கிறார்கள்.

இந்தக் கருத்தியல் போரில் செல்வியும் அவளுடைய பிள்ளைகளும் வெற்றி பெறுகிறார்கள் என்பதுதான் இந்தப் படம் நமக்கு விட்டுச் செல்கிற மாபெரும் செய்தி. செல்வி போன்று இன்னும் எண்ணற்ற பெண்கள் முன்வந்து மறுமணம் செய்ய வேண்டும். அதை இந்த ஒட்டுமொத்த சமூகம் சிவப்பு கம்பளம் போட்டு வரவேற்க வேண்டும்.

இந்திய சமூகம் சாதியக் கட்டமைப்புகளால் உருவாக்கப்பட்ட சமூகம். அதே போலத் தான் இந்தச் சமூகம் ஆணாதிக்க சிந்தனையை மையமாகக் கொண்ட சமூகமாகமும் இருக்கிறது. இங்கே ஆண் முடிவு செய்வதுதான் பெண்களின் வாழ்க்கையாக இருக்கிறது. பெண் தனக்கான சுதந்திரத்தையும் தான் விரும்புகிற வாழ்க்கையையும் ஒருபோதும் வாழ முடியாது என்பதை சமூக எதார்த்தங்கள நிரூபிக்கின்றன.

'நூறு சாமி' திரைப்படத்திலும் ஆணாதிக்க சிந்தனையை வெளிப்படுத்துகிறவர்கள் வருகிறார்கள். செல்வி தனியாக வீட்டில் இருக்கிறாள் என்பதை தெரிந்து கொள்கிற ஒவ்வொரு ஆணும், எப்படியாவது அவள் வாழ்க்கைக்குள் மூக்கை நுழைக்க வேண்டும்; அவளை எப்படியாவது சீண்டி பார்த்து விட வேண்டும்; தன்னுடைய இச்சையை அவள்மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று துடிக்கிறான். அவள் வேலைக்குச் செல்கிற இடத்திலோ எல்லா ஆண்களுடைய பார்வையும் அவள்மீது விழுகிறது.

"செல்வி நீ தோட்டத்து பக்கம் இருக்கிற கொள்ளைக்கு வா. அங்கே ஒரு ஏக்கர் உன் பேர்ல எழுதி வைக்கிறேன்." "செல்வி, பசங்களோட படிப்புக்குப் பணம் இல்லைன்னு கஷ்டப்படுறயாமே. நான் இருக்கிறேன். நீ கவலைப்படாதே." "இது மண்ணு திங்கிற உடம்பு தானடி?" - இப்படி எந்த ஒளிவும் மறைவுமின்றி அவளுடைய உடலைக் கேட்கிறார்கள். அவள் எங்கே போகிறாள்? எங்கிருந்து வருகிறாள்? யாரோடு தொடர்பு கொண்டிருக்கிறாள்? என்பதைத் தெரிந்து கொள்வதிலே தான் பெரியதனக்காரர் பச்சைப் பெருமாள் கவனமாக இருக்கிறார். ஒரு கைம்பெண் வீட்டை விட்டு எங்கேயும் செல்லக் கூடாது; சென்றால் அவள் நடத்தை கெட்டவளாகத் தான் கருதப்படுவாள். அவளுக்கு ஏதோ தொடர்பு இருக்கிறது என்கிற ரீதியிலே தான் இந்தச் சமூகம் சிந்திக்கிறது.

செல்வியின் அண்ணனாக வருகிற கருணாஸ், மாமன் என்ற அடிப்படையில், தன்னுடைய பெண் பிள்ளைக்குத் தான் அவளுடைய மகன்களில் ஒருவனைக் கட்டிக்கொடக்க வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கிறார். அது தங்கச்சி மீதோ தங்கச்சி பிள்ளைகள் மீது உள்ள பற்றால் அல்ல; மாமன் என்ற ஆண் நினைப்பதும் திட்டமிடுவதும் நடக்க வேண்டும். இரண்டு மகன்களும் அம்மாவுக்கு மறுமணம் செய்துவைப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்தும்போது அந்த விவாதத்தைச் சுக்குநூறாக உடைக்கிற வகையில் தான் அவருடைய வசனம் இருக்கும். சமூகத்தில் உள்ள கட்டுக்கோப்புகளை பாதுகாக்கிற வகையிலே 'சமூக காவலாளிகள்' ஒவ்வொரு ஊரிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண்ணை மையப்படுத்திதான் ஆணாதிக்க சிந்தனையும் சாதிய கட்டமைப்பும் இன்றைக்கும் கிராமத்தில் தக்க வைக்கப்படுகிறது.

செல்வியின் அம்மா, அப்பா, அண்ணன், உடன் பிறந்த சகோதரிகள் எல்லோரும் அவளது வீட்டிற்கு வந்து, அவளைத் தகாத வார்த்தைகளில் திட்டுகின்றனர். "இது உனக்குத் தேவையா? நாங்க எல்லாம் இந்தச் சமூகத்தில் வாழ வேண்டாமா? உனக்கு இந்த வயசுல கல்யாணம் நடந்துச்சுன்னா ஊர்ல எங்களை யார் மதிப்பா? எங்களுடைய பிள்ளைகளுக்கு யார் பொண்ணு கொடுப்பா?" என்கிற ரீதியிலே தான் சிந்திக்கிறார்கள். மறு திருமணம் மூலம் தனியாக இருக்கும் அவளுக்கு ஒரு துணை கிடைக்கிறது என்பதை யாரும் பார்க்கவில்லை. ஒரு கொலை வெறியோடு தான் அவள் வீட்டிற்குள் நுழைகிறார்கள். கொலையும் செய்யத் துணிந்து விட்டனர் என்பதை இயக்குநர் சசி மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறார். அவர்களின் கொலைவெறிக்கும் ஆணாதிக்க மனப்பான்மைக்கும் செயலுக்கும் எந்தவித தண்டனையும் தராமல் இயக்குநர் அப்படியே விட்டு விடுகிறார். பார்வையாளர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கட்டும் என்று நினைத்தாரோ என்னவோ.

இயக்குநர் சசியும் அவரது படக்குழுவும் செல்வி என்ற கைம்பெண்ணின் பாத்திரத்தை மிகச் சிறப்பாகப் படைத்திருக்கிறார்கள். 'கணவனை இழந்த ஒரு



இயக்குநர் சசி

கைம்பெண்... அவளுக்குத் தைரியம் கிடையாது; எதையும் துணிச்சலாக முடிவு செய்ய முடியாது. பாலியல் ரீதியாக யாரும் அவளைத் தொடலாம், தனியாக இருக்கிற அவளைச் சீண்டிப் பாரக்கலாம், அவளும் அதற்கு இணங்கிப் போவாள்' என்கிற ரீதியிலே எண்ணங்களைக் கட்டமைத்து கொள்கிற ஆண் சமூகத்திலிருந்து மாறுபடுகிற, வித்தியாசமாகச் சிந்திக்கிற, துணிச்சலோடு செயல்படுகிற ஒரு பெண்ணாகச் செல்வியை உருவாக்கியிருக்கிறார்கள். கணவனை இழந்து, தனியாக வாழுகிற பெண்களுக்கு செல்வி ஒரு முன் உதாரணமாக அமைவதற்கு வாய்ப்பிருக்கிறது.

'நான் யாருடைய தயவிலும் இல்லை. யாரும் எனக்குப் பண உதவி செய்யத் தேவையில்லை. என்னால் உழைத்துச் சம்பாதிக்க முடியும். அந்தப் பணத்தைக்கொண்டு நானும் என்னுடைய பிள்ளைகளும் வாழ முடியும்' என்பதை மிகத்தெளிவாகக் காட்டுகிறாள். அவள் மீது ஆண்கள் ஏளனப் பார்வையை வீசுகிற பொழுதும், வசைச் சொற்களை அள்ளி வீசுகிற பொழுதும், தன்னுடைய சொல்லாலும் செயலாலும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறாள். கோபத்தை காட்டுகிறாள். "ஏன் நாங்க இடையில மறுமணம் செய்து கொள்ளக் கூடாதா?" என்ற கேள்வியின் மூலம் அவளுக்குள் ஒரு துணையைத் தேடுகிற ஆசை அடிமனதில் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறாள். இதுவே மாற்றத்தின் அடையாளம். "அவளுக்கு இன்னும் அடங்கலடா" என்று கோபத்தில் சொல்லும் தாயிடம், "இன்னைக்கு வரைக்கும் நீ அப்பா கூடத் தானே இருந்துகிட்டு இருக்க. அப்படீன்னா உனக்கு இன்னும் அடங்கலையா?" என்று கேட்பாள். இது எதிர்ப்பின் அடையாளம், கோபத்தின் உச்சக்கட்டம்.

செல்வியும் ஏலுமலையும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கிற தருணம் மிக அற்புதமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மறுமணம் செய்து கொள்ளலாம் என்று மகனிடம் சொன்னபிறகு முதல் முறையாகச் ஏழுமலை வீட்டிற்கு செல்லுகிறாள் செல்வி. அந்தத் தருணத்திலே அங்குள்ள ஒவ்வொரு பொருளையும் வீட்டில் உள்ள நிலமையையும் உற்று கவனிக்கிறாள். வயதான பாட்டி கட்டிலில் படுக்க முடியாமல் அமர்ந்திருப்பார். ஏலுமலை ஏதோ சமைத்துக் கொண்டிருந்தார். அது சரியாக உள்ளதா என்று செல்வி சரி பார்ப்பார். அதன் மூலம் அந்த வீட்டிற்குள்ளே நுழைந்து வாழ்வதற்கான மனநிலையை கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்குகிறாள். இருவரும் வாழ்க்கையில் அனுபவபட்டதால் மிகவும் பக்குவமான வகையிலே பேசுகிறார்கள். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துகிறார்கள். அது அனுபவத்திலிருந்து கிடைக்கிற ஞானமாக இருக்கிறது. செல்வி கணவனை இழந்து புண்பட்டு இருக்கிறாள். ஏலுமலையும் தன் மனைவியை இழந்த பிறகு தனியாகத் துன்பப்பட்டிருக்கிறான். இருவருமே புண்பட்ட மனிதர்களாக இருப்பதால் தான் பண்பட்டவர்களாகத் தங்களைப் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

'நூறு சாமி' கைம்பெண்களின் நிலையைப் பற்றி ஆழமாகச் சித்தரிக்கிறது. மறுமணம் செய்துகொள்ள அவர்கள் முன்வர வேண்டும்; அதற்கு எதிராக இருக்கிற எல்லாத் தடைகளையும் தகர்த்து முன்னேறி வர வேண்டும்; ஒரு கைம்பெண் எந்த நேரத்திலும் தனக்கான வாழ்க்கையை தெரிந்து கொள்ளலாம் என்ற செய்தியை அழுத்தமாக விட்டுச் செல்கிறது. யாருக்கும் அடிமையாக இல்லாமல், சமூகத்தின் சட்ட திட்டங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல், சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது என்கிறது.

மறுமணம் செய்த செல்வி மற்றும் ஏலுமலை, இரண்டு மகன்கள் ஆகிய நான்கு பேரும் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். இது ஒரு புதிய விடியலுக்கான தொடக்கம். அப்பொழுது பசங்களைப் பார்த்து ஏலுமலை, "உங்க அம்மாவைச் சாமியாக, கடவுளாக பார்த்த நிலை எல்லாம் கடந்து, அவள் ஒரு சாதாரண மனுஷியாக வாழ்வதற்கான சூழலை உருவாக்கிய உங்களைப் பாராட்டுகின்றேன்" என்பார். அதற்குப் பாஸ்கர், நான் கத்தியை எடுத்து அம்மா கையில் கொடுத்தேன். அதைச் சுழட்டியது என்னுடைய அம்மாவின் தைரியம்" என்பான். மிக அற்புதமான காட்சி.

மறுமணத்திற்கு காத்துக் கொண்டிருக்கிற கைம்பெண்களுக்கு இந்தத் திரைப்படம் மிகப்பெரிய ஆறுதலாக அமையும். இது சமூகத்தில் மிகப்பெரிய மறுமலர்ச்சியைக் கொண்டு வரும் என்று நம்பலாம்.

அ. இருதயராஜ் <iruraj2020@loyolacollege.edu>

என் தமிழ், எனது மண், எங்கள் மக்கள்

தமிழ்நதி

நேர்கண்டவர்: **ஆரூர் பாஸ்கர்**

அமெரிக்காவில் நியூஜெர்சி மாகாணத்தின் எடிசன் நகரில் 39-வது 'ஃபெட்னா' (FETNA) பேரவை விழா கடந்த ஜூலை 2 முதல் 4 வரையான மூன்று நாட்கள் நடைபெற்றது. புகழ்பெற்ற அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரும் தொழிலதிபருமான தாமஸ் ஆல்வா எடிசன், இந்த நகரில்தான் (அப்போது Menlo Park) 1870களில் தனது ஆய்வகத்தையும் தொழிற்சாலையையும் நிறுவி மின்விளக்கு, ஒலிப்பதிவு கருவி (Phonograph) உள்ளிட்ட இன்று நாம் பயன்படுத்தக்கூடிய பல முக்கிய கண்டுபிடிப்புகளை உருவாக்கினார். அந்த வரலாற்றுச் சிறப்பை நினைவுகூரும் வகையில், 1954 ஆம் ஆண்டு Raritan Township என்ற பெயர் அதிகாரப்பூர்வமாக Edison Township என மாற்றப்பட்டது.

'ஃபெட்னா' என்பது அமெரிக்கா, கனடாவில் உள்ள எழுபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைக்கும் ஒரு குடை அமைப்பு. இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆண்டுதோறும் 'ஃபெட்னா பேரவை' மாநாடு நடத்துகிறது. இதில் உலகம் முழுவதிலுமிருந்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்பார்கள். அந்த வகையில் இந்த ஆண்டு இலக்கிய குழுவின் வழியாக ஈழ எழுத்தாளர் தமிழ்நதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அமெரிக்கா தனது வரலாற்றுச் சிறப்புமிக்க 250-ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு காத்திருந்த முந்தைய நாள் மாலையில், அவரைச் சந்தித்து நேர்காணல் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.



1996இல் இருந்து தனது செறிவும் அடர்த்தியும் நிறைந்த எழுத்தால் காத்திரமான பல படைப்புகளைத் தந்துள்ள தமிழ்நதியின் இயற்பெயர் கலைவாணி. 'பார்த்தீனியம்' நாவல் வழியாகப் பரவலாக அறியப்பட்டார். 'ஈழப்போராட்டத்தைப் பின்புலமாகக் கொண்ட 'பார்த்தீனியம்', உலகத்தின் யுத்தகாலப் படைப்புகளில் குறிப்பிடத் தகுந்த படைப்பாகப் பலகாலம் பேசப்படும்' என எழுத்தாளர் பிரபஞ்சனால் பாராட்டப்பட்டது இந்தப் படைப்பு. சமீபத்தில் இவருடைய 'அம்மன் மரம்' நாவல் டிஸ்கவரி புக் பாலஸ் வெளியீடாக வந்திருக்கிறது.

கேள்விகளை முன்கூட்டியே வழங்கி அவரை ஆயத்தப்படுத்தாமல், எவ்வித முன்தயாரிப்பும் இன்றி அவரது மனதின் அசல் மொழியை அப்படியே இயல்பாகப் பெற்றுவிட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். இந்த நேர்காணல் அப்படியே அமைந்தது. இது காணொலியாகவும் பதிவு செய்யப்பட்டது.

தமிழில் உங்களுக்கு ஆர்வம் உண்டானது எங்ஙனம்?

என்னுடைய தமிழ் ஆர்வம் என்பது வாசிப்பிலிருந்து வந்த ஒன்று. சிறுவயது முதலே வாசிப்புச் சூழல் எங்கள் வீட்டில் இயற்கையாகவே கிடைத்தது. எங்களது வீடே புத்தகங்கள் நிறைந்த ஒன்றாகத்தான் இருந்தது. என்னுடைய அப்பாவும் அண்ணாவும் நிறைய வாசிப்பவர்கள், புத்தகங்களில் ஆர்வங் கொண்டவர்கள். தம்மட்டில் வாசிப்பதோடு மட்டும் நிறுத்திவிடாமல், தாம் வாசித்த புத்தகங்களைப் பற்றி வீட்டில் உள்ள மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் பழக்கம் அவர்களுக்கு இருந்ததால் வாசிப்பதற்கான சூழல் அழகாக எனக்கு அமைந்துவிட்டது. வீட்டிலிருந்த புத்தகங்களைத் தாண்டி நூலகங்களுக்குச் சென்று வாசிக்கும் பழக்கமும் சிறுவயது முதலே எனக்கு இருந்தது. நான் சொல்வது 1980 – 90 காலப்பகுதி. நான் வசித்த இடங்களிலிருந்த நூலகங்களிலிருந்த புத்தகங்களையெல்லாம் வாசித்து முடித்துவிட்டு மேலும் புத்தகங்கள் தேடி ஏங்கிய காலமது.

என்னுடைய பன்னிரண்டாவது வயதிலிருந்து வாசிக்கத் தொடங்கிவிட்டேன். அந்த வயதில், காதல் தொடர்பான கதைகளை நான் வாசிப்பதை எனது பெற்றோர் விரும்பவில்லை என்றாலும், அவர்களுக்குத் தெரியாமல், எதையும் விலக்காமல் எல்லா விதமாகப் படைப்புகளையும் ஆர்வத்தோடு எடுத்து வாசிப்பேன். அந்தத் தொடக்கமே எனக்கு வாசிப்பு மீதான பெருங்காதலாக மாறிவிட்டது. (காதல் எனும்போது லேசாக வெட்கப் புன்னகை. பேச்சினூடே, தன்னுடைய



தாயாருக்கு வாசிப்பில் அத்தனை ஈடுபாடில்லை என்றும், பொறுப்புணர்வு மிகுந்த பெண்மணி என்றும் குறிப்பிட்டார்.)

பள்ளியில் உங்களுடைய விருப்பப் பாடமாக அமைந்தது எது?

தமிழ்தான்.

நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர் என்பது பொதுவெளியில் உள்ள தகவல். நீங்கள் பள்ளியில் படிப்பில் சுட்டியா ? இளமைப்பருவம் பற்றி சொல்லுங்களேன்.

பள்ளியில் சுட்டிப் பெண் இல்லை. ஆனால், நன்றாகப் படிக்கக்கூடிய ஒருத்தி. பாடசாலையில் double promotion வாங்கியவள். நன்றாகப் படித்த காரணத்தால் எட்டாம் வகுப்பு படிக்காமல் ஏழாம் வகுப்பிலிருந்து நேரடியாக ஒன்பதாவதுக்கு வகுப்பேற்றப்பட்டேன். வகுப்பில் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கும் ஓர் அமைதியான மாணவியாகத்தான் இருந்தேன். காதலித்தது தவிர, என்னால் வீட்டில் எந்த ஒரு சிக்கலும் எப்போதும் வந்ததில்லை. ('ரொம்பத் தங்கமான பிள்ளை' எனச் சொல்லி முகம் மலர்ந்து சிரிக்கும்போது அவர் கண்களில் மகிழ்ச்சியும் பெருமையும் வழிந்தோடியதைக் கவனிக்க முடிந்தது.)

உங்களுடைய எந்தப் படைப்பு உங்களுக்கு மிகவும் நெருக்கமானது?

சிறுகதைகளில் 'எனது தலைக்குள் ஒரு பறவை வாழ்கிறது' என் மனதுக்கு மிக நெருக்கமான சிறுகதை. 'தங்க மயில்வாகனம்' (2023, தமிழினி வெளியீடு) சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற கதை அது. அது தனிமையைப் பேசுபொருளாகக் கொண்டது. வித்தியாசமான கதைக்கருவைக் கொண்டது என்பதால், எனது சிறுகதைகளுள் 'மாயக்குதிரை'தான் சிறந்தது என்று பலரும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சூதாடியைப் பற்றிய கதை அது. சிலருக்கு 'நித்திலாவின் புத்தகங்கள்' பிடித்தது. இந்த இரண்டு சிறுகதைகளுமே டிஸ்கவரி புக் பாலஸ் வெளியீடான 'மாயக்குதிரை' தொகுப்பில் இடம்பெற்றவை.

'எனது தலைக்குள் ஒரு பறவை வாழ்கிறது' கதையை எழுதும்போதிருந்த உணர்வலைகள் குறித்து?

அது ஒருவிதத்தில் எனது கதையும் கூட. எனது இருபதுகளின் நடுப்பகுதியில் நான் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தேன். அங்கு எதிர்கொள்ளவேண்டியிருந்த

புறச்சூழல், உறவுகளற்ற தனிமையின் வெறுமை மனதுள் தேங்கியிருந்தது. அதை அண்மையில்தான் சிறுகதையாக எழுதமுடிந்தது.

உங்களுடைய தனிப்பட்ட அனுபவங்கள் படைப்பாகின்றதா? அல்லது, ஓர் அரசியல் கருத்தை, நியாயத்தை மையப்படுத்தி ஒரு படைப்புக் கட்டி எழுப்பப்படுகிறதா?

அரசியல் கருத்துக்களை நியாயப்படுத்துவதற்காக வலிந்து நான் எழுதுவதில்லை. உண்மையில் உணர்ந்தவற்றையே எழுதுகிறேன். நான் வாழ்ந்த, வாழும் சூழலிலிருந்து உள்வாங்கியவற்றை படைப்பூக்கத்துடன் வெளிப்படுத்தியவையே எனது படைப்புகள். எழுத ஆரம்பித்த நாட்களில் ஈழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி நிறையக் கவிதைகள் எழுதியிருக்கிறேன். அவை பிரச்சாரத் தொனியில் அமைந்திருந்தன. அது அன்றைய நாட்களில் தேவையாக இருந்தது. அதையிட்டு நான் இப்போதும் வருந்தவில்லை.

உங்களுடைய படைப்புகள் இந்தச் சமூகத்தில் எத்தகைய விளைவுகளை, மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதுகிறீர்கள்? அல்லது ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

(சற்று மௌனத்துக்கு பின்னர்) மனிதர்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் எழுத்து சமூகத்தில் மாற்றங்களை உண்டாக்கும் என உறுதியாகச் சொல்லவியலாது. இலட்சியவாத சமூகம் அல்லது உட்டோபியா (utopia) என்பதே காலாவதியாகிவிட்ட ஒன்று. அதுமட்டுமல்லாமல், தனிப்பட்ட முறையில் எழுத்தில் அறிவுரை சொல்லக்கூடாதென்பதில் உறுதியாக இருக்கிறேன். எனது எழுத்தின் வழியாக மாற்றம் நிகழ்ந்தால் மகிழ்ச்சி என்ற அளவோடு நிறுத்திக்கொள்வேன். இனப்படுகொலைக்கு ஆளான ஒரு சமூகம் என்ற வகையில் எங்களுடைய மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நீதி சார்ந்து என்னுடைய எழுத்தானது சிறிதேனும் பங்களித்திருக்குமெனில் அதுவே எனக்குப் போதும்.

ஒரு வாசகனுக்கு இலக்கியப் படைப்பு தரும் மாற்றம் அல்லது திறப்பு குறித்து?

முந்தைய கேள்விக்கான அதே பதில்தான். எழுத்துச் சமூகத்தை முற்றுமுழுதாகப் புரட்டிப்போட்டு மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என நம்பும் காலத்தில் நாம் வாழவில்லை.

மு. மேத்தா, 'இந்தப் பூமி உருண்டையைப் புரட்டிப்போடும் நெம்புகோல் கவிதையை உங்களில் யார் எழுதப் போகிறீர்கள்?' எனக் கேட்டது போலவா?

(புன்னகைத்து ஆமோதிக்கிறார்) ஆயினும், அண்மையில் 'ஃபெட்னா' மேடையில் இசைப்பிரியா பற்றி நான் வாசித்த கவிதையைச் செவிமடுத்த தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர், "அந்தக் கவிதையைச் செவிமடுத்தபோது அத்தனை குற்றவுணர்வாக இருந்தது. எங்களால் இனிச் செய்யக்கூடியது என்ன என்பதைப் பற்றி யோசிக்கிறேன்" என்றார்.



நாவல், கவிதை, கட்டுரை, சிறுகதை என எழுத்தின் பல்வேறு வடிவங்களில் புழங்கும் நீங்கள் உங்களுக்குச் சௌகரியமான வடிவம் எனக் கருதுவது?

சிறுகதை என்பேன். கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய அனைத்துக்குமே அகத்தூண்டல் தேவை. அதிலும் கவிதை மற்றனைத்தையும் விட அதிகமான மன ஒருங்குவிதலைக் கோருகிறது. ஒரே வரைபில் நான் திருப்தி கொள்வதில்லை. திருப்தி கிட்டும்வரையில் திருத்திக்கொண்டேயிருப்பேன். சிலசமயம் சலிப்புற்று கவிதைகளை இடைநடுவிலேயே கைவிட்டுவிடுவதுண்டு. சிறுகதைகளை ஏனோ அவ்விதம் கைவிடுவதில்லை. எழுத ஆரம்பித்தபோதிருக்கும் கதையாக அல்லாமல் மாறிக்கொண்டேயிருக்கும் அதன் விசித்திரமான தன்மை என்னை ஈர்ப்பது. அடுத்து என்ன திருப்பங்கள் நேருமென அறியாத பயணமது. அதனாலேயே சிறுகதைகள் எழுதப் பிடிக்கும். எல்லாவற்றையும் விடப் பெரும் உழைப்பைக் கோருவது நாவல். சக்தியையே உறிஞ்சி நம்மைச் சக்கையாகத் துப்பிவிடும். 'அம்மன் மரம்' எழுதி முடித்தபோது இனி ஓராண்டுக்கு நாவல் பக்கம் தலைவைத்துப் படுப்பதில்லை என்று எண்ணினேன். ஆனால், அடுத்த நாவலுக்கான வடிவம் குறித்து இப்போதே யோசிக்க ஆரம்பித்துவிட்டது மனம். நாவலின் கருப்பொருளை ஏற்கெனவே தீர்மானித்துவிட்டேன்.

தங்களுடைய மொழி ஆளுமை, அதன் அடர்த்தி குறித்து மற்றவர்கள் பாராட்டும்போது உங்களுக்குத் தோன்றுவது என்ன?

நானும் ஒரு சாதாரணமான ஆள்தானே? உள்ளுக்குள் மகிழ்ச்சியாகதானிருக்கும். அதேசமயம் கொஞ்சம் கூச்சமாகவும் இருக்கும். (சிரித்தபடி சொல்கிறார்) என்னுடைய மொழிச் செழுமையானது தொடர்வாசிப்பின் வழியாக வந்திருக்கலாம்.

உங்களுடைய கடவுள் நம்பிக்கை – உங்களுடைய இயற்பெயர் கலைவாணி, அதாவது சரஸ்வதி, கல்வி தரும் கடவுள் – அதிலிருந்து தொடங்குவோமே... நீங்கள் கடவுள் அருளால் புலமை பெற்றதாக நினைக்கிறீர்களா ? (இந்தக் கேள்வியை நகைச்சுவை கலந்த தொனியில் கேட்டேன்.)

எனக்குப் பெரிதாகக் கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால், நமக்கும் மேலான ஒரு சக்தி இருப்பதாக உறுதியாக நம்புகிறேன். கோயிலுக்குச் செல்வது அரிது. விரதங்கள் பிடிப்பதில்லை. அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்கி செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் அசைவ உணவைத் தவிர்ப்பேன். அதையும் கறாராகக் கடைப்பிடிப்பதில்லை. பயணங்களின்போதோ, நண்பர்களது வீடுகளுக்குச் செல்லும்போதோ அசைவ உணவுதான் பரிமாறப்படுமெனில் செவ்வாய், வெள்ளியைப் பொருட்படுத்துவதில்லை. நான் அம்மனை மட்டும் வழிபடுபவள் (தனது பயணத்தில் உடன் கொணர்ந்த அம்மன் படத்தைக் காட்டுகிறார்) ஆனால், கடவுள் அருளால் புலமை பெற்றதாக நான் நினைக்கவேயில்லை. (உரத்த சிரிப்போடு முடித்தார்.)

உங்கள் பார்வையில் இலக்கியம் என்பது என்ன? எந்த எழுத்து காலங் கடந்த இலக்கியமாகிறது? அதற்கான அளவுகோல்கள் என்ன? அவ்வாறான சட்டகங்களுள் எழுதுவது ஏற்புடையதாக இருக்குமா? எழுத்து தானாகத் தன்னை எழுதிக்கொள்ளுமா?

ஐம்புலன்களால் உணர்ந்த உலகத்தைப் படைப்பூக்கத்தோடு வெளிப்படுத்தும் எழுத்தை இலக்கியம் எனலாம். இந்தப் பிரபஞ்சம் மற்றும் மனிதர்களின் இயங்குவிதிகளை நுண்மையாகப் புரிந்துகொண்டு, அழகியலுடன் வெளிப்படுத்தும் படைப்புகள் காலங்கடந்து நிற்கின்றன. எடுத்துக்காட்டுகளாக- டால்ஸ்டாயின் 'அன்னா கரீனினா', தஸ்தயேவ்ஸ்கியின் 'கரமாசோவ் சகோதரர்கள்', புதுமைப்பித்தனின் சிறுகதைகள், தி. ஜானகிராமனின் 'மோகமுள்', பிரான்ஸிஸ் கிருபாவின் 'கன்னி', கவிஞர் பிரமிளின் கவிதைகள் ஆகியவற்றைச் சொல்லலாம். படைப்பாற்றலுக்கும் படைப்பிற்கும் அளவுகோலென ஒன்றை நிர்ணயிக்க இயலாது. அவ்வாறு நிர்ணயித்தாலும், அந்த அளவீடானது சமூகத்தின் வளர்ச்சிப் போக்கிற்கிணங்க ஒவ்வொருவரதும் சிந்தனை மாறுதல்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றமடையவே செய்யும். தானாகத் தன்னை எழுதிக்கொள்வதென்பது கவிதைக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். அதுவும் வலிந்து புனையாமல் அக்கண மனவெழுச்சியில் தோன்றுகிற கவிதைக்கு. மற்றபடி, எழுத்து தானாகத் தன்னை எழுதிக்கொள்ளும் என்பதெல்லாம் மிகைப்படுத்தல்தான். எழுத்தைப் புனிதத்தன்மைக்கு உயர்த்தும் எத்தனந்தான். எழுத்து வெற்றிடத்தில் உருவாவதில்லை. புறச்சூழல், படைப்பு மனம், தொடர் பயிற்சி ஆகிய எல்லாமே எழுத்தில் பங்கு வகிக்கின்றன.

மேற்சொன்ன அழகியல் பொருந்திய படைப்புகள் நவீன இலக்கியத்துக்கு எதிர்போக்கில் பயணிப்பவையென நினைக்கிறீர்களா?

அப்படி நினைக்கவில்லை. இலக்கியம் என்பது அழகியலோடு இணைந்தே பயணிப்பது. அழகியல் இல்லாத படைப்புகள் என்னளவில் வாசிப்பின் இன்பம் தராதவையாக, வறண்டனவாகவே தோன்றுகின்றன.

சிறுவயது முதல் பல இடப்பெயர்வுகளைச் செய்ய வேண்டியிருந்த, தற்போது புலம்பெயர்ந்து வாழும் உங்கள் பார்வையில், தலைமுறைகளாக ஓரிடத்தில் வாழ்வது, மண்ணுக்கும் எழுத்துக்கும் உள்ள தொடர்பு குறித்து...

தலைமுறைகளாக ஒரே இடத்தில் வாழக்கிடைத்தவர்கள் ஒருவகையில் பாக்கியவதிகள், பாக்கியவான்கள். ஓரிடத்தில் நிலைத்து வாழும் ஒருவர் அக்குறிப்பிட்ட நிலத்தின் சமூக வளர்ச்சிப் போக்கை, சமூக உறவுகளை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். அதிலொரு தொடர்ச்சி இருக்கும். ஆனால்,

ஒரே இடத்தில் தொடர்ந்து வாழும்போது ஏனைய நாடுகளின் பண்பாடு, கலாச்சாரம், நிலவெளி, பழக்க வழக்கங்கள், கலைகள் இன்னபிற குறித்த அறிதல்களும் அனுபவங்களும் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருக்கும். இருந்த இடத்திலேயே இணையம் மூலமாக உலகைச் சுற்றிவரலாமென்று இப்போது சொல்லப்படுகிறது. ஆனாலது முற்றிலும் உண்மையன்று; எல்லைகளுக்குட்பட்டது. புலம்பெயர்ந்து வாழும்போது புதிய நிலவெளிகள், மொழி, காலநிலை, அனுபவங்கள் கிட்டுகின்றன. அவை எழுத்தின் பேசுபொருட் தெரிவிலும் விரிவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. புலம்பெயர் எழுத்தாளர், மற்ற சமூகங்களைத் தொடர்ந்து அவதானித்து தன்னுடைய தாய்நிலத்துடன் ஒப்பிடுவதன் மூலமும், பரந்த வாசிப்பின் மூலமும் எழுத்தில் புதிய பரிமாணங்களைக் கொண்டுவர முடியும். புலம்பெயர் அனுபவம் மறுவளமாகவும் தொழிற்படக்கூடும். உதாரணமாக, மேலைத் தேசங்களுக்குப் புலம்பெயர்ந்து செல்பவர்கள் காலநிலை, மொழி வேறுபாடு, தனிமை, அந்நியமாதல் போன்றவற்றை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அவையெல்லாம் எழுத்தில் தாக்கத்தை உண்டாக்கக்கூடும். மொழியறியாச் சிக்கல் ஒருவரைத் தனிமைப்படுத்தும். அரசியல், பொருளாதார காரணங்களால் புலம்பெயர்பவர்கள் எல்லோரும் குடும்பத்தைத் தம்முடன் அழைத்துச் செல்லமுடியாத நிலையில் வாழ்வை பொருளற்றதாக, வெறுமையாக உணர்வர். அவையெல்லாம் எழுத்திலும் தாக்கத்தை உண்டுபண்ணும். நிர்ப்பந்தமோ சுயதெரிவோ எதுவானாலும் புலம்பெயர்தலென்பது வலிமிகுந்ததே.

தமிழில் எழுதுபவர்களை ஈழ எழுத்தாளர், தமிழக எழுத்தாளர், புலம்பெயர் எழுத்தாளர் என்றும் வட்டார மொழி சார்ந்து நாஞ்சில் எழுத்து, நடுநாட்டு எழுத்து என்றும் வகைப்படுத்துவதில் உங்களுக்கு உடன்பாடு உண்டா?

அதில் தவறொன்றுமில்லை. புழங்குமொழிக்கு நிலத்தோடும் அதன் வாழ்வியலோடும் நெருங்கிய தொடர்புண்டு. வட்டார வழக்குகள் குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை நுட்பமாக வெளிப்படுத்துவன. எனவே வட்டார வழக்குகளைப் படைப்பாளிகள் தமது எழுத்தில் பயன்படுத்துவது இயல்பானதும் பொருத்தமானதும் அழகியல் மிகுந்ததுமாகும். ஆகவே அவ்வாறு வகைமைப்படுத்துவதிலும் தவறில்லை. உரையாடல்கள் வட்டார மொழியில் அமைந்திருக்கும் அதேநேரம், விபரணை பொதுமொழியில் இருப்பது நல்லது. அப்படி இருந்தால்தான் அந்தப் படைப்பை வாசகர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளவியலும்.

அந்த வகையில் ஈழ எழுத்தை ஒரு பார்வையாளனாகப் புரிந்து கொள்வது எப்படி?

ஈழ மொழிவழக்கு அப்படியொன்றும் புரிந்துகொள்ளப்பட முடியாதது அல்ல. தமிழகத்தில் புழங்கும் சென்னைத் தமிழ், கொங்குத் தமிழ், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலித் தமிழ் இவற்றையெல்லாம் ஓர் ஈழத்து வாசகர் வாசித்துப் புரிந்துகொள்வதுபோல ஈழத்து எழுத்தையும் கொஞ்சம் முயற்சித்தால் புரிந்துகொள்ள முடியும். ஓரளவுக்கேனும் ஈழத்து வரலாறு, அரசியல், எமது வாழ்முறை பற்றிய புரிதல் இருந்தால் போதுமானது.

ஒரு தமிழ் வாசகனாக ஈழ படைப்புகள் குறித்த குறுக்குவெட்டு தோற்றம் பெற எந்த நூலை எங்கிருந்து தொடங்க வேண்டும். இதுகுறித்து பருந்துப் பார்வையில் ஏதேனும் நூல்கள் எழுதப்பட்டிருக்கிறதா?

ஈழத்து இலக்கியம் பற்றித் தமிழகம், ஈழம், புகலிடம் இங்கிருந்தெல்லாம் எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. ஆனால், ஒட்டுமொத்தமான ஈழத்துப் படைப்புகள் குறித்தான குறுக்குவெட்டுத் தோற்றத்தைக் குறிப்பிட்ட ஒரு நூல் அல்லது சில நூல்கள்மூலம் பெறுவதென்பது சாத்தியமற்றது. இந்த நூலை வாசித்தால் துல்லியமான ஒரு சித்திரம் கிடைத்துவிடுமெனப் பரிந்துரைக்கும்படியான அபுனைவு நூலொன்றும் உடனடியாக ஞாபகத்தில் வரவில்லை. பொதுவான வரலாற்றைச் சித்தரிக்கும் நாவலென்று பார்த்தால், தேவகாந்தனின் 'கனவுச்சிறை'யைச் சொல்லலாம். அந்நாவல் ஐந்து பாகங்களாக எழுதப்பட்டது.

சமீபகாலமாக மேலை நாடுகள், கீழை நாடுகள் என்ற சொற்பிரயோகம் ஒழிந்து மேற்கு, கிழக்கு என ஒரு நாணயத்தின் இரண்டு புறங்கள் போலாகி இருக்கிறது. நாணயத்தின் இரண்டு புறங்களிலும் புழங்குபவர் என்ற விதத்தில் கலை என்பது வெகுஜன மக்களால் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுவதாக, ஏற்றுக் கொள்ளப்படுவதாக நினைக்கிறீர்கள்?

இலக்கியத்தில் போல அனைத்து கலைகளிலும் தீவிரம், ஜனரஞ்சகம் என்ற பிரிகோடுண்டு. தமிழிலக்கியத்தில் இப்போது இடைநிலை இலக்கியம் என்றொரு பதம் அதிகம் புழங்குகிறது. கீழைத்தேயங்களிலும் சரி மேலைத்தேயங்களிலும் சரி ஜனரஞ்சகமான கலைகளையே பெருவாரியானோர் விரும்புகிறார்கள். இயந்திரமயமாகிவிட்ட வாழ்க்கை அவர்களை அதனை நோக்கித் தள்ளுகிறது. அது தங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். துரித உணவுபோலத் துரித கலை நுகர்வுக்கும் மக்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். திரையிசைப் பாடல்கள் இசைக்கப்படும் மேடைகளுக்கு முன் கூடும் பெருந்திரளான கூட்டமே இதற்குச் சாட்சி. தீவிர இலக்கியம்போலத் தீவிரமான விசயங்களைக் கருப்பொருட்களாகக் கொண்ட கலைகளின் நிலையும் கவலைக்கிடந்தான். மேலைத் தேசங்களோடு ஒப்பிடுமிடத்து கீழைத் தேசங்களில் நிலைமை இன்னும் மோசம். ஒரு நூல் வெளியீட்டில் ஐம்பது பேர் கலந்துகொண்டால் மகிழ்ச்சி, எழுபது பேர் கலந்துகொண்டால் பெருமகிழ்ச்சி, நூறு பேர்



கலந்துகொண்டால் வெற்றிகரமான நிகழ்வு என்ற நிலைதான். ஆனால், மேலைத்தேயங்களில் தமது ஆதர்ச எழுத்தாளரின் புத்தகம் வெளியான அன்றே வாங்குவதற்கு முண்டியடிக்கிறார்கள். எழுத்தாளர் கலந்துகொள்ளும் நூல் வாசிப்பு அரங்குகளில் வாசகர்கள் ஆர்வத்தோடு கூடுகிறார்கள். நாம், அதாவது கீழைத்தேயத்தவர்கள் ஆத்மார்த்தம் என்பதை கலைசார்ந்தும் சொல்லளவில்தான் கொண்டிருக்கிறோமென்று நினைக்கிறேன்.

இந்த நூற்றாண்டில் தமிழில் எழுதுவது எந்த அளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் அது பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவது. அதுகுறித்த உங்கள் பார்வை?

உண்மை. தமிழில் வெளியாகும் படைப்புகள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்போது, உலகளாவிய இலக்கியப் பரப்பில் ஓர் அங்கீகாரம் கிடைக்கிறது. பிறமொழிகளோடு ஒப்பிடும்போது, தமிழில் மிகத் தரமான சிறுகதைகளும் கவிதைகளும் வெளியாகியிருக்கின்றன. ஆனால், தரமானவைதாம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்றோ மொழிபெயர்க்கப்படாதன தரத்திற் குறைந்தன என்றோ கொள்ளலாகாது.

இன்றைய தமிழ் இலக்கியத்தில் அதிகம் பேசப்படாத, ஆனால் அவசரமாக எழுதப்பட வேண்டிய கருப்பொருள் எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

இந்த அதிவேக உலகில் மனிதர்கள் தனித்தனித் தீவுகளாக இருக்கிறார்கள். சமூக வலைத்தளங்கள் மற்றும் டிஜிட்டல் கருவிகள் மனித உறவுகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இம்மாற்றங்களை இலக்கியம் பிரதிபலிக்க வேண்டும். அத்துடன், அநேகமான படைப்புகள் இறந்தகாலத்தைப் பற்றியே உள்ளன. சமகாலத்தைப் பிரதிபலிக்கும் எழுத்துகளின் வரவானது தமிழுக்கு மேலும் செழுமையூட்டும்.

வேறுபட்ட கலாச்சார பின்னணி, சொந்த மண்ணை உறவுகளைப் பிரிந்த வலி இல்லாது புதிய வாய்ப்புகள், வசதியான வாழ்க்கையென இருத்தலியல் சிக்கலில் அகப்பட்டுள்ள புலம்பெயர் சொந்தங்களுக்குத் தமிழ்நதியின் அறிவுரை?

புலம்பெயர்ந்தோர் அனைவரதும் குணாதிசயங்களும் பின்னணியும் ஒன்றல்ல. சொந்த மண்ணில் கிடைக்கப்பெறாத, அனுபவிக்கவியலாமற்போன வசதிகளை, பொருளாதார விடுதலையை புலம்பெயர் தேசங்களில் அவர்கள் பெற்றிருக்கலாம். கொண்டாட்டங்களையும் உள்ளடக்கியதுதான் வாழ்வு. ஆகவே, அத்தகையோருக்கு அறிவுரை கூறும் தகுதி எனக்கில்லை. ஆனால், ஓர் இனமாக, அதிலும் இனப்படுகொலையை எதிர்கொள்ள நேர்ந்த இனமாக எங்களுக்கென வரலாற்றுக் கடமைகள் உண்டு. பேரினவாதிகளால் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக உலக அரங்குகளில் குரலெழுப்பவேண்டிய தேவையுண்டு. எங்கிருந்தாலும் அதை மறவாதிருந்தால் போதும்.

அதுபோல, குழந்தை வளர்ப்பில், புலம்பெயர்ந்த முதல் தலைமுறைக்கு உங்களுடைய அறிவுறுத்தல் என்பது?

அலைபேசியில் அல்லது தொலைக்காட்சியில் விழிகளை ஒட்டவைத்தபடி அமர்ந்திருக்கும் குழந்தைகளையே எங்கெங்கும் காண்கிறோம். அவர்கள் யதார்த்த உலகோடு ஒட்டாமல் மெய்நிகர் உலகில் சஞ்சரிக்கிறார்கள். அவர்களை அதனின்று மீட்டு மெய்யுலகோடு புழங்கச் செய்யவேண்டிய கடப்பாடு பெற்றோருக்கு உண்டு. சமூக உறவுகளின் மேன்மையை உணர்த்தவேண்டியது(ம்) பெற்றோரது கடமையே.

பழக்கவழக்கம் மனிதர்களுடைய மதிப்பீடுகள் என்பது காலம் சார்ந்த ஒன்று. உங்களுடைய பார்வையில் எதிர்காலத்தில் (ஒரு வரையறைக்காக 50 ஆண்டுகள்) இந்திய, தமிழ் குடும்பங்களில் பெண்கள் குறித்த அல்லது பெண்களுடைய தனிப்பட்ட எந்த மதிப்பீடு மாறும், மாற வேண்டும்?

இதை முன்னனுமானித்து அறுதியிட்டுக் கூறுவது கடினம். குடும்பம் என்கிற அமைப்பு மிகுந்த பாரபட்சங்கள் நிறைந்தது, இயல்பிலேயே ஆண்மையக் கட்டமைப்பைக் கொண்டது. ஆணவப்படுகொலை போன்ற சமூக அவலங்கள் ஆண்மையப் பார்வையிலிருந்தே முளைவிடுகின்றன. குடும்ப அமைப்பில், பெண்களை 'ஆண்மையப் பார்வை'யிலிருந்து மதிப்பிடுவது மாறினாலே பெரும்பாலான சிக்கல்கள் தீர்ந்துவிடும். அது மாறாத பட்சத்தில் குடும்பம் என்கிற அமைப்பே கேள்விக்குள்ளாக்கப்பட்டு நாளடைவில் திருமணமே வேண்டாம் என்ற முடிவைப் பெண்கள் எடுக்கும் நிலைமையுண்டாகும். இது, ஏற்கெனவே வளர்ச்சியடைந்த நாடுகளில் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பதிலைத் தட்டச்சிக்கொண்டிருக்கும்போது, அந்த முடிவை ஏற்கெனவே எடுத்துவிட்டிருக்கும் பெண்கள் ஞாபகத்தில் வருகிறார்கள். உங்களால் குறிப்பிடப்படும் ஐம்பதாண்டு காலத்தில்

தனிப்பெண்களாக வாழ்வோர் தொகை கணிசமானளவு பெருகிவிட்டிருக்கும்.

1996–ஆல் உங்களுடைய முதல் படைப்பு வந்திருக்கிறது. தமிழோடு ஏறக்குறைய 30 ஆண்டுகள் பயணம். அதுகுறித்து தங்களுடைய நிறைவு, நிறைவின்மை பற்றி.

1996-ஆம் ஆண்டிலிருந்து எழுதத் தொடங்கிவிட்டாலும், தீவிர இலக்கியத்துக்குள் நான் தாமதாக வந்தவள் என்பதென் எண்ணம். இருப்பினும், இதுவரையிலான இந்தப் பயணம் நிறைவளிப்பதாகவே இருக்கிறது. என்னுடைய தனிப்பட்ட வாழ்வு குறித்துச் சொல்வதானால், ஏறத்தாழ இருபதாண்டு காலம் நான் பெற்றெடுக்காத ஐந்து பிள்ளைகளை வளர்க்கவேண்டியதொரு குடும்பச் சூழல் அமைந்தது. பிள்ளை வளர்ப்பென்பது சாதாரணமான விசயமல்ல. என்னுடைய படைப்பூக்கத்தில் அது பல தடங்கல்களை உண்டுபண்ணியது. வாசிக்கவும் எழுதவும் போதிய நேரங் கிடைக்கவில்லை. இன்னும் கொஞ்சம் நேரங் கிடைத்திருந்தால் இன்னும் கூடுதலாக எழுதியிருக்கலாம் என்றொரு ஆதங்கம் எனக்குள் உண்டு. ஆனால், அதுவும் எனது கடமைகளுள் ஒன்றுதான் என்றெண்ணி ஆறுதல்கொள்கிறேன்.

writers block பற்றி? எழுதும் எண்ணமுள்ளவர்கள் அல்லது முன்பு எழுதியவர்கள் தங்களுடைய அகச்சிக்கலைக் களைந்து தொடர்ந்து எழுதுவது எப்படி?

அவ்வாறான தருணங்களை நானும் அனுபவித்திருக்கிறேன். blank என ஆங்கிலத்தில் சொல்வது போன்ற ஒரு மனநிலை. வெற்றுக் காகிதம்போல மனம் வெறிச்சிட்டிருக்கும். அது மாதிரியான சமயங்களில் நல்ல திரைப்படங்களைப் பார்ப்பது, மொழிச் செழுமை கொண்ட நூல்களை மறுவாசிப்பு செய்வதன் வாயிலாக அந்த வெறுமையிலிருந்து வெளிவர முயற்சி செய்வேன். இனிமையான பாடல்களைக் கேட்கும்போது உண்டாகும் மென்னுணர்வினாலும் எழுத்துக்கு மீளும் தூண்டுதலை அடைவதுண்டு.

இன்றைய சமூக ஊடக இளைஞர்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்து...

முன்பே கூறியது போல இன்றைய தலைமுறை ரீல்ஸ் பார்த்து வளர்பவர்கள், அதே வேகத்தில் நொடிக்கொருதடவை மாற்றிக்கொண்டேயிருப்பவர்கள். எந்தவொரு செயற்பாடும் எல்லை மீறும்போது அதை நிவர்த்தி செய்வதற்கான தேடல்களும் தொடங்கிவிடும். இத்தகைய சிக்கல்களைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளின் தேவைகள்குறித்து தற்போது பலரும் உணர்ந்தே இருக்கிறார்கள். வெறும் கட்டுப்பாடுகள், அறிவுரைகள்மூலம் மட்டும் இதை நிவர்த்தி செய்யமுடியாதென நினைக்கிறேன்.

செயற்கை நுண்ணறிவு எனும் AI வழியாக எழுத்தைப் பெற்று தனதுபோல வெளியிடுவதில் எனக்கு முற்றிலும் உடன்பாடில்லை. அது மனசாட்சி இல்லாத செயல். அதை விடவும் அடுத்தவர்களுடைய படைப்புகளை அப்படியே உருவி தனது எழுத்தாக வெளியிடுபவர்களை என்னவென்பது? எழுத்துக்கென்றொரு தார்மீகம் உள்ளது. அதை மறந்துவிடலாகாது.

சமகாலத்தில் நம்பிக்கை தரும் எழுத்தாளர்கள் என ஒரு பட்டியல் தர இயலுமா?

எழுத்தாளர் பட்டியல் போடுவது போன்ற ஆபத்து வேறில்லை. அது எதிரிகளைச் சம்பாதித்துத் தரும். எனக்கு ஏற்கெனவே உள்ள எதிரிகள் போதும்.

பயணங்களுக்கு உங்கள் வாழ்வில் முக்கிய இடம் உள்ளதல்லவா?

கண்டிப்பாகப் பயணங்கள் என்றும் என் எழுத்துக்கு உறுதுணையாக உள்ளன. முன்பே சொன்னது போல, புதிய மனிதர்கள், புதிய நிலவெளிகள் மூலமாகக் கிட்டும் அனுபங்கள் என் எழுத்துக்கு உதவுகின்றன. இப்போது எனது பயணங்கள் சென்னை- வவுனியா- ரொறன்ரோ என்ற முக்கோணச் சுற்றில் மட்டுப்பட்டுவிட்டதில் எனக்கு வருத்தந்தான். இனிவரும் காலத்திலேனும் நெடும் பயணங்கள் செல்ல வேண்டும். ஐரோப்பா முழுவதும் சுற்ற வேண்டும். தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டும் எனப் பல ஆசைகள், திட்டங்கள் உண்டு. பார்க்கலாம்.

இன்றைய தமிழ்நதி முப்பதாண்டுகளுக்கு முன்புள்ள தமிழ்நதியென இருவரும் சந்தித்தால்...

இன்றைய தமிழ்நதிக்கு இளையவரிடம் கேட்க நிறையக் கேள்விகள் இருக்கும். "ஏனப்படி இருந்தாய்?" என இளையவரைக் கடிந்துகொள்ளவும் செய்திருப்பேன். (சிரிக்கிறார்) படைப்புபோல, முடிந்துபோன வாழ்வை திருத்தி எழுத முடியாது. பொருளாதார ரீதியாக நான் கொஞ்சம் கவனமாக இருந்திருக்கலாம்; நேர முகாமைத்துவத்தில் இன்னும் கூடுதல் அக்கறை செலுத்தியிருந்தால் இன்னும் அதிகம் எழுதியிருக்கலாம்; கொஞ்சம் திட்டமிட்டிருந்தால் எனது வாழ்வில் எதிர்கொள்ளவேண்டியிருந்த பல துரதிர்ஷடங்களைத் தவிர்த்திருக்கலாம். (சற்று மௌனமாக இருந்தபின்) வாழ்வு என்பது நேர்கோடுபோல அனைவருக்கும் சீராக இருப்பதில்லை தானே? (கேள்வியோடு பார்க்கிறார்) என்னதானிருந்தாலும் நான் தற்கொலை செய்யாமல் உயிரோடு இருப்பதற்கு காரணம் எழுத்தும் வாசிப்பும்தான்.

தமிழ்நதி எனும் எழுத்தாளர் பிற்காலத்தில் எப்படி நினைவுகூரப்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்?

அடிப்படையில் நான் ஒரு தமிழ்த்தேசியவாதி. இடது சாரித் தமிழ்த்தேசியத்தின் வழிசெல்பவள். அந்த வகையில், எனது மண்ணுக்காக, எனது மக்களுக்காக எழுத்து மூலம் என்னாலியன்றவரை குரல்கொடுத்திருக்கிறேன் என நினைவுகூரப்பட்டால் அது எனக்குப் போதும்.

ஆரூர் பாஸ்கர் <aarurbass@gmail.com>


SRI VEERA'S GROUP
SRI VEERA'S CREATIONS
ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
SRI VEERA'S CREATIONS
(Silks Textiles & Readymade Showroom)
மொத்த விலை ஷோரூம்
Wholesale showroom
www.sriveeras.com
www.facebook.com/sriveerascreations
2 Wheeler & Car Parking வசதியுடன்
எண். 51-52/1, M.C. ரோடு, சென்னை - 600 021.
போன் : 2590 1771, 2590 1772, 2590 1773, 2590 1774


World class service for Design & Construction of Precast Buildings
We thank all our customers for their trust & confidence endowed upon us. Its our mission to continually strive to provide cost effective & high quality PRECAST products
European Technology
Modern Construction
TEEMAGE
PRECAST.IN
4 PRECAST FACTORIES
15 CRANES + 2 tower cranes
50 LAKHS SQ.FT CONSTRUCTED
Class 1A contractor of CPWD, SPL class contractor in R&B Andhra,
executed precast construction for CRPF, NBCC, NPCIL, DMRC, ISRO
150 PROJECTS COMPLETED
350 ENGINEERS
2000 EMPLOYEES
School in Coimbatore
25,300 Sq.ft
completed within 60 days
Commercial Mall
2,25,000 Sq.ft
completed in 120days
Hostel Building
26,000 Sq.ft
completed in 70 days
Housing for CRPF
72 Days 1 Block
251 Houses 11 Months
EASIER
FASTER
BETTER
SERVICES OFFERED
•Design & Detailing
•Planning
•Production
•Transportation
•Erection
TYPES OF BUILDING
•Commercial
•Industrial
•Institutional
•Residential
•Multi level-Car Parking
TEEMAGE
Corporate Office :
6/35, College Road, 1st Cross Street, Tiruppur - 641 602.Tamilnadu. India. Ph : 0421 2240488.
4 Precast Factories Pan India
Coimbatore | Delhi | Hyderabad | Chennai
82204 55555, 82200 51777
email : sales@teemageprecast.in
marketingteemage@gmail.com
web : www.teemageprecast.in

ஏதம் பெருஞ்செல்வம்

● சந்தியா நடராஜன்

'ஏதம்' என்றால் நோய் அல்லது துன்பம் என்று பொருள். பெருஞ்செல்வம் என்பது செல்வக் குவிப்பு; சேமிப்பு அல்ல. ஈட்டிய செல்வத்தைத் தானும் பயன்கொண்டு தக்கவர்க்கும் அளிக்க வேண்டும். ஈந்து உவக்கும் இன்பம் வேண்டும். ஈதல் இயல்பாகவே இருக்க வேண்டும். அப்படி இல்லாதவனிடம் இருக்கும் பெருஞ்செல்வம் நோய் என்கிறார் வள்ளுவர். Accumulation of wealth is a disease. இரண்டே சொற்களில் மார்க்சியத்தின் சாரத்தை அல்லது சோஷலிச சித்தாந்தத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் பொதுமறை தந்தவர்.

*2023*ஆம் ஆண்டு உலக புத்தக தினத்தையொட்டி (ஏப்ரல் *23*) தருமபுரி 'நமது நூலங்காடி' என்ற புத்தகக் கடை ஒரு விழா நடத்தியது. உரிமையாளர் இல்லாத நிறுவனம். தன்னார்வலர்களால் நடத்தப்படுகிறது. அந்த நிறுவனம் தருமபுரி கம்யூனிஸ்டுக் கட்சி அலுவலகக் கட்டிட வளாகத்தில் செயல்படுகிறது. அந்த விழாவும் அங்குதான் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோருமே இடதுசாரிகள். அந்த விழாவில் பேசும்போது நான் இப்படிக் குறிப்பிட்டேன்: 'இன்னும் கம்யூனிஸ்டுகளைத் தான் அரசியலில் நல்லவர்களாக மக்கள் மதிக்கிறார்கள். ஈந்து உவக்தாமல் தானும் நுகராமல் இருப்பவனிடம் கோடி கோடியாய் செல்வம் இருந்தாலும் அது இல்லாததே ஆகும். இவையெல்லாம் 'நன்றியில் செல்வம்' அதிகாரத்தில் வரும் பத்துக் குறட்பாக்களின் சாரம். இங்கு நன்றி என்பது நன்மை என்று பொருள்படும். அதாவது நன்மை இல்லாத செல்வம். இவற்றைப் படிக்கிறபோது ரோமன் நகரத்து வள்ளுவனான செனகா எழுதியது நினைவுக்கு வருகிறது. இருப்பது கொஞ்சமே என்றாலும் அவன் ஏழை இல்லை; இன்னும் வேண்டும் என்று ஏங்குகிறவனே ஏழை.'



ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான் *(குறள்-1006)*

வள்ளுவர் சொல்கிறார்: ஏதுமற்றவர்களுக்கு ஏதும் செய்யாதவன் செல்வம், ஒரு பேரழகி முதிர்கன்னியாகி முதுமையுற்றதைப் போன்றது. ஈகைக் குணம் இல்லாதவனை எவரும் விரும்பமாட்டார்கள். அவனிடம் இருக்கும் செல்வம் ஊர் நடுவே நச்சு மரம் பழுத்ததை ஒக்கும். தானும் உண்ணாமல் தன்னை வருத்தி, அன்பு செய்யச் செலவு செய்யாது அறவழிக்குப் புறம்பாகச் சேர்க்கும் செல்வத்தைப் பிறர்தான் அனுபவிப்பர்.

சீருடைச் செல்வர் என்கிறார் வள்ளுவர். யார் அவர்? கொடுத்துக் கொடுத்து வறுமையுற்றவர். அவரது வறுமை மழை தரும் மேகம் வற்றியதற்கு ஒப்பாகுமாம்.

வீடு நிறையப் பொருள் இருந்தும் அதை அனுபவிக்காதவன், இருந்தும் இறந்தவனே. பொருள்மீது பற்றுக் கொண்டு யாருக்கும் ஈயாது, 'எல்லாம் பொருளால் ஆகும்' என்று வாழ்பவன் மனிதப் பிறவியே இல்லை. அவன் இழிபிறவி. பொருள் குவிக்கும் மனம் கொண்டவன் பூமிக்குப் பாரம். பிறர்க்கு உதவாதவனை யார் விரும்புவார்? அவன் மறைந்த பின் எது எஞ்சி நிற்கும்?

மக்களுக்காகப் பாடுபடுபவர்களாக, போராடுகிறவர்களாக உங்களைப் போற்றுகிறார்கள். ஆனால், தேர்தல் அரசியலில் ஏன் உங்களால் செல்வாக்குப் பெற முடியவில்லை. நீங்கள் உங்கள் பக்கம் வரும் இளைஞனுக்குப் பொருள்முதல் வாதம், கருத்துமுதல் வாதம் என்று சித்தாந்த மொழியில் பேசிவிடுகிறீர்கள். மக்கள் மொழியில் உரையாடல் நிகழ்த்துங்கள். 'ஏதம் பெருஞ்செல்வம்' என்பது வள்ளுவ வாசகம். பெருஞ்செல்வம் நோய் என்று எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் மேடைகளின் பின்புறம் வைக்கப்படும் பேனரில் 'ஏதம் பெருஞ்செல்வம்' என்ற வாசகம் இடம் பெறட்டும்."

அந்தக் கூட்டம் முடிந்து ஒரு வாரத்தில் மே தினம் வந்தது. தருமபுரியில் மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான தோழர் சிசுபாலனிடமிருந்து எனக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது.

'ஏதம் பெருஞ்செல்வம்' என்ற முழக்கத்துடன் மே தின துண்டு பிரசுரம் வெளியிட்டுள்ளோம்'

வள்ளுவ வாசகத்தின் வீர்யம் என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. ●

சந்தியா நடராஜன் <natarajanm2015@gmail.com>

இவ்வளவு தற்செயலா?

● சோம வள்ளியப்பன்

எலக்ட்ரிக் அடுப்பு மீது குக்கர் வைத்து, ரவா உப்புமா கிண்டுவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த மாலதி, "நாளைக்கு எங்க போறோம்?" என்று கேட்டாள்.

மெத்தை மீது அமர்ந்து லேப்டாப்பில் எதையோ பார்த்தபடி இருந்த, கணவன் ராஜன் காதில் அது விழுந்தாலும், பதில் சொல்லாமல் தொடர்ந்து லேப்டாப்பையே பார்த்துக்கொண்டிருந்தான்.

மாலதி சூடான எண்ணையில் அரிந்த வெங்காயம், காய்ந்த மிளகாய் மற்றும் கடுகைப் போட்டாள். எல்லாம் ஊரிலிருந்து நினைவாகக் கொண்டுவந்தவை. கடுகு 'டப்பு டுப்பு' என்று வெடித்தது. கூடவே தாளிப்பு நெடியும் 'புஸ்' என்று புகையாய்க் கிளம்பியது. அந்த நெடி ராஜன் மூக்கைத் துளைக்க, 'அச்' என்று ஒரு பெரிய தும்மல் போட்டான். பிறகு, "என்ன கேட்ட?" என்றான். மீண்டும் ஒரு தும்மல் வர, தும்மியபடி லேப்டாப்பை மூடினான். எழுந்து வந்து மாலதிக்குப் பின்புறம் நின்றபடி குக்கரை எட்டிப் பார்த்து, "என்ன மேடம், இன்றைய ஸ்பெஷலும் உப்புமாதானா?" என்றான்.



"ஓ! உப்புமா சாதாரணமாத் தெரியுதா ஐயாவுக்கு? வேண்ணா அடை, அவியல் பண்ணித் தரவா? இது என்ன உங்க மயிலாப்பூர் வீடா? அங்க, ஜம்முனு பங்குனி உற்சவம் நடக்குது. நான் வரலைன்னு சொன்னா கேட்காம என்னையும் 5000 கிமி தள்ளிக் கென்யா நாடில இருக்கிற நைரோபிக்கு கூட்டிக்கிட்டு வந்துட்டு, கேள்வியைப் பாரு கேள்வியை. இன்னிக்கும் உப்புமாவான்னு!"

"அதுக்காக மூணு வேளையும் உப்புமா திங்க முடியுமா?"

"ஏதோ என்னக் கூட்டிட்டு வந்ததால இந்த உப்புமாவாது கிடைக்குது. இல்லாட்டா, இந்த நாட்ல ஆறு நாளும் உங்களுக்கு உகாலி களிதான். கூட என்னமோ ஒண்ணு தாரானே. அதென்ன சுகுமா விக்கியா? அதைத்தான் சாப்பிட்டுக்கிட்டு இருப்பீங்க."

"அய்யய்யோ அந்தப் பேரைச் சொல்லாத. கேட்டாலே குமட்டுது. எப்படித்தான் சாப்ட்றாங்களோ!"

"அவங்களுக்கு என்ன. அதையும் ஆட்டுக்கறி மாட்டுக்கறியைத் தின்னுட்டு நல்லா, கயிறு கயிறா இருக்காங்க. நாம தான் விடாம மூணு வேளையும் சோத்தைக் கொட்டிக் கிட்டு, தொப்பையும் தொந்தியுமா" என்று சொல்லியபடி ராஜனின் வயிற்றில் நன்கு அகல விரித்த உள்ளங்கையால் டப் டப் என்று தட்டினாள்.

இருவரும் சிரித்துக்கொண்டார்கள்.

டூர் எல்லாம் அதிகம் போனவன் இல்லை ராஜன். அதுவும் வெளிநாட்டு டூர் எல்லாம் அவன் கனவிலும் இல்லை. திருமணம் ஆனபின் மாலதியின் அண்ணன் சுந்தரம் வலிய அழைத்து வந்ததால் நைரோபி வந்திருக்கிறார்கள்.

"டூர் என்றால் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து என்று ஊர் சுத்தப் போவார்கள். ஆனால், உங்கண்ணன் என்னென்னா தங்கச்சியையும் மாப்பிள்ளையையும் இப்படி காஞ்சுபோன கென்யாவுக்கு கூட்டிகிட்டு வந்திருக்கார்..."

"ஏங்க சத்தமாப் பேசாதீங்க. பக்கத்து ரூம்தான். அவர் காதில விழப் போகுது."

"ஆமாமில்ல" என்ற ராஜனைப் பார்த்துக் கிசுகிசுப்பான குரலில், "உண்மையச் சொல்லுங்க. அவரா இங்க வரச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்? நான் இப்படியெல்லாம் போவேன் வருவேன்னு அவர் சொன்னதும், நீங்களும் உங்களுக்கு இண்டிரஸ்ட் இருக்கிறாப்பல காட்டிகிடீங்க. அவர் பிடிச்சுக்கிட்டார்."


"ஆமாம். இது ரொம்ப வித்தியாசமான அனுபவமா இருக்கும். 'நேச்சர் டிரையல்'. இயற்கையோடு கொஞ்சநேரம் அது இதுன்னு சொன்னார்... நானும் அப்படீன்னா என்னன்னு தெரியாம..."

"நாமா செலவு செய்றோம். அப்படீன்னும்..."

"ஏய்! என்ன சொல்ல வர்ற நீ?"

அப்போது அவர்கள் அறை கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"உஸ்... உன் அண்ணன் வந்துட்டார். பேச்சை மாத்து..." என்று சொல்லியபடி போய்க் கதவைத் திறந்தான் ராஜன்.



“என்ன மாலதி ரவா உப்புமாவா? வாசனை என் ரூம் வரை வருது... ஆகா ஆகா...” என்றபடி கட்டிலில் உட்கார்ந்தார் சுந்தரம். கணவன் ராஜனை மாலதி ஒரு அர்த்தத்தோடு பார்த்தாள்.

மறுநாள் காலை. 8 மணிக்குக் கிளம்புவதாகத் திட்டம். ஏழரை மணிக்குச் சுந்தரம் இண்டர்காமில் தங்கை மாலதியை அழைத்து, “வயித்த என்னமோ பண்ணுது. இரண்டு மூணு வாட்டிப் போயிடுச்சு. ராத்திரி கொஞ்சம் வாமிட்டிங் வேற. நான் வரல. நீங்கக் கிளம்பி போயிட்டு வந்துடுங்க. நான் ஒரு நாள் ரெஸ்ட் எடுக்குறேன்” என்றார். குரலில் சுரத்தில்லை.

“என்ன ஆச்சு!” என்று பதறியபடி இருவரும் அடுத்த அறைக்குப் போய்ப் பார்த்தார்கள். கட்டிலில் படுத்திருந்தார். சோர்வாய்த் தெரிந்தார். அவரால் நிச்சயம் வெளியில் வர முடியாது என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

“இன்றைய புரோகிராமைக் கேன்சல் பண்ணிடலாம். நாளைக்கு பாத்துக்கலாம்” என்று சொல்லிப் பார்த்தாள் மாலதி. ராஜனும் ஆமோதித்தான். ஆனால், சுந்தரம் விடவில்லை.

“எனக்கு என்ன. நான் ரூம்ல பேசாமப் படுத்திருக்கப் போறேன். நாளைக்கு 'என்காங் ஹில்ஸ் ஹைகிங்'கிற்குப் போகணுமில்ல... கொண்டுவந்திருக்கிற மாத்திரையைப் போட்டுக்கிறேன். ஒலூலுவா அருவியும் நேச்சர் டிரையலும் ரொம்ப நல்லா இருக்கும். நான் இன்னொரு வாட்டி வர்றபோது பார்த்துக்கிறேன். நீங்க இந்த மாதிரி டூர் வர்றது அபூர்வம். இவ்வளவு தூரம் வந்தாச்சு. நீங்க அவசியம் போய்ட்டு வாங்க” என்று அனுப்பி வைத்தார்.

டாக்சி பிடித்தது அந்த இடத்துக்கு வந்து விட்டார்கள். பெரிய கட்டிடமோ விளம்பரப் பலகைகளோ இல்லை. ரொம்ப சாதாரண இடம்போல இருந்தது. கட்டிட வேலை நடக்கும் இடத்தில் தற்காலிக ஷெட் போட்டு அமர்ந்திருப்பார்களே, அப்படிப்பட்ட ஒரு நீல நிற ஷெட்டுக்குள் இரண்டு அலுவலர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம்தான் டிக்கெட் வாங்கிக் கொள்ள வேண்டும். பணம் கொடுத்ததும் இருவர் கையிலும் சிவப்பு நிறத்தில் ஒரு ரப்பர் வளையல் போன்ற பேண்ட் மாட்டிவிட்டு, “போகலாம்” என்பது போல உள்பக்கம் கைக்காட்டினார்கள்.

“ஏங்க இதுதான் அந்த இடமா? நிச்சயமா தெரியுமா? நம்மளத் தவிர யாரையும் காணோமே!” என்றாள் மாலதி

“எல்லாம் உன் அண்ணன் சுந்தரத்தோட ஸ்பெஷல் செலக்சன். உன்னோட ஸ்பெஷல் உப்புமா போல. நல்ல அண்ணன், நல்ல தங்கச்சி...” என்று சிரித்துக் கொண்டே சொன்னவன், “இருந்து இருந்து இப்படியொரு நாட்டைக் கண்டுபிடிச்சுக் கூட்டி வந்திருக்கார் பாரு. சரி, வந்துட்டோம். இதையும் என்னதான்னு பார்த்திடலாம்“ என்றான்.

ஆங்காங்கே ஆங்கிலத்தில் எழுதி வைக்கப்பட்டிருந்ததை பார்த்தார்கள். ஒரு பலகையில் ‘640 ஹெட்டேர் பாரஸ்ட் ரிசர்வ்’ என்று எழுதி வரைபடம் போட்டிருந்தது. மாலதி அதைச் சற்று நேரம் கவனித்துப் பார்த்தாள்.

“வா வா வெயில் ஏறுவதற்கு முன் உள்ளே போய்விடுவோம்” என்று சொல்லி வேகமாக நடக்க ஆரம்பித்தான் ராஜன். தரையெல்லாம் கரிசல் மண்ணும் சிறு கற்களும். பாதை ஓரளவுக்கு நடக்குமளவுக்கு இருந்தது. இரண்டு பக்கங்களிலும் பருமன் குறைவான அடசலான மூங்கில் மரங்கள், . ஆங்காங்கே பிஃக், குரோட்டன் மெகாலோகார்பஸ் மற்றும் ஆலிவ் மரங்கள். மஞ்சளும் பச்சையுமாக ஆங்காங்கே இலைகள் உதிர்ந்து கிடந்தன.

“ஏங்க இங்க பாம்புங்க இருக்குமோ?”

“என்ன சந்தேகம்? இவ்வளவு செடி கொடி இருக்கு. ஆள் பேர் இல்ல. பாம்பு எப்படி இல்லாமப் போகும்?”

“என்ன விளையாடுறீங்களா?”

“பாம்புன்னுதான் சொன்னேன். விஷ பாம்புன்னு சொன்னானா? தெரிஞ்சுக்காம வருவமா? உன் அண்ணன் சொன்னார். தவிர, நானும் கொஞ்சம் நெட்ல படிச்சுப் பார்த்தேன். இந்த இடத்தில் விஷப் பாம்புகள் இல்லைன்னு போட்டு இருக்கான்.”

“அந்தத் தகவல் விஷப் பாம்புகளுக்குத் தெரியுமோ! அவை அதைப் படிச்சிருக்குமா?”

“அட பரவாயில்லையே ஜோக்கு கூட அடிக்கிறியே..! இடுக்கண் வந்தால் நகுக வா? நல்ல மூடுலதான் இருக்க. ஆமாமா. அண்ணன் போட்ட பிளான் இல்லையா!” ..

தொடர்ந்து நடந்தார்கள். நடக்க நடக்க, அதே மரங்கள், வெறுந்தரை, கருப்பு, பழுப்பு, மஞ்சள் நிற சிறு கூழாங்கற்கள்.. கொஞ்சம் பெரிய பாறைகள். வேறு ஒன்றும் இல்லை.

“இந்த இடத்தில் வேற என்ன இருக்கும்? இதே செடிகளும் மரங்களும் தனா? என்னமோ குகை இருக்கு.. அருவி இருக்குன்னு சொன்னாரே அண்ணன்.”

“ஆமா. கண்டிப்பா அந்த அருவியைப் பார்த்தாகணும். எம்பாகதி ஆறோட ஒரு பிரிவு இங்க அருவியாக் கொட்டுதாம். அதான் இங்க இருக்கிறதிலேயே ஸ்பெஷல்.”

இருபது நிமிடமாகியிருக்கும். பாதை முடிந்துவிட்டது போலிருந்தது. மரங்களுக்கு இடையே கிடைக்கும் இடைவெளிகள் வழியாக நடந்தார்கள். மாலதி வாட்டர் பாட்டிலிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு ராஜனுக்கும் கொடுத்தாள்.

“கொஞ்சமாகக் குடிங்க. இரண்டு பாட்டில்தான் கொண்டு வந்திருக்கு. இங்க ஒரு கடையும் இல்லை.”

அயர்வாக இருக்கிறது என்று மாலதி நிழல் தேடி ஒரு சின்னப் பாறை மேலே அமர்ந்து கொண்டாள். எந்த இடத்தில் இருக்கிறோம் என்று பார்க்கலாம் என்று போனை எடுத்துப் பார்த்தான் ராஜன்.

பார்த்துவிட்டுச் சிரித்தபடி சத்தமாக, “இப்போ நான் ஒரு அறிவிப்பு செய்யப் போகிறேன். மாலதி மேடம். கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்” என்றான். அவள் அசுவாரசியமாக அவனைத் திரும்பிப் பார்த்தாள்.



“இங்கே சுத்தமா நெட்ஒர்க் இல்லை.. டட்ட டாங்“

சற்று தூரம் போனதும், பிளந்த மூங்கில் பத்தைகளால் கட்டபட்ட 20 அடி உயரமான பழைய குடில் போல ஒன்று இருந்ததை ராஜன் பார்த்தான். அதன் எதிரில் நின்று ஏதோ ஆராய்ச்சி மாணவன் பார்ப்பது போல உற்றுப் பார்த்தான்

“அங்கே என்ன பார்க்கிறீர்கள்? அதென்ன?” என்றாள்..

பின்பு அவளே, “வேட்டையாடுறவங்க தங்குற இடமா இருக்குமொ” என்றாள்

இப்போது ராஜன் அவளத் திரும்பிப் பார்த்து முறைத்தான். “வேட்டையாடுறவங்க... இங்க...! நல்லா சொன்ன போ” என்றான்.

“மரங்கள், அங்கங்க இருக்கும் கொஞ்சம் பாறைகளைத் தவிர வேற எதுவும் இருக்கிறாப்லத் தெரியல. அதனால எப்பயாவது கண்ணுல படுற இது மாதிரி எதையாவது பார்த்தால்தான் உண்டு. ஊருக்குப் போனா என்ன பார்த்தோமின்னு சொல்லனுமில்ல.”

“நீங்களும் நெட்ல பார்த்துத் தெரிஞ்சு தானே வந்தீங்க. ஏதோ எங்கண்ணன் சொல்லிட்டாங்கிறதுக்காக ஒரேடியா குறை சொல்லாதீங்க. அவர் இங்க அருவி ரொம்ப அழகுன்னு சொன்னாரே. அது எங்க? வாங்க நடக்கலாம்” என்று சொல்லி மாலதி தடுமாறிபடி எழுந்தாள்.

“வா கண்டுபிடிப்போம். அதுக்கு தானே வந்திருகோம்” என்று சொல்லியபடி நடந்த ராஜனுக்கு மூச்சு வாங்கியது. மணி பார்த்தான் 11. வெயில் ஏறிக் கொண்டிருந்தது. காற்று அதிகம் இல்லை. அதனால் புழுக்கமாக இருந்தது.

அடுத்து இருந்த ஒரு மர நிழலில் அமர்ந்தார்கள். பிஸ்கெட் சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தார்கள். சிலென்றிருந்த தண்ணீர் அமிர்தமாக இருந்தது. முழுதும் குடித்துவிடலாம் என்பது போலிருந்தாலும், பிறகு தேவைப்படுமே என்று மனம் இல்லாமல் மூடி வைத்தாள் மாலதி.

“ஒண்ணு ஞாபகம் வச்சுக்க மாலதி. இப்ப எவ்வளவு தூரம் நடக்கிறமோ, அதே அளவுத் தூரம் திரும்ப நடக்கனும். அப்பதான் வெளியே போக முடியும். மயிலாப்பூர் கோவிலுக்கு நடக்கிறபோது முடியலைன்னா ஆட்டோ கூப்பிடுற மாதிரி எதுவும் பண்ண முடியாது.” சொல்லி ராஜன் சிரித்தான்.

மாலதி எதுவும் பதில் சொல்லாமல் அவனை முறைத்தாள்.

“நீ பாட்டு செவனேன்னு மயிலாப்பூரில் திருவிழா பார்த்துகிட்டு இருப்ப. உன் அண்ணன் சொல்லி...” என்று கொண்டிருந்தபோதே மாலதி, “இதோ பாருங்க. இந்தப் பக்கமா ஆளுங்க நடந்து போன மாதிரிப் பாதை தெரியுது. மத்த பக்கம் எல்லாம் அப்படி இல்லை. இந்தப் பக்கம் அருவி இருக்குமோ!”

“டூர் வந்திருக்குமா, துப்பறியா வந்திருக்மான்னு தெரியலையே...! அண்ணே சுந்தரம்... எங்களை நல்லா மாட்டி விட்டுட்டு நீங்கப் பாட்டு நிம்மதியா ரூம்ல இருக்கீங்க.”

“கொஞ்ச நேரம் பேசாம வரீங்களா” என்று சொல்லியபடி மாலதி அந்தத் திசையில் வேகமாக நடந்தாள்.

வெயிலும் புழுக்கமும் இன்னும் அதிகரிக்க அணிந்திருந்த உடைகள் வேர்வையில் நனைந்து உடம்போடு ஒட்டிக்கொண்டன. ராஜனுக்கும் அயர்வாகத்தான் இருந்தது. “இவ்வளவு தூரம் வந்துட்டு பார்க்காம போகக் கூடாது. அருவியைப் பார்த்ததும் திரும்பிடலாம்” என்றான்.

“ஆமாம். வந்தத்துக்கு அதைப் பார்த்திட்டுக் கிளம்பிடலாம்” என்றாள் மாலதி.

மணி மதியம் பதினொன்றரை. இப்போது கால்களும் வலித்தன. இவ்வளவு தூரம் கிளம்பி வந்து ஒன்றுமே பார்க்காமல் திரும்பிப் போவது இருவருக்குமே சம்மதம் இல்லாமல் இருந்தது. வெளிய அதைச் சொல்லிக் கொள்ளாமல் தொடர்ந்து நடந்தார்கள்.

மாலதியின் தலையில் ஊறிய வியர்வை முகத்தில் வழிந்து கொண்டிருந்தது. அதைத் துப்பட்டாவால் துடைத்துத் துடைத்து, துப்பட்டா பிழியுமளவு ஈரமாகிவிட்டது. அப்படித் தடுமாறி நடந்துகொண்டிருந்த மாலதியைப் பார்க்க ராஜனுக்கு பாவமாக இருந்தது. இந்த இடத்தைத் தேர்வு செய்து கூட்டி வந்ததற்காக மாலதியின் அண்ணனை இனி கிண்டல் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துகொண்டான்.

“நீ இன்னைக்கு வந்திருக்கவே வேண்டாம். உன் அண்ணணப் பாத்துகிட்டு ரூம்லயே இருந்திருக்கலாம். அல்லது நாம ரெண்டு பேருமே கூட அங்க இருந்து இருக்கலாம். பரவால்ல, விடு. வா திரும்பிடலாம். போதும் அருவியைப் பார்த்து என்ன ஆகப்போகுது? நம்மூரில் இல்லாத அருவியா?” என்றான்.

ராஜன் இப்படி சொல்வதற்காகவே காத்துக்கொண்டிருந்தது போல மாலதி, “ஆமாங்க. அருவி இன்னும் கண்ல படல. இதுக்கு மேல நடந்து அதை எப்ப பார்த்து. எப்ப நம்ம வெளியே வர்றது? போதும். திரும்பிடலாம்” என்றாள்.

மாலதியிடமிருந்து தண்ணீர் பாட்டிலை வாங்கி ஒரு வாய் குடித்தான். அவளுக்கும் கொடுத்தான். பிறகு. “ஆமா. நீ சொல்றதுதான் சரி. திரும்பிடலாம். அதுக்கு முன்னாடி நீ கொஞ்ச நேரம் உட்காரு. உன்னப் பாக்க பாவமா இருக்கு” என்றான்.

வெயிலின் உக்கிரம் மூங்கில் மரங்களையும் தாண்டி எரிந்தது. தொடர்ந்து நடந்தததால் கால் வலி. காற்று அசையாமல் இருந்ததால், மூச்சு விடச் சிரமம். வேர்வை ஈரம் காரணமாக உடம்போடு ஒட்டிக்கொண்ட

உடை எரிச்சல் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, வந்ததற்கு எதையும் பார்க்க முடியவில்லையே என்கிற ஏமாற்றமும்.

"ஒரு ஆளைக் கண்ணுல காணல. இப்படியொரு வனாந்திரத்தை, 'டூரிஸ்ட் ஸ்பாட்டு'ன்னு காசு வாங்கி ஏமாத்துறான்க! படுபாவிங்க... 'நேச்சர் டிரையல்' ஆம், 'நேச்சர் டிரையல்'" என்று மாலதி கடுப்பில் முணகியது ராஜன் காதில் நன்றாகவே விழுந்தது. ஆனாலும் அவன் எதுவும் பதில் சொல்லவில்லை.

நடக்க முடியாமல் நடந்தார்கள். அப்போது இடது பக்கம் குகைபோல ஒன்று தென்பட்டது. அதன் வாய் தரையிலிருந்து 2 அடி உயரம் இருந்தால் அதிகம். அதற்கு வெளியே ஏதோ படிக்கட்டுகள்.

"அட! குகை!!. போய்ப் பார்போமா?" என்று கேட்டபடி ராஜன் மாலதியின் முகத்தைப் பார்க்க, அதில் ஏகபட்ட சோர்வு. பிறகு, வேண்டாம் என்று முடிவு செய்துகொண்டான்.

பிறகு, போனை எடுத்துப் பார்த்தான். டவர் கிடைக்கவில்லை. யாரையும் தொடர்பு கொள்ள முடியாது. இன்டர்நெட்டில் எதையும் பார்க்க முடியாது. அதனால் இன்னும் வெளியே போக எவ்வளவு தூரம் என்று அவனால் கணக்கிட முடியவில்லை.

"மணி பன்னிரெண்டே கால் ஆகப் போகிறது. பத்து, பத்தே காலுக்கு உள்ளே வந்து நடக்க ஆரம்பித்திருப்போம். அப்படியென்றால் கிட்டத்தட்ட திரும்பிப் போவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் ஆகுமே!' என்று அவன் மனது கணக்கு போட்டது.

மாலதியை திரும்பிப் பார்த்தான். அவள் கண்கள் சோர்ந்து போய். பார்க்கவே பரிதாபமாக இருந்தாள்.

போகப் போக வெயில் இன்னும் அதிகமாகத்தான் ஆகும். ஒரு மணி, இரண்டு மணி வெயில் எல்லாம் தாங்க முடியாது. வேகமாகத் திரும்பி விடலாமென முடிவு செய்து அவள் அருகில் போய் அமர்ந்தான்.

"சாரி மாலதி சாரிம்மா" என்றான் .

"நீங்க என்னங்க செய்வீங்க? நீங்களா இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தீங்க? அண்ணனுக்குத்தான் இதிலெல்லாம் இண்ட்ரெஸ்ட். அவனுக்குத்தான் தெரியும். அவனால முடியலைன்னதும் நாமளும் வந்திருக்க கூடாது."

ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டு இருவரும் எழுந்தார்கள். "எந்தப் பக்கம் போகணும்?" என்றாள் மாலதி.

அப்போதுதான் ராஜனுக்கும் அந்தக் குழப்பம் வந்தது. உட்கார்ந்து ஓய்வெடுத்தது எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தான். என்ன யோசித்தும் எல்லா பக்கமும் மரங்கள் இருந்த அந்த ஒரே போலச் சின்னச் சின்ன நடந்த பாதைகள் தென்பட்ட இடத்தில், வந்த திசை எது? திரும்ப வேண்டிய திசை எது? என்பதை அவனாலும் உறுதியாக முடிவு செய்ய முடியவில்லை.

"இது என்னடா அடுத்த பிரச்சனை! சரியாக நடந்தாலே இரண்டு மணி நேரம் ஆகும். வழி தெரியாமல் தேடித் தேடி நடந்தால் எப்போது கண்டுபிடித்துப் போய்ச்சேர முடியும் அவன் மனதுக்குள் பயம் வந்தது. ஆனால், அதை வெளியில் சொல்லி மாலதியை அச்சப்பட வைக்க வேண்டாமென நினைத்து, மேலே சூரியனை பார்த்தான். கிழக்கில் தானே உதயம்? உள்ளே நுழைந்தபோது சூரியன் முதுகு பக்கம் இருந்ததாக நினைவு. இப்போது எந்தப் பக்கம் இருக்கிறது என்று அண்ணாந்து பார்த்தான்..

அது நண்பகல் என்பதால், சூரியன் உச்சியில் இருந்தது. எந்தப் பக்கத்திலிருந்து உதயமானது, எந்தப் பக்கத்தில் இறங்கப் போகிறது என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை..

சுற்று முற்றும் குழப்பமாகப் பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்த மாலதி, தீர்மானமாக, "வாங்க போகலாம்" என்று ஒரு குறிப்பிட்ட பக்கமாக அவனைக் கையைப் ப்டித்து இழுக்க, 'அநேகமாக அவள் சொல்வதுதான் சரியாக இருக்கும்' என்று அவர்களோடு நடக்க ஆரம்பித்தான்.

நடந்தார்கள் . பத்து நிமிடம் போயிருக்கும். பசி அதிகமானது. அவன் தண்ணீர் கேட்டான். "இன்னும் ஒரு வாய்தான் இருக்கும். இப்ப வேணாம். கொஞ்சம் பொறுத்துக்கோங்க. பிஸ்கட் தரவா?" என்று மாலதி கேட்டாள்.

"அய்யய்யோ பிஸ்கட்டா!!" என்று கையெடுத்து கும்பிட்டான். ஏற்கனவே அவன் வாய் உலர்ந்திருந்தது.

வந்தபோது கவனிக்காமல் இருந்துவிட்டு, இப்போது சுற்றிலும் இருக்கிற மரங்களைக் கவனித்துப் பார்த்தான். ஏதாவது நாம் வரும்போது பார்த்தது போல இருக்கிறதா? என்று. ஒன்றும் புலப்படவில்லை.

சரியான பாதையில் தான் போகிறோமா? என்று அவனுக்குள் பெரிய கலக்கம். அந்தக் கலக்கம் சற்று நேரத்தில் மாலதிக்கும் வந்தது.

மணி பார்த்தான் பன்னிரெண்டரை. இன்னும் ரெண்டு மணி நேரம் நடக்க முடியுமா? என்று மனதுக்குள் கலங்கினான். மேலும், சரியான பாதையில் போனால்தானே இரண்டு மணி நேரம்!!. அதனால், இன்னும் இரண்டு மணி நேரம்தானா? என்ற கேள்வியும் தோன்றி ராஜனுக்கு திகிலூட்டியது.

எந்த நேரமும் கீழே விழுந்து விடுவது போல மாலதி தடுமாறித் தடுமாறி நடந்தாள்.

'டூரிஸ்ட் ஸ்பாட் என்கிறார்கள். உள்ளே மருந்துக்கும் ஏதும் போர்டு இல்லை. நம்மைத் தவிர சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்ல வேலை செய்பவர்கள் கூட



யாரும் இல்லை. ஃபோன் வேலை செய்யவில்லை. என்னடா சோதனை இது? இங்கே வந்து மாட்டிக்கொண்டோம்!! இங்கிருந்து எப்படி வெளியே போவது? போக முடியுமா?' என்று மனதுக்குள் தவித்தான்.

பசி, தாகம், வெயில், வேர்வை, மூச்சுச் திணறல்... இருவராலும் நடக்க முடியவில்லை. பக்கவாட்டில் இருந்த ஒரு மூங்கில் மரத்தின் வேர்மீது அமர்ந்தார்கள். இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அவர்கள் முகங்களில் பயமும் கவலையும்.

திடீரென்று மாலதியின் இரண்டு கைகளையும் பிடித்துக் உலுக்கி ராஜன், "நீ முருகர் பாட்டு பாடுவியே. முருகனை நினைச்சுப் பாடு. கண்டிப்பா அவன் உதவுவான்" என்றான்.

"அட! ஆமாம். இவ்வளவு நேரம் அவனை நினைக்கவேயில்லையே! இதோ" என்று மரத்தின் வேர்மீது இருந்து இறங்கி, சரளை கற்கள் பரவிக்கிடந்த மண் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து, கண்களை மூடிக்கொண்டு, சத்தமாக வாய்விட்டுப் பாம்பன் சுவாமிகள் இயற்றிய ஷண்முக கவசத்தை, 'அண்டமாகி, அவனியாகி அரியானா பொருள் ஆகி' என்று வாய்விட்டு, மனது உருகி, சத்தமாகப் பாட ஆரம்பித்தாள் மாலதி.

யாரும் இல்லாத அந்த வனாந்தரத்தில், மரங்களுக்கு இடையே அந்த உச்சி வெயில் நேரத்தில், கணீர் என்று மாலதி பாடியதைக் கேட்க ராஜனுக்கே உடம்பு சிலிர்த்தது. அவனும் இரு கைகளையும் கூப்பி, மனதிற்குள், 'முருகா! எங்களுக்கு வழிகாட்டு' என்று வேண்டினான்.

நான்கு, நான்கு வரிகள் கொண்ட 30 பாடல்களையும் மாலதி பாடப் பாட அவள் தலையில் இருந்தும் நெற்றிலிருந்தும் வேர்வை ஆராய்ப் பெருகி வழிந்தது. ஏதோ ஆட்கொண்டது போல அவள் தொடர்ந்து சத்தமாகப் பாடினாள்.

பாடி முடித்ததும் உடைந்து அழுதாள். ராஜனுக்கும் தாங்கவில்லை. அவனும் அவளைக் கட்டிக் கொண்டான். அவன் குரலும் உடைந்து, அவனுக்கும் அழுகை வந்தது.

அப்போது தூரத்தில் சைக்கிள் மணி சத்தம் கேட்பது போல இருந்தது. இருவரும் அதிர்ந்து போய்ச் சுற்றிப் பார்த்தார்கள். 20 அடி தூரத்தில் ஒரு பழைய சைக்கிள் மேல் அமர்ந்திருந்த ஒல்லியான இளைஞன் ஒருவன் தென்பட்டான்.

ஒரே பாய்ச்சலில் ராஜன் அவன் அருகே போய், ஆங்கிலத்தில் வெளியே போவதற்kகு வழி கேட்டான். அவன், "என் பின்னால் வாருங்கள்" என்று துண்டு துண்டான ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு, சைக்கிளில் ஏறிக்கொண்டு, அதை மிதிக்க ஆரம்பித்து விட்டான்.

"இருப்பா... இருப்பா... நாங்களும் வருகிறோம்" என்று மாலதியை இழுத்துக் கொண்டு அவன் பின்னால் ஓடினான் ராஜன்.

அவன் போவது அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. இருவரும் வேகமாக ஓடினார்கள். சைக்கிளில் போனபடியே அவன் இடது பக்கம் கையைக் காட்டினான். காடிவிட்டு அவன் நேராகப் போய்விட்டான்.

அவன் கைகாட்டிய இடத்திற்கு அவர்கள் வந்ததும், அவன் சொன்னது போலவே இடது பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். என்ன ஆச்சர்யம்! நூறடி தூரத்தில் காலையில் அவர்கள் இந்த இடத்திற்குள் நுழைய டிக்கெட் கொடுத்த அதே நீல நிற ஷெட்.

இருவர் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர். ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டார்கள். அந்த இளைஞன் சைக்கிளில் போன பாதையைப் பார்த்தார்கள். யாரையும் காணோம்.

"ஏங்க.. அவன் யாருங்க? இங்க வேலை செய்கிறானா?" என்று ராஜனை மாலதி கேட்டாள்.

"அதெல்லாம் பேச எங்க நேரம் இருந்தது! அவன் சட்டையில் என்னமோ எழுதி இருந்தது. அதுமட்டும் ஞாபகம் இருக்கு" என்று சொல்லிவிட்டு யோசித்தான். பிறகு,

"ஆங்கிலத்தில் எம்யூ ஜி ஓ என்று எழுதி இருந்தது. அது, அவன் பெயரா என்று தெரியவில்லை. வாசித்தால் முகோ என்று வருகிறது" என்றான் ராஜன்.

"என்னது முருகனா?" என்றாள், மாலதி கைக்கூப்பியபடி.

"ஆமாம். வேறு யாராக இருக்க முடியும்?" என்றான் ராஜன்.

அவன் குரலில் அவ்வளவு உறுதி.

சோம வள்ளியப்பன் <writersomavalliappan@gmail.com>



ஆண்டாளுடன் ஓர் உரையாடல்

● நா. விச்வநாதன்

கூடாரை வெல்லும்
சீர் கோவிந்தா
என்று அரற்றுவாள்
ஆண்டாள் நாச்சி.
மண்டையைக் குழப்பும்
மார்கழிக் காற்றில்
பெருமாள் கோபுர
உச்சியிலிருந்து
விரிந்த பொம்மை
விழுந்து சிதற
கரபுரவென்று
பாடுகிறாள்.

எனக்கு எப்போதும்
பிடித்தம்தான்.

சிக்கலற்ற என்
வாழ்வாதாரத்திற்கு
அவள்காரணம்
என்ற நம்பிக்கை.

சிற்றஞ்சிறுகாலே
என்னும்போது
உடல்புல்லரிக்கும்
பனிவாசத்தோடு.

வீட்டின் முதல்
செம்பருத்திப் பூவில்
அவள்முகம் புலப்படும்

அடியார்க்கில்லை
அவளது பிம்பம்
திருவில்லிப்புத்தூர்
கொண்டையணியோடு.

மக்கள் ஏதேதோ
வழிபாடுகள் செய்து
விரட்டியபோது
அவள் ஆலயம்வராமல்
ககனமார்க்கமாகவே
அலைந்தாள்.

கண்ணனைக்
கண்டுபிடிக்கக்
காதம்போனாலும்
பயனில்லை.
நாச்சியாரின்
விரகச்சூடு
நிரந்தரம்தான்
கோயிலைவிட்டு
வெளியேறும் வரை. ●

நா. விச்வநாதன் <viswanathannaa@gmail.com>

Posted at patrika channel egmore (Posted between 28-31st of Every month)
Date of Publications : 25th of every month Reg.No.TN/TBM/150/2024-2026. ISSN Number 2456-3447 Dated: 04/10/2016.
R.DisNo. 2010/2002 RNI. TNTAM/2006/17955 Licenced to Post without Prepayment No: TN/PMG(CCR)/WPP 722/2024-2026.